


















29ம் ஆண்டில்...
29 years of publishing

www.uthayannews.ca

# UTHAYAN உதயன்

தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada

$1.00 · 416-752-1524 · www.uthayannews.ca · Canadian Media Circulation Audit

உதயம் 1520 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday May 23, 2025

## இலங்கையின் சுகாதாரக் கட்டமைப்பில் உடனடியாக கண் சுகாதாரம் தொடர்பான மூலோபாயத் திட்டமொன்றினை உருவாக்குவது அவசியமானது

### யாழ்ப்பாணத்தின் கண் சத்திரசிகிச்சைத்துறையின் விசேட வைத்திய நிபுணர் ஆ. மலரவன் ஜனாதிபதிக்கு எழுதிய அவசரக்கடிதத்தில் வலியுறுத்துகிறார்



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சிரேஸ்ட கண் சத்திரசிகிச்சை விசேட வைத்திய நிபுணரும், வடமாகாணம் முழுவதும் காத்திருத்தல் நேரத்தினை பூச்சியமாக்கி கண் வெண்புரை சத்திரசிகிச்சை உள்ளிட்ட ஏனைய கண் தொடர்பான பிரச்சனைகளுக்கு சிகிச்சைகளை உடனுக்குடன் வழங்கும் செயற்றிடத்தினை வெற்றிகரமாக முன்னகர்த்திகச் சென்று தேசிய ரீதியில் பாராட்டுதல்களினை பெற்றவருமான விசேட வைத்திய நிபுணர் ஆ. மலரவன் இலங்கை ஜனாதிபதிக்கு அவசர கடிதமொன்றினை அனுப்பிவைத்துள்ளார். இவரது மருத்துவ சேவையையும் நோயாளர்கள் மீது காட்டும் இரக்கமும் அன்பும் தமிழ் மக்கள் மாத்திரமல்ல அவரிடம் சிகிச்சை பெற்ற சிங்கள மொழி பேசும் தென்னிலங்கை நோயாளிகளும் பாராட்டி மகிழ்வதை அனைவரும் பேசிக் கொள்வதுண்டு.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

## வெகு விமர்சையாக நடைபெற்ற ரொறன்ரோ "சக்தி நர்த்தனாலயா நுண்கலைக் கூட" த்தின் "நாட்டிய மாலிகா" பரதநாட்டிய விழா

கடந்த சனிக்கிழமையன்று 17ம் திகதி விற்பி நகரில் நடைபெற்ற “சக்தி நர்த்தனாலயா நுண்கலைக் கூடத்தின் “நாட்டிய மாலிகா“ பரதநாட்டிய விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

குறிப்பாக அன்று மேடையேறிய “யாழ்ப்பாண நூலக எரிப்பும் அழிப்பும்“ என்ற நாட்டியத்தில் அனைத்து மாணவிகளும் குரு ஸ்ரீமதி ஜனனி ரவிசங்கரும் பங்கெடுத்தனர்.

விழாவின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை அழகிய முறையில் தமிழிலும் ஆங்கிலத்திலும் வஞ்சித்தா சுஜன்தன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

(தொடர்ச்சி 16ம் பக்கம்)











நாட்டுப்பற்றாளர் **திரு. மதிசூடி** நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான
**ஈழநாடு** பத்திரிகையின்

# 32 வது ஆண்டு விழா

கலைமாமணி டாக்டர்

## நித்யஸ்ரீ மகாதேவன்

வழங்கும்

## சங்கீத சங்கமம் 2025



ஈழத் தமிழினத்தின்
செஞ்சொற்செல்வர்

## ஆறு திருமுருகன்

அவர்கள் வழங்கும் சிறப்புரை

## வேர்களைத் தேடுங்கள்



இந்நிகழ்வு மூலம் சேகரிக்கப்படும் நிதி **கனடா தமிழ் சமூக மையத்திற்கும்** ஈழத்தின் அறப்பணியாளர் - செஞ்சொற்செல்வர் **ஆறு திருமுருகனது சமூகப் பணிக்கும்** ஈழநாடு வாசகர்கள் சார்பில் வழங்கப்படும்.

**அன்பளிப்பு** VIP | $100 | $50

*என் இனிய உறவுகளே! ஓர் உயர்வான நோக்கத்திற்காகவும் - கனடிய மண்ணில் எமது அடையாளத்துக்காகவும் தாயக மண்ணில் எமது இருப்பை உறுதி செய்யவும் நடாத்தப்படும் இந்நிகழ்வு தொடர்பான இத்தகவலை உங்கள் முகநூல் மூலமாகவும் தனிப்பட்ட முறையிலும் உங்கள் நண்பர்களுக்கும் பகிர்ந்து உங்கள் ஆதரவை வழங்குங்கள்.*

SUNDAY
JUNE 01
2025
@5:30PM

METROPOLITAN CENTRE
3840 FINCH AVE EAST
SCRBOROUGH ( FINCH/ KENNEDY)

தொடர்புகளுக்கு
ஈழநாடு
பரமேஸ்
416-841-9600
eelanadu1993@gmail.com

**விழா 5.30 மணிக்கு ஆரம்பமாகும். 10.30 மணிக்கு நிறைவு பெறும். நேரடி ஒளி, ஒலி பரப்புக் கிடையாது.**

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

உதயன் கதிரோட்டம்

# கனடியப் பாராளுமன்றத்தின் அதிகாரக் கதிரைகளில் அமரவுள்ள இரண்டு தமிழ் பேசும் தமிழ் வெற்றியாளர்கள்

கனடாவின் 45வது பாராளுமன்றத் தொடர் எதிர்வரும் மே 26ம் திகதி ஒட்டாவா மாநகரில் ஆரம்பமாகவுள்ளது. மேற்படி அமர்வில் கலந்து கொண்டு உரையாற்றுவதற்காக இங்கிலாந்தின் மன்னர் சார்ள்ஸ் அவர்களும் ராணி கெமிலா அவர்களும் தம்பதிகளாக வருகை தரவுள்ளார்கள். இவர்களது வருகையினால் அமரப் போகின்ற 45வது பாராளுமன்றம் சிறப்பைப் பெறப்போகின்றது என்றால், அது மிகைச் சொல் அல்ல.

இதைப் போன்றே, கனடா வாழ் தமிழ் மக்களுக்கு மாத்திரமன்றி, உலகெங்கும் வாழும் தமிழ் பேசும் மக்கள் பெருமையும் பெருமிதமும் கொள்ளுமளவிற்கு இன்னொரு சிறப்பையும் கனடாவின் 45வது பாராளுமன்றம் எமக்குத் தரவுள்ளது. கனடிய அரசியல் வரலாற்றில் முதற் தடவையாக தமிழ் பேசும் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் அந்த உயர் அவையில் எழுந்த நின்ற வண்ணம் “நாம் தமிழர்கள்“ என்று உரத்துக் குரல் எழுப்பவுள்ளார்கள்.

இவர்களில் ஒருவர் கடந்த 44வது பாராளுமன்றத்திற்கு மூன்றாவது தடவையாக தேர்ந்தெடுக்கப்பெற்று அதன் அமைச்சரவையில் பல அமைச்சுப் பதவிகளைப் பெற்றவராகவும் இறுதிநாட்களில் கனடாவின் நீதி அமைச்சராகவும் சட்டமா அதிபராகவும் பதவி வகித்து உலகெங்குமிருந்து பாராட்டுக்களைப் பெற்றவர். மாண்புமிகு ஹரி ஆனந்தசங்கரி என்னும் அவர் இந்த 45வது பாராளுமன்றத்தின் அமைச்சரவையில் உள்நாட்டுப் பாதுகாப்பு அமைச்சராக பணியாற்றும் வகையில் அண்மையில் பதவியேற்றவர்.

அடுத்தவர், அரசியலுக்கு புதியவராக இல்லாவிட்டாலும், கனடாவின் பாராளுமன்ற அரசியலுக்குப் புதியவர். முன்னர் யோர்க் பிராந்தியக் கல்விச் சபையின் அங்கத்தவராகவும் பின்னர் மார்க்கம் நகரசபையின் 7ம் வட்டார அங்கத்தவராகவும் சேவைசெய்தவர். அத்துடன் கடந்த காலங்களில் இளையோர் மற்றும் முதியோர் நலன் பேணும் பணிகளில் ஆலோசகராகவும் பணியாற்றியவர்.

எனவே இரண்டு தமிழ்பேசும் பாராளுமன்ற உறுப்பினர்களை ஒரே நேரத்தில் தந்த பாராளுமன்றமாக கனடாவின் 45வது பாராளுமன்ற திகழப்போகின்றது என்ற பெருமையோடும் மகிழ்ச்சியோடும் இருவரையும் வரவேற்றும் பாராளுமன்றக் கதிரைகளில் அமரவைப்போமாக!









இலங்கை செய்திகள்
Sri Lanka News

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பொன்விழா நிகழ்வினை பாரிஸ் நகரில், கொண்டாடுவதற்கான ஒழுங்குகளை முன்னெடுக்கும் ஐரோப்பா வாழ் பட்டதாரிகள்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பொன்விழா நிகழ்வினை பரிஸ் நகரில், கொண்டாடுவதற்கான ஒழுங்குகள் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. எதிர்வரும் யூன் மாதம் எட்டாம் திகதி, பரிஸ் இன் புறநகர் பகுதியான Villeneuve Saint - Georges எனும் இடத்தில் உள்ள Espace Shine மண்டபத்தில் இந்த நிகழ்வு நடைபெறுகிறது.

ஈழத் தமிழரின் கல்வி வளத்தின் அதி உயர் நிலையமான யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது பல முற்போக்கான அறிஞர்களின் விடாமுயற்சியினால் 1974 ஆம் ஆண்டு ஐப்பசித் திங்களில் ஆரம்பிக்கப்பட்டு, இன்று ஐம்பது ஆண்டுகளைக் கடந்து நிற்கிறது. இச் சிறப்பான நிகழ்வைப் புலம்பெயர் தேசங்களிலும், குறிப்பாக அவுஸ்திரேலியா, கனடா, ஐக்கிய இராச்சியம் போன்ற நாடுகளிலும் விமர்சையாகக் கொண்டாடப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் எதிர் வரும் ஆனித் திங்கள் எட்டாம் நாள் கொண்டாடுவதற்கு முயற்சிகள் நடைபெறுகின்றன.

இப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட வேளை இரு பீடங்களை மட்டுமே கொண்ட ஒரு வளாகமாகவே இருந்து, இன்று பதின்மூன்றுக்கும் மேலான பீடங்களைக் கொண்டு நாட்டின் முன்னணியில் உள்ள முழுமையான பல்கலைக்கழகங்களில் ஒன்றாக மிளிர்கிறது. திருநெல்வேலியில் மையம் கொண்டு மருதனார்மடம், கைதடி, கிளிநொச்சியாகக் கிளைத்து, பரந்து நீண்டு இருக்கிறது. இதன் இன்னொரு கிளையாயிருந்த வவுனியா வளாகம் இன்று தனிப் பல்கலைக்கழகமாக வளர்ந்திருக்கின்றமையும் இதற்கான சிறப்பாகக் கொள்ள முடியும். முப்பதாண்டு கால கொடும் யுத்தத்துக்கும் முகம் கொடுத்து, அதன் பலமான அடித்தளம், நம்மவரின் சலிப்பின்றிய கடின உழைப்பு ஆகியவற்றால் தொடர்ந்து வளர்ந்தபடி நிமிர்ந்து நிற்கிறது.

உயர் கல்வி நிமித்தமும் போரின் தாக்கத்தாலும் இப் பல்கலைகழக பட்டதாரிகள் உலகெங்கும் இடம்பெயர்ந்து அந் நாடுகளில் திறமைமிக்க கல்விமான்களாக, அந் நாடுகளின் முன்னேற்றத்துக்கு துணை நிற்பது, நம் பல்கலைக்கழக கல்வித் தரத்தைப் பறைசாற்றுகிறது. உலகத் தரம் வாய்ந்த ஆய்வுகளை நிகழ்த்தக் கூடிய ஆய்வாளர்களைப் புலத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் தொடர்ந்து உருவாக்கிய வண்ணமிருக்கிறது. சொல்லொணா துயர்களைக் கடந்த நம் மக்களுக்கும் மட்டுமின்றி நம் பல்கலைக் கழகத்துக்கும் நேரடியாகவோ மறைமுகமாகவோ புலம் பெயர் சமூகம் ஒரு வளாகமாக இருப்பது கண்கூடு.

சாதாரண பல்கலைக்கழகங்கள் போலன்றி யாழ் பல்கலைக்கழகமானது தாங்கொணா பேரிடர் களுக்கு முகம் கொடுத்தபடி எம்மவரைத் தாங்கி நிற்கின்றது. அதன் ஐம்பதாண்டு கால இருப்பென்பது பல நூற்றாண்டுகள் கடந்த பயணத்துக்கு இணையாகும்.

யாழ் பல்கலைக்கழகத்தினதும், வடக்கு கிழக்கு பிரதேச வளர்ச்சிக்கும் பல முயற்சிகளை செய்து வரும் டுஐகுவு ஆய்வு அறக்கட்டளை அமைப்பின் அனுசரணையுடன், பிரான்ஸ் இல் வாழும் யாழ் பல்கலைக்கழக பழைய மாணவர்கள் இந்த நிகழ்வை ஒழுங்கு செய்து உள்ளார்கள். எமது கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் இசை, நடன நிகழ்ச்சிகள், இராமநாதன் நுண்கலை பீடத்தின் பழைய மாணவர்களால் ஒழுங்கு படுத்தப்படுகின்றன. ஐரோப்பாவின் பல்வேறு நகரங்களிலும் பரந்து பட்டு வாழும், பல பீடங்களையும் சார்ந்த பழைய மாணவர் ஒன்று கூடும் ஒரு வரலாற்று நிகழ்வாக, இந்த பொன் விழா இருக்கும் என, ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிகழ்வு பற்றிய தகவல்களை அறிந்து கொள்ள +33 7 53 50 93 96 என்ற இலக்கத்துடன் WhatsApp மூலமாக அல்லது uojfrance@gmail.com என்ற முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாக தொடர்பு கொள்ளலாம்.

# யாழ்ப்பாணத்தில் நகையை தொலைத்தவரைத் தேடி நகையைக் கையளித்த நகைக்கடை உரிமையாளர்!



யாழ்ப்பாணத்தில் நகைக்கடை உரிமையாளர் ஒருவர், 23 பவுண் நகையை தொலைத்த பெண்ணை தேடி கண்டுபிடித்து, அந்த நகையை அவரிடமே கொடுத்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், பேருந்தில் பயணித்த பெண் ஒரு கடந்த 09.04.2025 அன்று தனது நகையை தவறவிட்டுள்ளார். இந்நிலையில் இது குறித்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

பின்னர் குறித்த நகையை கண்டெடுத்தவர் அதனை ஒரு நகை கடையில் கொடுத்து வேறு நகை செய்வதற்கு முயற்சித்துள்ளார். இதன்போது நடந்த சம்பவத்தையும் நகைக்கடை உரிமையாளரிடம் கூறியுள்ளார்.

இதன்போது நகைக்கடை உரிமையாளர் இது தவறு என அவருக்கு எடுத்துக்கூறிய பின்னர், நகை காணாமல் போனதாக ஏதாவது பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டதா என தேடுதலில் ஈடுபட்டனர். அந்தவகையில் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டமை தெரியவந்தது.

இந்நிலையில் நகையை தொலைத்த பெண்ணை அழைத்த நகைக்கடை உரிமையாளர், மதகுரு ஒருவருக்கு முன்னால் வைத்து அந்த நகையை நேற்றையதினம் கையளித்துள்ளார்.

நகையை தொலைத்த பெண்ணிடமே மீண்டும் நகையை வழங்கிய சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த குறித்த நகைக்கடை உரிமையாளரை பலரும் பாராட்டி வருகின்றனர்.

# யாழ்ப்பாணத்தில் திடீரென உயிரிழந்த இளைஞனின் மரணத்தில் சந்தேகம்!

18-05-2025 அன்றையதினம் யாழ்ப்பாணத்தில் இளைஞர் ஒருவர் திடீரென மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார். வண்ணார்பண்ணை, கே.கே.எஸ் வீதியடியைச் சேர்ந்த பாலச்சந்திரன் சசிராஜ் (வயது 29) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த இளைஞனின் தாய், தந்தை மற்றும் சகோதரர்கள் கடந்த 16ஆம் திகதி மட்டக்களப்புக்கு சென்றிருந்தனர். இந்நிலையில் குறித்த இளைஞனும் அவரது அண்ணாவும் மட்டுமே வீட்டில் இருந்தனர்.

பின்னர் ஒரு நாள் இரவு அவர்களது நண்பர்களை வீட்டுக்கு வரவழைத்து மதுபானம் அருந்தியுள்ளனர். அதன்பின்னர் நண்பர்கள் திரும்பிச் சென்றவேளை சகோதரர்கள் இருவரும் உறக்கத்துக்கு சென்றனர்.

பின்னர் குறித்த இளைஞனின் சகோதரன் அதிகாலை 1.30 மணியளவில் குறித்த இளைஞனை காணாத நிலையில் வெளியே வந்து பார்த்துள்ளார். இதன்போது குறித்த இளைஞன் கீழே விழுந்து காணப்பட்டார். பின்னர் சகோதரனும் உறவினரும் இணைந்து, அவசர நோயாளர் காவு வண்டி மூலம், அவரை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்ப்பித்தனர். இந்நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். மரணத்துக்கான காரணிகள் அறியப்படாத நிலையில் உடற்கூற்று பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.



# 30 – வருட யுத்தத்தின் மூல காரணங்களுக்கு தீர்வு தேட முயலாமல் வெற்றி கொண்டாட்டமா?

## மனோ கணேசன் எம்பி கேள்வி

தமிழ் முற்போக்கு கூட்டணி - இலங்கை
දමිළ ප්‍රගතිශීලී සංධානය - ශ්‍රී ලංකාව
Tamil Progressive Alliance - SriLanka

இலங்கையின் அனைத்து மக்களும் இறந்த தம் அனைத்து உறவுகளையும் ஒன்றாக ஒரே நேரத்தில் இலங்கையர்களாக நினைவு கூறும் ஒரு எதிர்காலத்தை நோக்கி நம் நாடு பயணிக்க வேண்டும். தெற்கில், வடக்கில் நிகழ்ந்த அரச மற்றும் அரசற்ற பயங்கரவாத நிகழ்வுகளுக்கு எதிரான வெற்றி கொண்டாட்டங்களையும் கூட கொண்டாடலாம். ஆனால், இந்த இலக்கை அடைய இலங்கை நாடு, முப்பது வருட காலம் யுத்தம் நிகழ்ந்தமைகான மூல காரணங்களை தேடி அறிந்து அவற்றுக்கு தீர்வு தேட வேண்டும். மகிந்த ராஜபக்ச, ரணில் விக்கிரமசிங்க, அனுர திசாநாயக்க, சஜித் பிரேமதாச என்ற எவராக இருந்தாலும், தீர்வுகள் தேடா விட்டால், நாம் நின்ற அதே இடத்திலேயே நிற்போம். இதுதான் உண்மை என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் தனது எக்ஸ் தளத்தில் மனோ கணேசன் எம்பி விடுத்துள்ள விசேட பதிவில் தெரிவித்துள்ளதாவது:

இலங்கை சமூகத்தில் சமூகத்தில் மரணித்து போன உறவுகள், இன்று முள்ளிவாய்க்காலிலும், தெற்கிலும் நினைவு கூர படுகிறார்கள். தெற்கில் இராணுவ வெற்றி விழா நடத்த படுகிறது. நினைவு கூரலும், வெற்றி விழாவும் ஒருசேர நடத்தலாம். அந்த நாள் வர வேண்டும். ஆனால் அந்த இலக்கை, முப்பது வருட காலம் யுத்தம் நிகழ்ந்தமைகான மூல காரணங்களை தேடி அறிந்து அவற்றுக்கு தீர்வு தேடாமல் அடைய முடியாது.

1948ம் வருட குடியுரிமை-வாக்குரிமை பறிப்பு சட்டங்கள், சிங்களம் மட்டும் சட்டம், பண்டா-செல்வா மற்றும் டட்லி-செல்வா ஒப்பந்தங்கள் மற்றும் சந்திரிக்காவின் 2000ம் வருட தீர்வு திட்டம் ஆகியவை அகௌரவமான முறைகளில் உதாசீன படுத்த பட்டமை, 13ம் திருத்தம் முழுமையாக அமுல் செய்ய படாமை, பல இனங்கள், மதங்கள், மொழிகள் கொண்ட இலங்கையின் பன்முக தன்மை அங்கீகரிக்க படாமை, கற்றுகொண்ட பாடங்கள் ஆணைக்குழுவின் (LLRC) சிபாரிசுகள் அமுல் செய்ய படாமை, யுத்தத்தின் பின் மகிந்த-பான்கி-மூன் வெளியிட்ட கூட்டறிக்கை அலட்சிய படுத்த பட்டமை, ஆகிய தவறுகளை திருத்தி முன் நகர முடியாவிட்டால் எமது நாட்டின் தேசிய பயணம் நின்ற அதே இடத்திலேயே நிற்கும்.




இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இருநாணய நெறிமுறை ஊடாக இலங்கை தமிழர்களைப் புறக்கணிக்கும் இந்தியாவின் ஓரவஞ்சனை

உலகம் முழுவதும் இந்தியா ஒரு பெரிய ஜனநாயக நாடாகவும், பல்வேறு பகுதிகளில் இருந்து அழிவுகளைத் தாண்டி வந்த அகதிகளுக்கு தஞ்சமாக அமைந்த நாடாகவும் பார்க்கப்படுகிறது. ஆனால் இந்த உருவகத்தின் பின்வட்டத்தில் தீவிரமான பாகுபாடு மற்றும் அரசியல் நோக்கங்களால் அழுத்தப்பட்ட உண்மைகள் புலப்படுகின்றன. தீபத்தையரும் பங்களாதேஷ் அகதிகளும் குடியுரிமையுடன் வாழ்ந்து வருகின்றனர் ஆனால் இலங்கை தமிழர்கள் மட்டும் கடந்த நாற்பதாண்டுகளுக்கும் மேலாக அகதி முகாம்களில் அடக்கிப் பிடிக்கப்பட்டு, எந்தவிதமான குடியுரிமையும் இழைக்கப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்து வருகின்றனர்.

### பங்களாதேஷ் மற்றும் தீபத்தையருக்கு இந்திய குடியுரிமை - தரவுகள்

பங்களாதேஷ் அகதிகள்:

1971-இல் பங்களாதேஷ் விடுதலைப் போருக்குப் பின்னர், சுமார் 1 கோடி பேர் இந்தியாவில் புகலிடம் தேடினர். இவர்களில் பலர் திரும்பினாலும், சுமார் 30 லட்சம் முதல் 50 லட்சம் வரை இந்தியாவில் நிரந்தரமாகத் தங்கி விட்டனர்.

இந்திய அரசு இவர்கள் பலருக்குக் குடியுரிமையும், குடியுரிமைச் சான்றிதழ்களும் வழங்கியுள்ளது.

தீபத்தையர் அகதிகள்:

1959-இல் சீன ஆக்கிரமிப்பிற்கு பின் தலாய் லாமா தலைமையில் ஆயிரக்கணக்கான தீபத்தையர்கள் இந்தியாவில் புகலிடம் பெற்றனர். இன்று இந்தியாவில் 1.2 லட்சம் தீபத்தையர்கள் வசிக்கின்றனர். இவர்களுக்கு அடையாள அட்டைகள், கல்வி, வேலை வாய்ப்பு, சிலருக்கு குடியுரிமை உள்ளிட்ட பல வசதிகள் வழங்கப்பட்டுள்ளன.

### இலங்கை தமிழர்கள் - எண்ணிக்கை மற்றும் நிலைமை

மொத்த இலங்கை அகதிகள்:

தற்போதைய தரவுகள் படி, தமிழகத்தின் அகதி முகாம்களில் சுமார் 60,000 இலங்கை தமிழர்கள் வசிக்கின்றனர். முகாமிற்கு வெளியே மேலும் 34,000 பேர் வாழ்கின்றனர்.

இவர்களில் பெரும்பாலானோர் 1983-இல் இலங்கையில் நடந்த தமிழர் படுகொலைகளுக்குப் பின்னர் இந்தியா வந்தவர்கள்.

குடியுரிமை நிலைமை:

இலங்கை அகதிகளில் மிகச் சிலருக்கே இந்திய குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. பெரும்பாலானோர் "தன்னிச்சையாக" இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டதாக கூறப்படுகிறது.

தமிழக அரசுகள் பலமுறை இவர்களுக்கு நிரந்தரத் தீர்வு வழங்க வேண்டும் என மத்திய அரசிடம் கோரிக்கை விடுத்தும், இந்திய அரசு திட்டவட்டமாக அவமதித்தே வந்துள்ளது.

### அரசியல் நோக்கமுள்ள பாகுபாடு - திட்டமிட்ட மையநிலை

குடியுரிமை திருத்தச் சட்டம் (CAA, 2019):

இந்தச் சட்டம் மூலம் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் இருந்து வந்த இஸ்லாமியரல்லாத அகதிகளுக்கு குடியுரிமை வழங்கப்படுகிறது (ஹிந்து, சிக்கு, புத்த, ஜைன், பார்சி, கிறித்தவர்கள்).

ஆனால் இதில் இலங்கை தமிழர்கள் நீக்கப்பட்டுள்ளனர் - இது ஒரு திட்டமிட்ட பாகுபாடாகவே கருதப்படுகிறது.

இலங்கை அரசுடன் உறவைப் பாதுகாப்பதற்காக:

இலங்கையின் தமிழீழப் போராட்டத்துக்கு எதிராக, தென்னிந்தியாவில் உள்ள தமிழ்த் தேசிய உணர்வுகளையும் அடக்க இந்திய அரசு இலங்கை அரசுடன் நட்புறவை முன்னிலைப் படுத்தி செயல்பட்டது. இது தமிழர் எதிர்ப்பு அரசியலின் ஒரு தொடர்ச்சி.

### அகதி முகாம்களில் வாழ்க்கை - மனித உரிமை மீறல்

அகதி முகாம்களில் வாழும் தமிழர்களின் வாழ்க்கை துயரமானதாக உள்ளது - குறைந்த பரப்பளவு, சிறிய குடிசைகள், அடிக்கடி போலீஸ் கண்காணிப்பு போன்றவை.

இவர்களுக்கு சுதந்திரமாக வேலை செய்யவும், குடியேறவும், குடும்பங்களை நலமுடன் நடத்தவும் உரிமை இல்லை.

வாக்களிக்கும் உரிமை, சொத்துரிமை, அரசு வேலை வாய்ப்பு என அனைத்து உரிமைகளும் மறுக்கப்பட்ட நிலையில், ஒரு நாட்டின்றி, ஒரு அடையாளமின்றி உயிர்வாழ வேண்டிய கட்டாயத்தில் இவர்கள் உள்ளனர்.

இவ்வாறாக இந்திய அரசின் அகதி கொள்கைகள் இருநாணய அடிப்படையிலானவை என்பதை இலங்கை தமிழர்களின் நிலைமையே நிரூபிக்கிறது.

தீபத்தையரும் பங்களாதேீயர்களும் குடியுரிமை பெறும் போது, தமிழ் அகதிகள் நிரந்தரமாக மறுக்கப்படுகிறார்கள்.

இது இந்திய அரசின் தமிழர்த் துரோகம் எனவே விவரிக்கத்தக்கது.

இலங்கை தமிழர்கள் மேல் நீண்ட காலம் நிலவும் இந்த சட்டமற்ற, நிராகரிக்கப்பட்ட நிலைமை ஒரு மனித உரிமை நாசமாகும்.

தமிழக அரசும், மக்கள் மன்றங்களும் இது தொடர்பாக தங்கள் குரலை உயர் நம்பிக்கையுடன் எழுப்ப வேண்டும்.

இது ஒரு அகதி உரிமை பிரச்சனையைத் தாண்டி, தமிழ்த் தேசிய அரசியல் உரிமையின் ஒரு பகுதியாகவே கருதப்பட வேண்டும்.

**ஈழத்து நிலவன் (19-05-2025)**



# மன்னாரில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மகளிர் அமைப்பின் ஏற்பாட்டில் இடம் பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்



- எஸ்.ஆர்.லெம்பேட் (18-05-2025)

தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் மன்னார் மாவட்ட மகளிர் அமைப்பினரால் ஏற்பாடு செய்யப்பட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு, 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்றையதினம் காலை 10:30 மணியளவில் மன்னார் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மகளிரணித் தலைவி லூக் ஷோபனா அலெக்சாண்டர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் மன்னார் மாவட்ட பொறுப்பாளர் துரைராசா ஜோன்சன், மன்னார் கலையருவி இயக்குனர் அருட்பணி லக்ஷன் அடிகளார், அருட்பணி அருட்பிரகாசம் அடிகளார், செல்வ நகர் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் குருக்கள் பாபு சர்மா மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டு இறந்த உறவுகளுக்கு அஞ்சலி செலுத்தினர்.



# மன்னார் அச்சங்குளம் கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் கரை ஒதுங்கியது



- எஸ்.ஆர்.லெம்பேட் (18-05-2025)

மன்னார் - நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அச்சங்குளம் கடற்கரையில் உருக்குலைந்த நிலையில் ஆணின் சடலம் ஒன்று கரை ஒதுங்கியுள்ளது.

குறித்த சடலம் 17ம் திகதி சனிக்கிழமை இரவு அப்பகுதிக்கு மீன் பிடிக்கச் சென்ற மீனவர்களினால் கண்டுபிடிக்கப்பட்டது.

குறித்த ஆணின் சடலம் முற்றிலும் சிதைவடைந்துள்ள போதும் சிதைவடையாமல் காணப்படும் ஆடைகளை வைத்து குறித்த ஆண் 30 வயதுக்கு மேல் இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மீனவர்கள் அச்சங்குளம் கிராம சேவையாளருக்கு அறிவித்ததை தொடர்ந்து கிராம சேவையாளர் முருங்கன் பொலிஸார், அச்சங்குளம் கடற்படையினர் குறித்த உடலை பார்வையிட்டனர்.

சடலத்தை மீட்ட முருங்கன் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# மன்னாரில் முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு நாள் நினைவு கூறல்



- எஸ்.ஆர்.லெம்பேட் (18-05-2025)

தமிழினப் படுகொலையின் (மே-18) 16 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்றையதினம் வடக்கு கிழக்கு தமிழர் பிரதேசங்களில் நினைவு கூறப்பட்டு வரும் நிலையில் மன்னாரிலும் நினைவு கூறப்பட்டது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கம் ஏற்பாடு செய்த முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு நாள் 18ம் திகதி அன்றையதினம் நினைவு கூறப்பட்டது.

தமிழ் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வி.எஸ்.சிவகரன் தலைமையில் மன்னார் பஜார் பகுதியில் அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் குறித்த நினைவேந்தல் இடம் பெற்றது.

இதன் போது இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த உறவுகளை நினைவு கூர்ந்து பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனைத்தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி பகிரப்பட்டது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மன்னார் நகர சபையின் முன்னாள் தவிசாளர் ஞானப்பிரகாசம் அன்ரனி டேவிட்சன் உள்ளடங்களாக சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# மன்னார் பொது வைத்தியசாலைக்கு முன் ஏற்பாடு செய்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

- எஸ்.ஆர்.லெம்பேட் (18-05-2025)

மன்னாரில் தமிழீழ விடுதலை இயக்கம் ஏற்பாடு செய்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு 18ம் திகதி அன்று ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணியளவில் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன் இடம் பெற்றது.

தமிழீழ விடுதலை இயக்கம் கட்சியின் தலைமைக்குழு உறுப்பினர் ஏ.ரி.மோகன்ராஜ் தலைமையில் குறித்த நினைவேந்தல் நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது இறுதி யுத்தத்தின் போது முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த உறவுகளை நினைவு கூர்ந்து சுடர் ஏற்றப்பட்டு மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவு கஞ்சி பகிரப்பட்டது.

குறித்த நினைவேந்தல் நிகழ்வில் ரெலோ கட்சியின் மாவட்ட அமைப்பாளர் டானியல் வசந்தன், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பின் மன்னார் மாவட்ட இணைப்பாளர் எஸ்.ஆர்.குமரேஸ், ரெலோ கட்சியின் பிரதிநிதிகள், சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.



# தலைமன்னார் புனித லோறன்சியார் ஆலயத்தில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நினைவு தின நிகழ்வு

- எஸ்.ஆர்.லெம்பேட் (18-05-2025)

18-05-2025 அன்று தலைமன்னார் புனித லோறன்சியார் தேவாலய பிரதான வாயிலில் தலைமன்னார் பங்குத்தந்தை அருட்பணி. டெனி கலிஸ்டஸ் மற்றும் திருக்குடும்ப கன்னியர் சபையின் அருட்சகோதரிகள் தலைமையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு இடம் பெற்றது.

இந்த நிகழ்வின் முதல் நிகழ்வாக இறுதி யுத்தத்தில் இறந்து போன மக்களை நினைத்து பங்குத்தந்தை பங்கு மக்கள் முன்னிலையில் சுடர் ஏற்றினார்.



அதனைத் தொடர்ந்து மக்கள் ஆலயத்தை நோக்கி பேரணியாக சென்று அங்கு வைக்கப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவு பாதையின் முன்னிலையில் மரியாதை செலுத்தி மலர் கொத்துக்களை அங்கு வைத்த பின்னர் மெழுகுவர்த்திகளை ஏற்றி இறந்து போன தம் உறவுகளுக்காக அஞ்சலி செலுத்தினர்.

அதனைத் தொடர்ந்து வழிபாடு இடம்பெற்றது.

இவ்வழிபாட்டில் முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக வாசிக்கப்பட்டமையுடன், இறந்து போன காணாமல் ஆக்கப்பட்ட மக்களுக்காக மன்றாட்டுக்களும் இறைவனிடம் சமர்ப்பிக்கப்பட்டது.




தொடர்ந்து ஆலயத்தின் பிரதான வாயிலில் வைத்து முள்ளிவாய்க்கால் கஞ்சி மன்னார் மறைமாவட்டத்தின் குரு முதல்வர் அருட்பணி. கிறிஸ்து நேச ரட்ணம் அடிகளாரினால் ஆசீர்வதிக்கப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டது.

இந் நிகழ்வில் மறைமாவட்ட குருக்களும் கலந்து கொண்டமையுடன், நிகழ்வை கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய உறுப்பினர்கள் சிறப்பாக ஒழுங்குபடுத்தி இருந்தது குறிப்பிடத்தக்கது.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மகிந்தவுடன் சஜித் இணைந்து ஆட்சியமைப்பு சஜித் கட்சி தொடர்பா தமிழ் மக்கள் ஆழமாக யோசிக்க வேண்டும் என்கிறார் நா.உ.பொ. கஜேந்திரகுமார்

தமிழ் மக்கள் ஏற்க முடியாத மொட்டுக் கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனையுடன் சஜித் பிரேமதாசாவின் ஐக்கிய மக்கள் கட்சி இணைந்து உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதற்காக பேசுவார்தையில் ஈடுபட்டுள்ளனர் எனவே ஐக்கிய மக்கள் சக்தி தொடர்பா தமிழ் மக்கள் ஆழமாக யோசிக்க வேண்டும் அதேவேளை தெற்கில் இருக்க கூடிய சாதாரண மக்களின் விருப்பத்தை மீறுகின்ற துஸ்பிரயோகம் செய்யும் வகையில் தமிழ் கட்சிகள் உடந்தையாக இருக்க கூடாது என நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தலைவருமான பொ. கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

மட்டக்களப்பு வவுணதீவு நரிப்புதோட்டம் பிரதேசத்தில் மே 18 முள்ளிவாய்கால் இன அழிப்பு நினைவேந்தல் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி வவுணதீவு பிரதேச அமைப்பாளர் செல்வகுமார் தலைமையில் இடம்பெற்றது இதில் நா.உ. பொ.கஜேந்திரகுமார் மற்றும் கட்சி ஆதரவாள்கள் பொதுமக்கள் உட்பட நூற்றுக் கணக்கானோர் கலந்து கொண்டு பொதுச்சுடர் ஏற்றி மலர் தூவி உயிர் நீத்தவர்களுக்கு 2 நிமிட மௌன அஞ்சலி செலுத்தினர். இதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விசேடமாக உள்ளூராட்சி சபைகளில் கூட்டாக செயற்பட்டு ஆட்சி அமைப்பதற்காக எங்களுக்கு இதற்கு முதல் எதிரணில் இருந்து பேச்சுவார்த்தைகள் நடைபெற்றும் கூட தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கே தமிழ் தேசிய பேரவைக்கே அழைப்பிதழ் எதுவும் விடுவிக்கப்படவில்லை.

இதற்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்கவின் ஏற்பாட்டிலே பேச்சுவார்த்தை சுற்று நடைபெற்றது ஆனால் இரண்டாம் கட்டமாக ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனை கட்சிக்கும் இடையே பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

ரணில் விக்கிரமசிங்க பேச்சுவார்த்தைகளை நடாத்த நாங்கள் அது தவறு என கருத்தை தெரிவித்தோம் உண்மையில் இரண்டாவது கட்சியாக தெற்கிலே ஐக்கிய மக்கள் சக்திக்கு மக்கள் வாக்களித்துள்ளனர் அதனடிப்படையில் தேசிய மக்கள் சக்தி விரும்பி செய்திருக்கின்றதே தவிர வேறு ஒரு தரப்பு அதில் முந்துவது பொருத்தமில்லை என்பது எங்களது பார்வை.

எனவே தேசிய மக்கள் சக்தி ஸ்ரீலங்கா பொதுஜன பொரமுனை அழைத்திருப்பது எங்களுக்கு ஒரு பலத்த மாற்றம் ஏன் என்றால் தெற்கிலே ஒரு அறம் இல்லாத அரசியல் நடக்கின்றதா என்றவளவுக்கு கேள்வி கேட்க வேண்டியுள்ளது,







ரணில் விக்கிரமசிங்க மொட்டுக்கட்சியுடன் சேர்ந்து ஆட்சி அமைத்தபோது ஐக்கிய மக்கள் சத்தி, தேசிய மக்கள் சக்தி, எங்கள் போன்ற கட்சிகள் உறுதியா அதனை எதிர்த்தோம்.

அந்த வகையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனை கட்சிகள் நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை வைத்திருக்க அவ்வகையான பெரும்பான்மையை கொண்ட கட்சிகளுடன் தாங்கள் போய் ஜனாதிபதி பிரதமர் பதவியை ஏற்கமுடியாது என்ற வகையில் ஐக்கிய மக்கள் சக்தி அன்று பேசினார்கள்.

அவ்வாறு பேசியதற்கான பிரதான காரணம் அந்தளவுக்கு மொட்டு தரப்பு ஊழல் செய்தது மக்களால் வெறுக்கப்பட நிராகரிக்கப்பட வேண்டியவர்கள் அவர்களுக்கு எதிராக ஒழுக்க காற்று நடவடிக்கை பாயவேண்டும் என பேசியவர்கள் இன்று ஆட்சியமைப்பதற்காக அதே மொட்டுக்கட்சியுடன் பேச்சுவார்த்தை நடாத்துகிறது என்றால் எங்களை பொறுத்தவரையில் தெற்கில் இந்த மக்கள் இன்னும் விரத்தி நிலைக்கு தள்ளப்பட போகின்றனர்.

அதேவேளை தேசிய மக்கள் சக்திக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் இன்று அவர்களது வாக்கு வங்கியில் அரைவாசி 6 மாதத்தில் குறைந்துள்ளது எனவே அது தெற்கிலே இருக்க கூடய மக்களது விரத்தி தன்மையை.

எனவே அதற்கு மாற்றாக வளரக்கூடிய ஐக்கிய மக்கள் சக்தி எந்த விதமான அறவும் இல்லாமல் நடந்து கொள்ளும் வகையில் மொட்டுகட்சியை அழைத்து ஆட்சியமைக்க பேசுவது தென் இலங்கையில் இருக்க கூடிய மக்களது அரசியல் அபிலாசைகள் மிகப் பெரும் கேள்விகுறியாக மாறும்.

எனவே தமிழ் கட்சிகள் தெற்கில் இருக்க கூடிய சாதாரண மக்களின் விருப்பத்தை மீறுகின்ற வகையிலே அதனை துஸ்பிரயோகம் செய்யும் வகையில் நாங்கள் உடந்தையாக இருக்க கூடாது எங்களுக்கு ஒரு இனப்பிரச்சனை இருக்கு அது தீர்கப்படவேண்டும் அதற்கு தெற்கில் இருக்கின்ற சிங்கள மக்களின் ஆதரவு தேவை எனவே அவர்களுக்கு தேவைப்படுகின்ற விடையங்களில் அவர்களது நம்பிக்கையை இழக்கப்படும் வகையில் அவர்களுடைய விவகாரங்களில் தமிழ் மக்கள் நடந்து கொள்ள கூடாது.

எனவே ஐக்கிய மக்கள் சக்தி இப்படித்தான் நடந்து கொள்ளப் போகின்றது என்றால் தமிழ் மக்களுக்கும் ஐக்கிய மக்கள் சக்திக்கும் இடையேலான தொடர்பாடல் எதிர்காலத்தில் மிகவும் குறைவா இருக்கப் போகின்றது. எனவே கடந்த ஜனாதிபதி தேர்தலில் சஜித் பிறேமதாஸவுக்கு தமிழ் மக்கள் கனிசமான மக்கள் அவருக்கு வாக்களித்தனர் என்பதை தமிழ் மக்கள் மறக்க கூடாது.


# Thana Insurance Inc

T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker

THANA INSURANCE Inc.



Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road ,
unit D218,
Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

இலங்கை செய்திகள்
Sri Lanka News

பு. கஜிந்தன்

# யாழ்ப்பாணத்தில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கிய ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சி!




முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளான 18ம் திகதி ஞாயிறு அன்று பல்வேறு பகுதிகளில் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

அந்தவகையில் உரும்பிராயில் அமைக்கப்பட்டுள்ள பொன்.சிவகுமாரனின் திருவுருவச் சிலைக்கு அருகாமையில் ஈ.பி.ஆர்.எல்.எவ் கட்சியினராலும் முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் கட்சியின் உறுப்பினர்கள் இணைந்து இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சியினை வழங்கினர்.

மக்கள் உணர்வுபூர்வமாக இந்த முள்ளிவாய்க்கால் கஞ்சியை வாங்கி அருந்தியதை அவதானிக்க முடிந்தது.

# யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்!



முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வானது 18ம் திகதி அன்று யாழ்ப்பாண பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நினைவு தூபியில் இடம்பெற்றது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட நினைவேந்தலின் போது ஈகைச் சுடர் ஏற்றி மலர் தூவி இறுதி யுத்தத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதில் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள, ஊழியர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



# முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நினைவேந்தல்




முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வானது இன்றையதினம் மிகவும் உணர்வுபூர்வமாக முள்ளிவாய்க்கால் முற்றத்தில் நடைபெற்றது.




முதலில் முள்ளிவாய்க்கால் கொள்கை பிரகடனம் வாசிக்கப்பட்டது. பின்னர் அக வணக்கம் செலுத்தப்பட்டது. அதனை தொடர்ந்து காலை 10.31 மணியளவில் பொதுச் சுடரினை ஏற்றிவைக்க, முள்ளிவாய்க்கால் கீதங்கள் இசைக்க சமநேரத்தில் ஏனைய சுடர்கள் ஏற்றி வைக்கப்பட்டன.

உயிர்நீத்தவர்களின் உறவுகள் கதறியள, கண்ணீர் மழையில் முள்ளிவாய்க்கால் முற்றம் நனைந்தது.

# யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதம கணக்காளர் சிவரஞ்சன் அநுராதபுர மாவட்ட செயலகத்திற்கு இடமாற்றம்!







யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதம கணக்காளருக்கு பதவி உயர்வுடன்கூடிய இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அவர் பதவி உயர்வு பெற்று அநுராதபுர மாவட்ட செயலக பிரதம கணக்காளராக நியமனம் பெற்று செல்வதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் தங்கமுத்து சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

கடந்த 5 வருடங்களாக திரு.சிவரஞ்சன் சிறப்பாக கடமையாற்றி இந்த பதவி உயர்வை பெற்று செல்கின்றார் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் குறித்த பதவிக்கு வேறொருவர் நியமிக்கப்படுவார் என தெரிவிக்கப்படுகிறது.

# யாழ்ப்பாணம் மாநகர சபை முன்னாள் முதல்வர் சரோஜினி யோகேஸ்வரனின் 27 வது ஆண்டு நினைவேந்தல்!




யாழ்ப்பாண மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சரோஜினி யோகேஸ்வரனின் 27வது ஆண்டு நினைவு தினம் 17ம் திகதி அன்றையதினம் சனிக்கிழமை அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் ஆனந்தசங்கரி தலைமையில் யாழ்ப்பாணத்தில் உள்ள அக் கட்சியின் அலுவலகத்தில் அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது சுடரேற்றி, சரோஜினி யோகேஸ்வரனின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் வெற்றிவேலு. யோகேஸ்வரனின் மனைவியான சரோஜினி யாழ், மாநகர முதல்வராக இருந்த கால பகுதியில், கடந்த 1998 மே 17 ஆம் நாள் யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து இனம் தெரியாத நபர்களினால் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டார்.




# கிளிநொச்சி மாவட்ட பிரதேச சபைகளின் தவிசாளர் நியமன சர்ச்சை – சி.வி.கே சிவஞானம் அவசர விளக்கம்!

தமிழரசுக் கட்சியின் பதில் பொது செயலாளர் சுமந்திரன் தான். அவரே கட்சியின் இன்றைய கால அனைத்து செயற்பாடுகளுக்கும் கையொப்பமிடும் அதிகாரம் மிக்கவர். இதனை ஸ்ரீதரன் சிவஞானம் உணர்ந்து கொள்ளவேண்டும் என தமிழரசுக் கட்சியின் பிரதித் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மூன்று பிரதேச சபைகளின் தவிசாளர் உப தவிசாளர் நியமன சர்ச்சை தொடர்பில் 19.05.2025 திங்கட்கிழமை விளக்கமளித்துள்ளார்.

யாழ். ஊடக அமையத்தில் 19ம் திகதி அன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு கூறிய அவர் மேலும் கூறுகையில், தமிழரசுக் கட்சியின் செயலாளர் சுமந்திரன் தான். அவரே கட்சியின் இன்றைய கால அனைத்து செயற்பாடுகளுக்கும் கையொப்பமிடும் அதிகாரம் மிக்கவர்.

கட்சியின் மத்திய செயற் குழுவுக்கு அதிகாரம் இருக்கின்றது.

அதன் படி கட்சியில் வெற்றிடமாகும் பதவி நிலைகளுக்கு மத்திய செயற்குழு உறுப்பினர்களை நியமிக்கும்.

அதன்படியே இன்றைய பதவி நிலை நியமனங்கள் செய்யப்பட்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதை ஸ்ரீதரன் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இதனிடையே உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சி அமைப்பு தொடர்பில் பல கட்சிகளுடன் பேசியிருக்கின்றோம். அதற்கு தேசியத்தை நேசிக்கும் கட்சிகள் ஓரணியில் நின்று தேசியக் கட்சிக்கு இடங்கொடுக்காத வகையில் ஆட்சி அதிகாரத்தை தமிழ் தரப்பினர் கையகப்படுத்தும் வகையில் அமைவதற்கு பங்களிக்க வேண்டும் என்றும் அழைப்பு விடுகின்றேன்.

நான் ஆட்சி செய்வது தொடர்பில் தமிழ் தரப்பிலுள்ள கட்சிகளுடன் பேசியுள்ளேன். அதன்படி இன்று எமது தேசியப் பரப்பில் இருக்கும் கட்சித் தலைவர்களுக்கும் குறிப்பாக ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி, ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உள்ளிட்ட ஏனைய தரப்பினரது ஆதரவு கிடைக்கும் என்று நம்புகின்றேன்.

இதேவேளை ஏனையோர் கூறுவது போன்று எமது கட்சி எந்தவொரு ஒற்றுமை இணக்கபாட்டையும் குழப்பியது கிடையாது என்றும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் பாடசாலை ஒன்றில் பெண்களின் சுகாதார துவாய்க்கு விளம்பரம் செய்ய ஏற்பாடு செய்த பொலிஸ் அதிகாரி!

இலங்கை செய்திகள் Sri Lanka News

யாழ்ப்பாணம் - மருதனார்மடத்தில் உள்ள பிரபல பாடசாலை ஒன்றில், பெண்களின் சுகாதார துவாய்க்கு விளம்பரம் செய்யும் நோக்கில் யாழ்ப்பாணம் மாவட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகரால் நிகழ்வு ஒன்று ஏற்பாடு செய்து கொடுத்தமை சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், மாணவர்களுக்கான கருத்தரங்கு என கூறி கடந்த வியாழக்கிழமை 15ம் திகதி மருதனார்மடத்தில் உள்ள பிரபல பாடசாலையில் பெண் மாணவர்களை ஒழுங்குபடுத்துமாறு கூறியிருந்தார். இந்நிலையில் அந்த நிகழ்வுக்கு செல்லுமாறு சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கும் அறிவித்திருந்தார்.

அந்தவகையில் சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் ஆகியோர் அந்த நிகழ்வுக்கு சென்றிருந்தனர். அங்கே கிறிஸ்தவ மதகுரு என்றொருவர் தன்னை அடையாளப்படுத்திக்கொண்டு ஆண் ஒருவர் வந்து நிகழ்வை ஆரம்பித்தார்.

இதன்போது தனியார் நிறுவனம் ஒன்றின் தயாரிப்பிலான சுகாதார துவாயை காண்பித்து அதனை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்ற விளக்கத்தை அந்த மதகுரு வழங்கினார். ஆணொருவர் இவ்வாறு விளக்கம் கூறுவதால் அங்கிருந்த பெண் பிள்ளைகள் சங்கடத்துக்குள்ளாகினர். இதனை பார்த்து சங்கடத்துக்குள்ளான சுன்னாகம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியும், பொலிஸ் உத்தியோகத்தரும் அங்கிருந்து வெளியேறினர்.

பின்னர் அந்த நிகழ்வில் கலந்துகொண்ட பெண் பிள்ளைகள் அனைவருக்கும் ஒவ்வொரு பொதி வழங்கப்பட்டது. அதில் சுகாதார துவாயும், பெண் பிள்ளைகளின் உள்ளாடையும் இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

மாணவர்களுக்கான கருத்தரங்கு என பொய் கூறி யாழ்ப்பாணம் மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகரே இவ்வாறு தனியார் உற்பத்திகளுக்கு பாடசாலையில் விளம்பரத்துக்கான களம் அமைத்துக் கொடுத்தமையும், ஆணொருவர் பெண் பிள்ளைகளின் அந்தரங்க விடயம் தொடர்பாக விளக்கமளித்தமையும் தற்போது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

# ஆயிரக்கணக்கான தமிழ்ச் சிறார்களை போர் என்ற போர்வையில் அரசு இனப்படுகொலை செய்தது



## வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் நிரோஸ்

அரசாங்கம் நடத்திய மனிதாபிமானமற்ற போரில் ஆயிரக்கணக்கான சிறுவர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். அப் படுகொலைகள் அரசினாலேயே மேற்கொள்ளப்பட்டது என்பதற்கு சகல ஆதாரங்களும் உள்ள நிலையிலும் சிறுவர் விடயத்தில் ஏனும் பொறுப்புக்கூறவோ அல்லது நீதியை நிலைநாட்டவோ அரசு தயாரில்லை. கொல்லப்பட்டவர்கள் தமிழ்க் குழந்தைகள் என்பதால் அதுபற்றிய குறைந்தபட்ச விசாரணையைக்கூட மேற்கொள்ள தயாரில்லை. இது நன்கு திட்டமிட்ட இனப்படுகொலை என வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

வாதரவத்தை வீரவாணி சனசமூக நிலையத்தில் போரின்போது படுகொலைசெய்யப்பட்ட சிறார்களை விசேடமாக நினைவு கூர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வுசு 17ம் திகதி சனிக்கிழமை மாலை அனுஸ்டிக்கப்பட்டது. இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வடக்குக் கிழக்கில் போர் நடவடிக்கைகளில் ஆயிரக்கணக்கான சிறார்கள் வகைதொகையின்றி படுகொலை செய்யப்பட்டார்கள். அவ்வாறாகக் சந்தேகத்திற்கு இடமின்றி சிறார்கள் அரசினாலேயே கொல்லப்பட்டார்கள். குமுதினி படகில் இருந்த குழந்தைகள் கடற்படையால் வெட்டிக்கொலை செய்யப்பட்டது, நாகர்கோவில் உள்ளிட்ட பாடசாலைகள் மீது விமானக்குண்டுகளை வீசி மாணவர்களை படுகொலை செய்தமை, முள்ளிவாய்க்கால் பகுதியில் பாதுகாப்பு வலயம் என்று அரசே அறிவித்து விட்டு அப் பகுதிக்குள் இரசாயன கொத்துக்குண்டுகளை வீசி குழந்தைகளையும் சிறார்களையும் கொன்றமை என சிறுவர் படுகொலைகளை ஆதாரபூர்வமாக அடுக்கிச் செல்லலாம். யுத்தத்தின் பின்னும் குழந்தைகளுடனும் சிறுவர்களுடனும் சரணடைந்தவர்களின் கதி என்ன என்பதை அரசு வெளிப்படுத்தவில்லை.

இலங்கை அரசு சிறுவர்கள் தொடர்பான பல்வேறு சமவாயங்களில் உலகளவில் கைச்சாத்திட்டுள்ளது. பல சிறுவர் பாதுகாப்பு நிறுவன பொறி-முறைகளைக் கொண்டுள்ளதாக உள்ளது. ஆனால் இராணுவ பொறிமுறையின் முன் அவை சகலதும் செயலிழந்த நிறுவனங்கள் ஆகும். தமிழ்க்குழந்தைகள் விடயத்தில் அரசு சர்வதேச சமவாயங்களையோ சர்வதேச விதிமுறைகளையோ சட்டங்களையோ கடைப்பிடிக்கவில்லை. இன்றும் குழந்தைகளை அரசு எவ்வாறு கொன்றழித்தது என்பதற்கு நேரடி சாட்சியங்களும் ஆதாரங்களும் உள்ளன.

யுத்தத்தினை நடத்தியது மாறிமாறி ஆட்சிக்குவந்த அரசாங்கம் என்று கூறி இன்றைய அரசாங்கம் நிராகரித்துவிட முடியாது. தமிழ் மக்கள் மீதான போருக்கு இனவாதிகளாக ஆதரவு நல்கிய தரப்பாக இன்றைய அரசாங்கத்தின் தலைமைகள் உள்ளன. இலங்கையில் அரச கொள்கையாகவே தமிழ் மக்கள் மீது அடக்குமுறையும் ஒடுக்குமுறையும் பாரதூரமான படுகொலைகளும் சந்தேகத்திற்கு இடமின்றி நடந்துள்ளன.

அரச படுகொலைகளுக்கு எந்த அரசாங்கம் மாறி மாறி ஆட்சிக்கு வந்தாலும் பொறுப்புக்கூறவேண்டும். இது தமிழ் மக்களின் அழுத்தமாக என்றும் காணப்படவேண்டும் என்றார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மிகப் பிரமாண்டமாக இடம்பெற்ற சென் பிலிப் நேரிஸ் கொடியேற்றம்!

யாழ். வடமராட்சி கிழக்கு, செம்பியன்பற்று வடக்கு புனித பிலிப்பு நேரியார் ஆலய வருடாந்த திருவிழாவின் ஆரம்ப நிகழ்வான கொடியேற்ற வைபம் மிகப் பிரமாண்டமாக 17ம் திகதி அன்று சனிக்கிழமை மாலை 5 மணியளவில் ஆலய முன்றலில் இடம்பெற்றது.





வரலாற்று சிறப்புமிக்க புனித பிலிப்பு நேரியார் ஆலய திருவிழாவானது 155 ஆண்டுகள் நிறைவு பெற்ற நிலையில் இம்முறை கொடியேற்றமானது மிகவும் பிரமாண்டமான ரீதியில் சிறப்பாக இடம்பெற்றதை காணக்கூடியதாக இருந்தது.

கொடியேற்றமானது ஆலய பங்கு தந்தையான அருட்தந்தை ஜஸ்டின் ஆதர் தலைமையில் ஆரம்பமாகி, திருச்செபமாலையுடன் மாலை 6 மணியளவில் திருப்பலி அருட்தந்தை அமிர்தராஜ் அவர்களின் தலைமையில் ஒப்புக் கொடுக்கப்பட்டது.

இவ் நிகழ்வில் ஆலய பங்குத் தந்தை, பங்கு மக்கள், அருட்சகோதரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# இனப்படுகொலை நினைவுத்தூபி அமைப்பு காலப் பெறுமதி மிக்க செயல்: கனேடியத் தூதுவரிடம் சிறீதரன் எம்.பி தெரிவிப்பு..!



கனடாவின் பிரம்டன் நகரில் இனப்படுகொலை நினைவுத்தூபி அமைக்கப்பட்டமை காலப்பெறுமதி மிக்க செயல் என்றும், அதற்கு ஈழத்தமிழர்கள் சார்பில் கனேடிய அரசுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன், கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸ் அவர்களிடம் கடிதம் ஒன்றையும் கையளித்துள்ளார்.

மேற்குறித்த நினைவுத் தூபி அமைப்புக்கு நன்றி தெரிவித்து கனேடியப் பிரதமர் மார்க் ஹானி அவர்களுக்கும், பிரம்டன் நகர மேஜர் பற்றிக் பிரவுண் அவர்களுக்கும் கடந்த 19ஆம் திகதி மின்னஞ்சலில் அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்களின் பிரதியே இன்றையதினம் கனேடியத் தூதுவரிடம் சிறீதரன் எம்.பியால் நேரில் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, இலங்கைத்தீவின் அளவிற் சிறிய தேசிய இனமாக அடையாளப்படுத்தப்படும் தமிழ்த்தேசிய இனம் மீது, இலங்கை அரசால் வலிந்து மேற்கொள்ளப்பட்ட மனிதப் பேரவலத்தை "இனப்படுகொலை" என்று ஏற்றுக்கொண்ட முதலாவது நாடான கனடாவின் பிரம்டன் நகரில், தமிழினப் படுகொலை நினைவுத்தூபி நிறுவப்பட்டு, வலிசுமந்த மாதமான மே மாதத்தில் திறந்துவைக்கப்பட்டுள்ளமை, பாதிக்கப்பட்ட எமது மக்களின் மனக்காயங்களுக்கு மருந்தாய் அமைந்துள்ளதை நன்றியோடு பதிவுசெய்கிறேன்.

ஈழத்தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட போரின் அறமீறல்கள் குறித்தும், போர் முடிவுற்றதன் பின்னரான கடந்த 15 ஆண்டுகளில் எமது மக்களின் பாரம்பரிய வாழ்விடங்கள் மீதும், கூட்டுப் பண்பாடுகள் மீதும் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கட்டமைக்கப்பட்ட இன அழிப்புச் செயற்பாடுகள் தொடர்பிலும் கரிசனையோடிருக்கும் கனேடிய அரசினால், ஈழத் தமிழினம் சார்ந்து சமகாலத்தில் முன்னகர்த்தப்படும் காத்திரமான செயல்களும், அறிவிப்புகளும் சர்வதேச அரங்கிலும், தமிழ் மக்கள் மனங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதை உணரமுடிகிறது.

தங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு பரிகார நீதியைக் கோரிநிற்கிற எங்கள் இனம், கடந்த 15 ஆண்டுகளாக ஏமாற்றங்களை மட்டுமே எதிர்கொள்ள நேர்ந்திருக்கிறது. இலங்கைத் தீவில் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்டது இனப்படுகொலை தான் என்பதை ஏற்றுக்கொள்ளத் தலைப்படாத உலக அரங்கில், "இலங்கையில் நிகழ்ந்தது இனப்படுகொலையே" என்பதை பகிரங்கமாக ஏற்றுக்கொண்டதோடு, இறுதிப்போரின் போது கொல்லப்பட்டோருக்காகவும், மனித உரிமை மீறல்களைச் சந்தித்தோருக்காகவும் தொடர்ந்து நீதிகேட்கும் கனடா, தனது நாட்டின் முதன்மை நகரான பிரம்டனில் ஈழத்தமிழர்களின் அரசியல் தாகத்தை சொல்லும் தமிழீழக் குறியீட்டுடன் கூடிய நினைவுத்தூபியை நிறுவியமையும், தமிழ் இனப் படுகொலையை ஏற்றுக்கொள்ளாதவர்கள் கனடாவிலிருந்து தாராளமாக வெளியேறலாம் என்ற பிரம்டன் நகர மேயரின் அறிவிப்பும் ஈழத்தமிழர்களுக்கான நீதியின் முகமாக கனடாவை அடையாளப்படுத்தியிருக்கிறது.

ஈழத்தமிழர்கள் மீதான இனப்படுகொலையின் நேரடிக் குற்றவாளிகளான இலங்கையின் முன்னாள் ஜனாதிபதிகள் இருவர் மற்றும் இராணுவப் பின்புலம் கொண்டவர்களுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதித்தமை, தமிழினப்படுகொலை நினைவேந்தல் அனுஷ்டிப்பு, நினைவுத்தூபி அமைப்பு, உயிர் அச்சுறுத்தல்களால் புலம்பெயரும் ஈழ அகதிகளுக்கு அரசியல் தஞ்சம் வழங்கல் என ஈழத்தமிழர்கள் சார்ந்து தங்களால் முன்னெடுக்கப்படும் அத்தனை செயல்களும், எமது இனத்தின் அரசியல் விடுதலையில் கனடா நாட்டின் பங்களிப்பு கனதிமிக்கதாக இருக்கும் என்ற பரிபூரண நம்பிக்கையை எமக்கும் எமது மக்களுக்கும் வழங்கியிருக்கிறது.

அந்த நம்பிக்கைக்கான சாட்சியமாக, இனப்படுகொலைக்கான நீதியைப் பெறுவதிலும், எமது மக்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கான எதிர்கால நடவடிக்கைகளிலும் தங்களது இராஜதந்திர வழிகாட்டுதல்கள் மற்றும் மூலோபாயங்கள் எமக்கு துணைசெய்யும் என்ற நம்பிக்கையின் செய்தியாக, மீளவும் ஈழத்தமிழர்கள் சார்பிலான நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். என்றுள்ளது.

உலக செய்திகள்
World News

அனைத்துலகத் தமிழர் பேரவை
FEDERATION OF GLOBAL TAMILS

# இலங்கையில் இடம்பெற்ற தமிழ் மக்களுக்கு எதிரான இனப்படுகொலைகளுக்கு அடையாளமாக நினைவுத்தூபியை நிறுவிய கனடாவை உலக நாடுகள் பின்பற்ற வேண்டும்

## நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சரும் அனைத்துலக தமிழர் பேரவையின் தலைவருமான நிமால் விநாயகமூர்த்தி தெரிவிப்பு

"இன்று கனடிய தேசம் தனது நகரம் ஒன்றில் இலங்கையில் இடம்பெற்ற தமிழ் மக்களுக்க எதிரான இனப்படுகொலைகளுக்கு அடையாளமாக ஒரு நினைவுத் தூபியை அமைத்து இந்த உலகில் முன்னுதாரணமாக செயற்பாட்டைப் புரிந்துள்ளது. இதன் வழியாக உலகின் நீதி முகமாக கனடா இருக்கின்றது. ஈழத் தமிழ் மக்களுடன் கனடா துணையிருப்பது மிக முக்கியமான பணி. தமிழர்களின் நினைவுரிமையை கனடா அங்கீகரித்தமைபோன்று உலக நாடுகளும் அங்கீகரிக்க வேண்டும்".

இவ்வாறு நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் முன்னாள் அமைச்சரும் அனைத்துலக தமிழர் பேரவையின் தலைவருமான நிமால் விநாயகமூர்த்தி முள்ளிவாய்க்கால் படுகொலைகள் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மேற்படி அறிக்கையில் தொடர்ந்து அவர் தெரிவித்துள்ளதாவது:

நினைவேந்தல் உரிமை என்பது உலகம் முழுவதும் உள்ள மக்களின் அடிப்படை உரிமையாகும். போர்கள் நடந்த நாடுகளில் பாதிக்கப்பட்ட மக்களின் உளவியல் மேம்பாட்டிற்காக நினைவேந்தல் உரிமை உதவுகிறது. மோதல்கள் நடந்த நாடுகளில் நிலைமாறுகால நீதியாக கொல்லப்பட்டவர்கள் தொடர்பில் பொறுப்புக்கூறதலுக்கான வழிமுறையாக நினைவேந்தல் முக்கிய வழிமுறையாகிறது.

இலங்கையில் மரபுகளையும் ஞாபகங்களையும் நினைவுகளையும் அழிப்பதை ஒரு இனழிவப்பாக ஸ்ரீலங்கா அரசு ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக கையாண்டு வருகிறது. 1981இல் யாழ் நூலக எரிப்பு தமிழர்களின் அறிவுடமையை அழிப்பதுடன் அவர்களின் அடையாளத்தையும் அழிக்கும் விதமாக நிகழ்த்தப்பட்டது.

போரில் ஆலயங்கள், மரபுரிமை மையங்கள் என தொன்மைச் சான்றுகளை இலங்கை அரசு அழித்து வந்துள்ளது. போரின் நினைவிடங்களாக அமைந்த மாவீரர் துயிலும் இல்லங்கள் போரின் சாட்சியாகவும் போரில் பாதிக்கப்பட்ட மக்களின் நினைவுச் சேகரப்பு இடங்களாகவும் இருக்கின்றன. மாவீரர் துயிலும் இல்லங்களும் உளவியல் ஆற்றுப்படுத்தலைச் செய்கின்ற நினைவிட உரிமையின் முக்கிய மையங்கள் ஆகும்.

போரின் இறுதியில் இலங்கை அரசு மாவீரர் துயிலும் இல்லங்களை திட்டமிட்டு புல்டொசர் கொண்டு அழித்த்து. இது எங்கள் ஈழத் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் மனத்தாக்கங்களை உருவாக்கியது. அதனால்தான் போரில் வென்ற அரசினால் தமிழ் மக்களை வெல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

2021ஆம் ஆண்டு, யாழ் பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபியை இலங்கை அரசு இரவோடு இரவாக அழித்த நிகழ்வு உலகத் தமிழ் மக்கள் மத்தியில் மாத்திரமின்றி பன்னாட்டுச் சமூகத்திலும் பெரும் அதிர்வை உருவாக்கியது. அப்போதுதான் கனடாவில் ஒரு நினைவுச்சின்னத்தை அமைக்கவும் எண்ணமும் தோற்றம்பெற்றது.

இன்று கனடா ஒரு நினைவுத் தூபியை அமைத்து இந்த உலகில் முன்னுதாரணமாக செயற்பாட்டைப் புரிந்துள்ளது. இதன் வழியாக உலகின் நீதி முகமாக கனடா இருக்கின்றது. ஈழத் தமிழ் மக்களுடன் கனடா துணையிருப்பது மிக முக்கியமான பணி. தமிழர்களின் நினைவுரிமையை கனடா அங்கீகரித்தமைபோன்று உலக நாடுகளும் அங்கீகரிக்க வேண்டும்.

*நிமால் விநாயகமூர்த்தி*
*முன்னாள் அமைச்சர் - நாடு கடந்த தமிழீழ அரசாங்கம்*
*தலைவர் - அனைத்துலக தமிழர் பேரவை*

# அவுஸ்திரேலியாவில் உயர் விருது பெறும் இலக்கியப் படைப்பாளி "தமிழ்மணி" அகளங்கன்!

## - ஐங்கரன் விக்கினேஸ்வரா

அவுஸ்திரேலியாவில் குயின்ஸ்லாந்து மாநிலத்தில் நடைபெறும் தமிழ் விழாவில் ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளர், மூதறிஞர், கலாபூசணம், கலைமாமணி, தமிழ்மணி அகளங்கன் அவர்களுக்கு விருது வழங்கப்பட உள்ளது.

தமிழ் இலக்கியத் தோட்டம் நடாத்தும் விருது வழங்கும் விழாவும் இலக்கியச் சங்கமமும் எதிர்வரும் 25-05-2025 ஞாயிற்றுக் கிழமை நடைபெறுகிறது. இந்நிகழ்வில் ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளர், மூதறிஞர், கலாபூசணம், கலைமாமணி, தமிழ்மணி அகளங்கன் அவர்களுக்கம், தமிழ் நாட்டு தமிழறிஞர், நாவலர், எழுச்சிக் கவிஞர் எ.இரவிச்சந்திரன் (கதிர்மதியன்) அவர்களுக்கும் விருது வழங்கப்பட உள்ளது.

நீண்டகாலமாக தமிழ் இலக்கியத் துறையில் தொடர்ந்து பணியாற்றி வருவதுடன், அவர்களின் இலக்கிய பொன்விழா நிறைவையொட்டி மாபெரும் விருது வழங்கும் விழாவும் இலக்கியச் சங்கமமும் நடைபெற உள்ளன.

தமிழ்மணி அகளங்கன் பல்துறை சார்ந்த இலக்கியப் படைப்பாளியாவார். இவரது இயற்பெயர் நா. தர்மராசா. 1970களில் இருந்து எழுத ஆரம்பித்த அகளங்கன் 2005 வரை இலக்கியம், சிறுகதை, ஆய்வு, கவிதை, நாடகம், சிறுவர் பாடல்கள், கட்டுரைகள் உள்ளடங்கலாக முப்பது நூல்களை வெளியிட்டார்.

ஈழத்தின் முதுபெரும் எழுத்தாளர், மூதறிஞர், கலாபூசணம், கலைமாமணி, தமிழ்மணி அகளங்கன் தமிழ் இலக்கியத் துறையில் பொன்விழா நிறைவையொட்டி மாபெரும் விருது வழங்கும் விழாவும் இலக்கியச் சங்கமமும் பிரிஸ்பேர்னில் நடைபெற உள்ளன.

பல இலக்கிய ஆளுமைகள் கலந்துகொண்டு இவ்விரு பெருமகனார்களும் தமிழ் இலக்கியத் துறையில் ஆற்றிய சாதனைகளை எடுத்தியம்பி அவர்களைக் கௌரவிப்பதுடன் பல மேடை நிகழ்ச்சிகளும் அரங்கேறவுள்ளன.

தமிழ்மணி அகளங்கன் கணித விஞ்ஞானத்துறையில் கற்று அத்துறையில் ஆசிரியப்பணி புரிந்தபோதும், சுயமாகவே பழந்தமிழ் இலக்கியங்களைக் கற்று, பழந்தமிழ் இலக்கியக் கட்டுரைகளை எழுதத் தொடங்கினார்.

அக்காலத்தில் சிரித்திரன் ஆசிரியர் அமரர் சி. சிவஞானசுந்தரம் அவர்களின் ஆலோசனையின்படி இலக்கியச்சிமிழ், இலக்கியத்தில் நகைச்சுவை என்ற தலைப்புக்களில் இரு கட்டுரைத் தொடர்களை சிரித்திரனில் எழுதியதோடு, "வாலி கொலைச்சரமும் கேள்விச்சரமும்" என்ற தலைப்பில் ஈழநாடு பத்திரிகையில் தொடர்கட்டுரை ஒன்றையும் எழுதினார்.

தொடர்ந்து ஈழமுரசு, முரசொலி, வீரகேசரி, தினகரன், தினக்குரல் ஆகிய பத்திரிகைகளிலும், பல சஞ்சிகைகளிலும் பல பழந்தமிழ் இலக்கிய கட்டுரைகளை எழுதியிருக்கின்றார். எழுதுவதுடன் பட்டி மன்றங்கள், கவியரங்கங்கள், ஆலயங்களில் சொற்பொழிவுகள் என பல நிகழ்வுகளைச் செய்துள்ளார்.

வானொலி, தொலைக்காட்சி என்பனவற்றிலும் நிகழ்ச்சிகளை தமிழ்மணி அகளங்கன் வழங்கியுள்ளார். எழுபதுகளின் பிற்பகுதியிலேயே இவரது மெல்லிசைப் பாடல்கள் வெளிவரத் தொடங்கிவிட்டன. அதில் "சேற்றுவயல் காட்டினிலே" என்ற கிராமிய மெட்டுக் கொண்ட பாடல் புகழ் பெற்ற பாடலாகும்.

எண்பதுகளின் ஆரம்பத்தில் பல சொற்பொழிவுகளை ஆற்றிய இவர், எண்பதுகளின் பிற்பகுதியில் இருந்து ஏராளமான வானொலி நாடகங்களையும் எழுதியுள்ளார். தொண்ணூறுகளின் ஆரம்பத்திலிருந்து கவியரங்கங்கள், கவிதைக்கலச நிகழ்வுகளில் ஏறக்குறைய நூறு நிகழ்ச்சிகள் நடத்தி, இளங்கவிஞர்களது பல கவிதைகளை வானலையில் தவழ விட்டார்.

இவரின் "ஜின்னாவின் இரட்டைக் காப்பிய ஆய்வு" என்ற நூல் தமிழ்நாட்டு ஆளுநர் பாத்திமா பீபியால் வெளியிடப்பட்டது. மகாகவி பாரதியாரின் சுதந்திரப்பாடல்கள் ஆய்வு நூல் தமிழ் நாட்டில் வெளியிடப்பட்டது. வாலி ஆய்வு நூல் பட்டப்படிப்பு துணைப் பாடநூலாக பயன்படுகின்றது.

தமிழ்மணி அகளங்கனின்-ஐம்பத்தி மூன்று ஆக்கங்கள் நூல்வடிவம் பெற்றிருக்கின்றன. இவற்றில் வாலி (ஆய்வு), செந்தமிழும் நாப்பழக்கம் (சிறுவர் பேச்சு), சுட்டிக் குருவிகள் (மழலைப் பாடல்கள்), சின்னச் சிட்டுக்கள் (சிறுவர் பாடல்கள்), ஆகிய நான்கு நூல்கள் மூன்று பதிப்புகள் கண்டிருக்கின்றன.

இலக்கியச் சிமிழ் (கட்டுரைகள்), நாமறிந்த நாவலர், நளவெண்பா (கதை), திருவெம்பாவை (உரை), பன்னிரு திருமுறை அறிமுகம், வெற்றி வேற்கை (உரை), பந்தடிப்போம் (சிறுவர் பாடல்கள்), சிரிக்கவிடுங்கள் (சிறுவர் பாடல்கள்), ஆகிய எட்டு நூல்கள் இரண்டு பதிப்புகள் கண்டிருக்கின்றன.

இலங்கை அரசின் கலாசார அமைச்சினால் ஆண்டுதோறும் வழங்கப்படும் சிறந்த நூல்களுக்கான உயர் விருதான அரச இலக்கிய விருது (தேசிய சாகித்திய விருது) எனது நான்கு நூல்களுக்குக் கிடைத்திருக்கின்றது. சிறப்புச் சான்றிதழ் நான்கு நூல்களுக்குக் கிடைத்துள்ளது.

அத்துடன் வடக்கு கிழக்கு மாகாண சிறந்த நூற்பரிசு இரண்டு நூல்களுக்குக் கிடைத்துள்ளது. வடக்கு மாகாண சிறந்த நூற்பரிசு ஆறு நூல்களுக்குக் கிடைத்துள்ளது.

மேலும் தமிழ் நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் அறந்தை நாராயணன் நினைவு சர்வதேச சிறந்த நூல் விருது, தமிழ் நாடு எஸ்.ஆர் எம். பல்கலைக்கழகத்தின் தமிழ்ப் பேராய சர்வதேச சுவாமி விபுலானந்தர் நினைவு சிறந்த நூல் விருது, தமிழ் நாடு திருப்பூர் கவிஞர் சுகந்தி சுப்பிரமணியம் நினைவு சர்வதேச விருது ஆகிய விருதுகளை எனது நூல்கள் பெற்றிருக்கின்றன.

இலங்கை அரசின் கலாசார அமைச்சின் கலாபூ'ணம், இந்துகலாசார அமைச்சின் தமிழ் மணி, கலை மாமணி, முதலான அரச பட்டங்களைப் பெற்றதுடன், கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் தமிழ் அறிஞர் பட்டத்தையும் பெற்றிருக்கிறார்.

இலங்கை கல்வி அமைச்சின் எழுத்துத் துறைக்கான வாழ்நாட் சாதனையாளர் விருது, வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் விருது, பேராதனைப் பல்கலைக்கழகத்தின் சங்கச் சான்றோர் விருது, இந்திய புதுச்சேரி மாநிலத்தின் குழந்தைகள் கலைக்கழக செம்பணிச்சிகரம் விருது, ஐ.பி.சி வானொலி தொலைக்காட்சி நிறுவனத்தின் பழந்தமிழ் ஆளுமைக்கான விருது, இலண்டன் இலங்கை இலக்கிய நிறுவகத்தின் வாழ்நாட் சாதனையாளர் விருது, கொழும்பு கம்பன் கழகத்தின் நுழைபுலம் ஆய்வு விருது, மன்னார் அறநெறிப் பாடசாலைகளின் ஒன்றியத்தின் நாவலர் விருதுகளையும் பெற்றுள்ளார்.

யாழ்.இலக்கிய வட்டத்தின் நாடகத் துறைக்கான கலைப் பேரரசு ஏ.ரி.பொன்னுத்துரை விருது, யாழ்.இலக்கிய வட்டத்தின் முத்தமிழுக்கான முத்தமிழறிஞர் சொக்கன் விருது, மன்னார் மாவட்ட சைவக் கலை இலக்கிய மன்றத்தின் பாரதி விருது, வவுனியா தமிழ் விருட்சம் தொண்டு அமைப்பின் வாழ் நாட் சாதனையாளர் விருது, வவுனியா நகர சபையின் உயர் விருது, அறிவியல் மாற்றம் சமூக மேம்பாட்டு நிறுவனத்தின் (SCSDO), பன்முக கலை ஆளுமை என்ற துறைசார் ஆளுமைக்கான விருது முதலான பல விருதுகளையும் பெற்றுள்ளார்.

மேலும் தமிழ் நாடு திருவையாறு தமிழ் ஐயா கல்விக் கழகத்தின் தமிழ் முகில், செந்தமிழ்ப் பாரிவேள், வவுனியா இந்துமாமன்றத்தின் காவியமாமணி முதலான முப்பதிற்கும் மேற்பட்ட சிறப்புப் பட்டங்கள் பேச்சு, எழுத்து முதலான பணிகளுக்காகக் கிடைத்துள்ளன.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மழை மற்றும் மின்னல் தாக்கத்தினால் யாழில் 17பேர் பாதிப்பு!

நிலவும் அசாதாரண காலநிலை காரணமாக ஏற்பட்ட மழை மற்றும் மின்னல் தாக்கத்தினால் யாழ்ப்பாணத்தில் 17பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் பிரதிப் பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் மழை அனர்த்தத்தால் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/03 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 4பேரும் பாதிக்கப்பட்டுள்ளதுடன், ஜே/06 கிராம சேவகர் பிரிவில் அடிப்படை கட்டமைப்பு ஒன்றும் சேதமடைந்துள்ளது.

இதேநேரம் கரவெட்டி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/356 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த மூவர் மழையால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

அத்துடன் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட ஜே/304 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த மூவர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. ஜே/328 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 4பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. மேலும் ஜே/305 கிராம சேவகர் பிரிவில் ஒரு குடும்பத்தை சேர்ந்த மூவர் மின்னல் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.



# ஈழத் தமிழ் அகதிகளுக்கெதிராக உச்ச நீதிமன்றத் தீர்ப்பு தமிழர்கள் நெஞ்சங்களில் வேதனை வேலினைப் பாய்ச்சி உள்ளது

## உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கை

“உலகம் முழுவதுமுள்ள அகதிகளை வரவேற்க இந்தியா தர்மசத்திரம் அல்ல” என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது கண்டு அளவற்ற வேதனை அடைகிறேன். புத்தரும், மகாவீரரும், காந்தியடிகளும் பிறந்த மண்ணில் இப்படியொரு தீர்ப்பா?

ஈழத் தமிழரான சுபா'கரன் சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் 2015ஆம் ஆண்டில் கைது செய்யப்பட்டார். இராமநாதபுரம் நீதிமன்றம் குற்றவாளி எனக் கருதி இவருக்கு 10ஆண்டு சிறைத் தண்டனை விதித்தது. சென்னை உயர்நீதிமன்றம் 2022ஆம் ஆண்டில் இவர் தண்டனையை 7ஆண்டு காலமாக குறைத்தது. இதன்படி இவரது தண்டனைக் காலம் இந்த ஆண்டுடன் நிறைவேறுகிறது. தண்டனை காலம் முடிவடைந்தவுடன் இந்தியாவிலேயே தங்க அனுமதிக்கக் கோரி உயர் நீதிமன்றத்தில் அவர் தாக்கல் செய்த மனுவை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. உச்ச நீதிமன்றத்தில் அவர் மேல்முறையீடு செய்தபோது, அவர் மனுவை தள்ளுபடி செய்த உச்ச நீதிமன்றம் “அனைத்து நாடுகளிலிருந்து வரும் வெளிநாட்டினரை வரவேற்று மகிழ்விக்க இந்தியா தர்மசத்திரம் அல்ல” எனக் கூறியுள்ளது தமிழர்களின் நெஞ்சங்களில் வேதனை வேலினைப் பாய்ச்சி உள்ளது.

செஞ்சீனம் திபெத்தை ஆக்கிரமித்தபோது, அங்கிருந்து தப்பி தலாய்லாமா தனது மக்களுடன் நடந்தே இந்தியாவின் எல்லைக்கு வந்தபோது, அப்போதைய தலைமையமைச்சர் நேரு அவர்கள் இந்திய எல்லைக்கே சென்று அவரையும், பல்லாயிரக்கணக்கான திபெத்தியரையும் வரவேற்று இந்தியாவில் அடைக்கலம் கொடுத்தார். அவர்கள் கடந்த 63 ஆண்டுகளாக தலாய்லாமாவும், திபெத்திய அகதிகளும் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் தங்கியுள்ளனர். தலாய்லாமாவுக்கு அரசாங்கத் தலைவர் தகுதி வழங்கப்பட்டுள்ளது. திபெத்தியர்கள் இந்தியாவின் பல்வேறு பகுதிகளில் வணிகம் நடத்தவும், தொழில் நடத்தவும் அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். வெளிநாடுகளிலிருந்து அவர்களுக்கு நிதியுதவியை பல நாடுகள் தலாய்லாமா மூலம் அனுப்பி உதவி செய்கின்றன. 63 ஆண்டுகளுக்கு மேலாக இந்தியாவில் தங்கியிருக்கும் தலாய்லாமாவையும், அவருடன் வந்த திபெத்திய மக்களையும் நோக்கி “இந்தியா என்ன தர்மசத்திரமா?” என்ற கேள்வியை உச்ச நீதிமன்றம் கேட்குமா?

தமிழ்நாட்டில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட ஈழத் தமிழர்கள் அகதிகளாக 30 ஆண்டு காலத்திற்கும் மேலாக வாழ்ந்துவருகிறார்கள். அவர்களில் சுபாஷ்கரனின் குடும்பமும் ஒன்று. ஏற்கெனவே 1992ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் வாழ்ந்து வந்த ஈழத் தமிழ் அகதிகள் சிலருக்கு இந்தியாவிலிருந்து உடனடியாக வெளியேற வேண்டும் என இந்திய அரசாங்கம் உத்தரவிட்ட போது, நானும், பா.ம.க. தலைவர் இராமதாசும் இணைந்து இதற்கெதிராக உயர் நீதிமன்றத்தில் முறையிட்டோம். எங்களின் மனுவை ஏற்றுக்கொண்ட சென்னை உயர் நீதிமன்றம் “இலங்கைத் தமிழ் அகதிகளை அவர்களின் ஒப்புதல் இல்லாமலேயே திருப்பி அனுப்பும் அதிகாரம் அரசுக்கு உண்டு” என்பது ஏற்கத் தக்கதல்ல. தாமாக திரும்பிச் செல்ல விரும்பாத அகதிகளைக் கட்டாயப்படுத்தி வெளியேற்றக் கூடாது என 27.08.1992ஆம் நாளில் ஆணை பிறப்பித்தது. இதுவரை இந்த ஆணை பின்பற்றப்படுகிறது. இதன்விளைவாக இந்தியாவை நம்பி அடைக்கலம் புகுந்த ஈழத் தமிழ் அகதிகள் இன்னமும் இங்கு வாழ்ந்து வருகிறார்கள். ஆனால், உச்ச நீதிமன்றத்தின் தற்போதை தீர்ப்பின் விளைவாக அவர்களும் கட்டாயப்படுத்தப்பட்டு வெளியேற்றப்படலாம்.

எனவே, தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் அவர்கள் இதைத் தடுத்து நிறுத்துவதற்கு உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசின் சார்பில் இத்தீர்ப்புக்கு எதிராக மேல்முறையீடு தாக்கல் செய்ய முன்வருமாறு வேண்டிக்கொள்கிறேன்.

அன்புள்ள,
பழ. நெடுமாறன், தலைவர்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

கனகராசா சரவணன்

# மட்டக்களப்பு வாகரை முகத்துவாரம் கடற்கரையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தமிழ் இன அழிப்பின் 16 வது நினைவேந்தல் அனுஸ்டிப்பு




மட்டக்களப்பு வாகரை முகத்துவாரம் கடற்கரையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தமிழ் இன அழிப்பின் 16 வது நினைவேந்தல் 18ம் திகதி அன்று ஞாயிற்றுக்கிழமை தீபச் சுடர் ஏற்றி உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் தேசிய மக்கள் முன்னண மே 18 தமிழ் இன அழிப்பின் நினைவேந்தல் வாகரை முகத்துவாரம் கடற்கரையில் அமைக்கப்பட்டுள்ள மீனவர் கட்டித்தில் கட்சியில் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நினைவேந்தலில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி கட்சி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உட்படகட்சியின் உறுப்பினர்கள் உட்பட நூற்றுக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டு உயிர் நீத்தவர்களுக்கு தீபச் சுடர் ஏற்றி அனுஷ்டித்தனர்.





# பிள்ளையானை பிணையில் விடவேண்டாம். மட்டக்களப்பில் காணப்படும் சுவரொட்டிகள்



கிழக்குப் பல்கலைக்கழக துணைவேந்தர் கடத்தப்பட்டு காணாமல் போன சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதற்கு எதிராக முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தாக்கல் செய்த அடிப்படை உரிமைகள் மனுவை ஜூன் 17 ஆம் திகதி பரிசீலிக்க உயர் நீதிமன்றம், வியாழக்கிழமை (22) தீர்மானித்தது.

இதேவேளை பிள்ளையானை பிணையில் விடவேண்டாம் என்று எழுதப்பெற்ற சுவரொட்டிகள் மட்டக்களப்பில் பல இடங்களில் ஒட்டப்பட்டுள்ளதாக எமது கொழும்புச் செய்தியாளர் அறிவித்துள்ளார்.

இந்த மனு உயலட நீதிமன்ற நீதியரசர்களான மஹிந்த சமயவர்தன மற்றும் மேனகா விஜேசுந்தர ஆகியோர் அடங்கிய அமர்வு முன் பரிசீலிக்கப்பட்டது.

பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தாக்கல் செய்த மனுவில், சி.ஐ.டியின் சிறப்பு புலனாய்வுப் பிரிவின் பொறுப்பதிகாரி, சி.ஐ.டியின் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் இமேஷா முத்துமாலி, பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய, பாதுகாப்பு அமைச்சர் அனுர திசாநாயக்க மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ளனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் சிவசுப்பிரமணியம் ரவீந்திரநாத் கடத்தப்பட்டு காணாமல் போனது தொடர்பாக மட்டக்களப்பில் உள்ள தனது கட்சி அலுவலகத்தில் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தபோது, ஏப்ரல் 8 ஆம் திகதி அங்கு வந்த குற்றப் புலனாய்வுத் துறை அதிகாரிகளால் தான் கைது செய்யப்பட்டதாக மனுதாரர் கூறுகிறார்.

பாதுகாப்பு அமைச்சர் அனுர திசாநாயக்க, அவர் மீதான விசாரணைக்காக அவரை 90 நாட்கள் தடுத்து வைக்க ஏப்ரல் 12 ஆம் திகதி உத்தரவு பிறப்பித்தார்.



# இறந்த காலத்தில் இருந்து கற்றுக் கொள்ளாத ஒரு சிறிய தீவில் இரண்டு நினைவு நாட்கள்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

கடந்த 18ஆம் தேதியும் 19 ஆம் தேதியும் இலங்கைத் தீவில் இரண்டு மக்கள் கூட்டங்கள் இருப்பதனை மீண்டும் உணர்த்திய அடுத்தடுத்த நாட்கள். 18 ஆம் திகதி தமிழ் மக்கள் இன அழிப்பை நினைவு கூர்ந்தார்கள். 19ஆம் திகதி சிங்கள மக்கள் யுத்த வெற்றியைக் கொண்டாடினார்கள்.

பதினெட்டாம் திகதியை நோக்கி அந்த வாரம் முழுவதும் தமிழ் மக்கள் ஊர் ஊராக, சந்தி சந்தியாக கஞ்சி காய்ச்சிக் கொடுத்தார்கள். 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் மைதானத்தில் ஆயிரக்கணக்கில் கூடினார்கள் உருகி அழுதார்கள்.

அடுத்த நாள் கொழும்பில் அரசாங்கம் யுத்த வெற்றியைக் கொண்டாடியது. காலையில் அரசுத் தலைவர் உடல் வழங்காத படை வீரர்கள் தங்கியிருக்கும் இடத்துக்குச் சென்று அவர்களைக் கௌரவித்தார். அதன்பின் படைத் தளபதிகளோடு போய் யுத்த வெற்றி வீரர்களின் நினைவுச் சின்னத்தை தரிசித்தார்.

நாட்டின் ஒரு பக்கத்தில் தமிழ் மக்கள் துக்கத்தை அனுஷ்டித்த அடுத்த நாள் நாட்டின் தலைநகரில் சிங்கள மக்களும் அவர்களுடைய பிரதானிகளும் வெற்றியைக் கொண்டாடினார்கள். கிளிநொச்சியைச் சேர்ந்த ஒரு ஊடகவியலாளர் எழுதியது போல "மே பதினெட்டு கொல்லப்பட்டவர்களின் தினம்; மே பத்தொன்பது கொன்றவர்களின் தினம்".

பதினெட்டாம் திகதி பெரும்பாலான தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்கள் முள்ளிவாய்க்காலில் கூடியிருந்தார்கள். 19ஆம் திகதி பெரும்பாலான சிங்களத் தலைவர்கள் தமது வெற்றி நாயகர்களைப் போற்றி அறிக்கை விட்டார்கள்.

பதினெட்டாம் தேதி தமிழ் மக்கள், உணவு ஆயுதமாக பயன்படுத்தப்பட்ட ஒரு யுத்தத்தின் நினைவாக கஞ்சியைப் பகிர்ந்தார்கள். முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னத்தின் முன் பூக்களை வைத்து அஞ்சலித்தார்கள்.

அதே நாளில் யுத்த வெற்றி வீரர்களின் நினைவுச் சின்னத்தின் முன் "பிவிதுறு ஹெல உரிமை"யின் செயற்பாட்டாளரான பெண் ஒருவர் சிறப்பு அதிரடிப் படை வீரருக்கு ஒரு ரோஜாப் பூவை பரிசளித்தார்.

பதினெட்டாம் திகதி முள்ளிவாய்க்காலில் கூட்டுத் துக்கமும் கூட்டுக் காயங்களும் கூட்டு இழப்பும் கூட்டு அவமானமும் கண்ணீராய் பெருகி ஓடின. 19ஆம் திகதி கொழும்பிலும் ஏனைய தென்னிலங்கை தலை நகரங்களிலும் கூட்டு வெற்றி கொண்டாடப்பட்டது.

18 ஆம் திகதி தமிழ் அரசியல்வாதிகள் தமது மக்களின் கூட்டுத் துக்கத்தைப் பிரதிநிதித்துவப் படுத்தினார்கள். அதே நாளிலும் அடுத்த நாளும் சிங்கள அரசியல்வாதிகள் யுத்த வெற்றியைப் பிரதிநிதித்துவப் படுத்தினார்கள்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தனது செய்தியில் ஓரிடத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்... "சண்டை பிடிப்பது நமக்கு புறத்தியானது அல்ல. நாங்கள் சமர்க் களத்தில் சுய கட்டுப்பாடு உடையவர்கள். எங்களுக்கு நன்றாகத் தெரியும் சண்டை என்றால் என்ன? யாருடன் என்று? மகத்தான மன்னர்களான துட்டு கெமுனு, வளகம்பா, தாது சேனன், விஜயபாகு ஆகிய மகத்தான மன்னர்கள் அந்நிய படையெடுப்பாளர்களை தோற்கடித்து வெற்றியை உறுதிப்படுத்திய நிலம் இது. பிரிட்டிஷ்காரர் டச்சுக்காரர் போர்த்துக்கீசர் போன்ற கொலனித்துவ சக்திகளுக்கு எதிராக தேசபக்தர்கள் சமர் புரிந்த நிலம் இது. வீரபுரான் அப்பு கெப்பிட்டிபொல போன்ற நாயகர்களும் பௌத்த துறவிகளும் மேலாதிக்க சக்திகளுக்கு எதிராக எழுந்த நிலம் இது. நாட்டின் இறைமையைப் பாதுகாப்பதற்காக ஆயிரக்கணக்கான வீரம் மிகுந்த யுத்த நாயகர்கள் தங்கள் உயிர்களை தியாகம் செய்து 30 ஆண்டுகால கொடிய யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த நாடு இது."

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச "தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாத அமைப்பிடமிருந்து தாயகத்தை விடுவித்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துகிறோம்" என்று தனது செய்தியில் கூறியுள்ளார்.

தாயகத்தின் நீட்சியும் அகட்சியுமாகக் காணப்படும் புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் குறிப்பாக கனடாவில் அண்மையில் ஒரு இன அழிப்பு நினைவகம் திறக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்துக்கு வெளியே அதிக தொகை தமிழர்கள் வாழும் இடம் கனடா. அங்கே அந்த நினைவுத் தூபியை திறந்து வைத்து உரை நிகழ்த்திய பிரம்டன் நகர மேயர் பின்வருமாறு சொன்னார். "இன அழிப்பு நடந்தது என்பதனை ஏற்றுக் கொள்ளாதவர்கள் கொழும்புக்கு திரும்பி போய் விடுங்கள்" என்று. ஆனால் கொழும்பிலிருந்து கொண்டு நாமல் ராஜபக்ச அதற்கு எதிராகக் குரல் கொடுத்தார். முன்னாள் வெளியுறவு அமைச்சரும் இந்நாள் வெளியுறவு அமைச்சரும் கூறுகிறார்கள், நாட்டில் இன அழிப்பு நடக்கவில்லை என்று.

முள்ளிவாய்க்காலில் திரண்ட ஆயிரக்கணக்கான மக்கள் கூறுகிறார்கள் நடந்தது இன அழிப்பு என்று. கனடாவிலும் தமிழர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலும் வாழும் தமிழர்கள் கூறுகிறார்கள் அது இன அழிப்பு என்று.

"பொறுப்புக் கூறலுக்கும், உண்மை, நீதி ஆகியவற்றை அடைவதற்கும் எடுக்கப்படும் சுதந்திரமான சர்வதேச முயற்சிகளைக் கனடா தொடர்ந்தும் ஆதரித்து வருகிறது", என்று கனேடிய பிரதமர் தனது செய்தியில் கூறியுள்ளார். "இலங்கையில் இடம்பெற்றது இன அழிப்பு. ராஜபக்ச அரசாங்கத்தின் யுத்தக் குற்றங்களை ஒருபோதும் மறக்கக்கூடாது" என்று கனேடிய கொன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் கூறியுள்ளார்.

அதாவது தமிழ் மக்களும் தமிழ் மக்கள் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளின் அரசியல்வாதிகளும் கூறுகிறார்கள், நடந்தது இன அழிப்பு என்று. அரசாங்கமும் அதன் ஆதரவாளர்களும் கூறுகிறார்கள் அது இன அழிப்பு இல்லை என்று. அமைச்சர் விஜித ஹேரத் கூறுகிறார். இன அழிப்பு என்று கூறினால் சட்ட நடவடிக்கை எடுக்க நேரிடும் என்று.

மேற்கண்டவற்றைத் தொகுத்துப் பார்க்கும் பொழுது என்ன தெரிகிறது? இச்சிறிய தீவில் இரண்டு வகை நினைவுச் சின்னங்கள் உண்டு. இரண்டு மக்கள் கூட்டங்கள் உண்டு. இரண்டு வேறு அரசியல் அபிப்பிராயங்கள் உண்டு. இரண்டு வேறு தேசங்கள் உண்டு. இரண்டும் ஒன்றுக்கு ஒன்று எதிரான அபிலாசைகளோடும் இரு வேறு அரசியல் நிலைப்பாடுகளோடும் காணப்படுகின்றன.

ஆனால் அரசுத் தலைவர் அனுர வெற்றி வீரர்களின் சின்னத்தை முன்னிறுத்தி பின்வருமாறு கூறியுள்ளார் "இந்த நினைவிடத்தின் முன் நாம் நின்று அவர்களுக்கு உரிய மரியாதை செலுத்துவது என்பது மீண்டும் ஒரு மோதல் ஏற்பட இடமளிக்காமல், வெறுப்பு நிறைந்த சமூகத்திற்குப் பதிலாக, சகோதரத்துவம் அன்பு மற்றும் நல்லிணக்கம் நிறைந்த சமூகத்தை உருவாக்கத் தயார் என்று உறுதி மொழியை எடுப்பதற்கும் ஆகும்" என்று.


அந்த நினைவுச் சின்னமே நல்லிணக்கத்திற்கு எதிரானது. ஒரு இனத்தின் வெற்றியைக் கொண்டாடுவது. நாட்டின் வடக்கில் முள்ளிவாய்க்காலில் மற்றோர் நினைவுச் சின்னம் உண்டு. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று நாடாளுமன்ற உறுப்பினர்களாக வந்த ஆளுங்கட்சி அரசியல்வாதிகள் ஒருவர்கூட அந்த நினைவுச் சின்னத்துக்கு வரவில்லை. அங்கே ஒரு பூவைக்கூட வைக்கவில்லை.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது தமிழ் மக்களின் வாக்குகளை எந்த சஜித்துக்கு சுமந்திரன் சாய்த்துக் கொடுத்தாரோ அந்த சஜித்தோ அவருடைய கட்சிப் பிரமுகர்களோ அந்த நினைவுச் சின்னத்துக்கு வரவில்லை. அங்கே ஒரு பூவைக்கூட வைக்கவில்லை. ஆனால் சுமந்திரன் கொழும்பில் மே 18ஐ நினைவுகூர்ந்த பொழுது, சஜித் யுத்த வெற்றியைப் போற்றி அறிக்கை விட்டிருந்தார். சிங்களத் தலைவர்கள் எப்பொழுதும் தெளிவாக இருக்கிறார்கள். அவர்கள் தங்களுடைய வாக்காளர்களுக்கு உண்மையாக இருக்கிறார்கள். ஆனால் தமிழ் அரசியல்வாதிகளில் எத்தனை பேர் அப்படியிருக்கிறார்கள்?


நாடாளுமன்ற தேர்தலிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தலிலும் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்ற அனுர 19 ஆம் திகதி தனது உத்தியோகபூர்வ செய்தியில் பின்வருமாறு கூறியுள்ளார்..... "நாம் முழுமையான வெற்றியாளர்கள் அல்ல. நாட்டில் சமாதானத்தை உருவாக்குவதன் மூலம் மட்டுமே நாம் முழுமையான வெற்றியாளர்களாக மாற முடியும். எனவே அச்சமின்றி சமாதானத்துக்காக எடுக்கக்கூடிய ஒவ்வொரு நடவடிக்கையும் எடுக்க நாம் தயாராக இருக்கிறோம்.... யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்ததன்மூலம் தாய்நாட்டின் முழுமையான சுதந்திரத்தை நாம் பெறவில்லை.."

கடந்த 16 ஆண்டுகளில் ஒரு பேருண்மையை ஒப்புக்கொண்ட முதலாவது அரசுத் தலைவர் அவர். 2009 மே மாதம் தாங்கள் பெற்ற வெற்றி முழுமையானது அல்ல என்பதனை அவர் ஒப்புக் கொள்கிறார். போரில் வெற்றி பெற்ற பின்னரும் நாட்டில் சமாதானத்தை உருவாக்க முடியவில்லை என்பதனை அவர் ஏற்றுக் கொள்கிறார். அதுதான் உண்மை. தமிழ் மக்களுக்குச் சமாதானம் இல்லை என்றால் சிங்கள மக்களுக்கும் சமாதானம் இல்லை. இந்தப் பிராந்தியத்துக்கும் சமாதானம் இல்லை. 16ஆவது மே மாதத்தில் இலங்கைத் தீவில் உள்ள ஒவ்வொருவரும் உணர வேண்டிய உண்மை அது.

---



# இலங்கையின் சுகாதாரக் கட்டமைப்பில் உடனடியாக கண் சுகாதாரம் தொடர்பான மூலோ – பாயத் திட்டமொன்றினை உருவாக்குவது அவசியமானது



யாழ்ப்பாணத்தின் கண் சத்திரசிகிச்சைத்துறையின் விசேட வைத்திய நிபுணர் M. மலரவன் ஜனாதிபதிக்கு எழுதிய அவசரக்கடிதத்தில் வலியுறுத்துகிறார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சிரேஷ்ட கண் சத்திரசிகிச்சை விசேட வைத்திய நிபுணரும், வடமாகாணம் முழுவதும் காத்திருத்தல் நேரத்தினை பூச்சியமாக்கி கண் வெண்புரை சத்திரசிகிச்சை உள்ளிட்ட ஏனைய கண் தொடர்பான பிரச்சனைகளுக்கு சிகிச்சைகளை உடனுக்குடன் வழங்கும் செயற்றிடத்தினை வெற்றிகரமாக முன்னகர்த்திகச்சென்று தேசிய ரீதியில் பாராட்டுதல்களினை பெற்றவருமான விசேட வைத்திய நிபுணர் M. மலரவன் ஜனாதிபதிக்கு அவசர கடிதமொன்றினை அனுப்பிவைத்துள்ளார். இவரது மருத்துவ சேவையையும் நோயாளர்கள் மீது காட்டும் இரக்கமும் அன்பும் தமிழ் மக்கள் மாத்திரமல்ல அவரிடம் சிகிச்சை பெற்ற சிங்கள மொழி பேசும் தென்னிலங்கை நோயாளிகளும் பாராட்டி மகிழ்வதை அனைவரும் பேசிக் கொள்வதுண்டு.

இவ்வாறான சிறப்புக்களும் சேவை மனப்பான்மையும் கொண்ட விசேட வைத்திய நிபுணர் M. மலரவன் அவர்கள் தனது கடிதத்தில் இலங்கையின் சுகாதாரக் கட்டமைப்பில் உடனடியாக கண் சுகாதாரம் தொடர்பான மூலோபாயத் திட்டமொன்றினை உருவாக்கி அதனை செயற்படுத்தவேண்டியதன் அவசியத்தினை அவர் வலியுறுத்தியுள்ளார்.

அதில் தெரிவிக்கப்பெற்றுள்ள விபரங்கள் பின்வருமாறு அமைகின்றன.

இலங்கையின் பல்வேறு சுகாதாரக் குறிகாட்டிகள் அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு ஒப்பானதாக காணப்படுகிற பொழுதும் கண் சுகாதாரக் குறிகாட்டிகள் பிராந்திய அண்டைநாடுகளினைவிடப் பின்னடைந்து காணப்படுவது தொடர்பில் அவர் இந்த கடிதத்தில் கரிசனையை வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கையின் கண் சிகிச்சை சேவைகள் முதனிலை சுகாதாரசேவைளுடன் ஒருங்கிணைக்கப்படாமலும் அவற்றின் ஒரு பாகமாக உள்வாங்கப்படாமலும் உள்ள நிலமையால் கண் பார்வை இழப்பு அல்லது பாதிப்பு அதிகரித்து செல்வதாகவும், குறிப்பாக வயது வந்தவர்களில் அதிகரித்து செல்வதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இதனால் வாழ்க்கைத்தரம், உற்பத்தித்திறன் என்பன பாதிக்கப்படுவதுடன் பார்வை இழந்தவர்களை அதிகளவில் பராமரிக்க வேண்டிய தேவை சமூகத்துக்கும், குடும்பங்களுக்கும் நாட்டுக்கும் ஏற்படுவது பெரும் சுமையாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமைகளிலிருந்து நாட்டினையும் மக்களினையும் மீட்டெடுக்க சுகாதாரக் கட்டமைப்பில் உடனடியாக கண் சுகாதார தொடர்பான மூலோபாயத் திட்டமொன்றினை உருவாக்கி அதனை செயற்படுத்தவேண்டியதன் அவசியத்தினை அவர் வலியுறுத்தியுள்ளார்.

இந்த கடிதத்தின் பிரதிகள் பிரதமர், சுகாதார அமைச்சர், பிரதி சுகாதார அமைச்சர், சுகாதார அமைச்சின் செயலாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வட மாகாண ஆளுநர் உள்ளிட்ட பல்வேறு தரப்பினருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே பல வழிகளில் பாராட்டுக்களைப் பெற்ற கண் வைத்திய நிபுணர் M. மலரவன் அவர்களுக்கு மேலும் பாராட்டுகளும் வாழ்த்துக்களும் குவிந்த நிலையில் அவருக்கு ஜனாதிபதி அவர்களிடமிருந்தும் தகுந்த பதில் கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.



# போராட்டத்தில் ஈடுபட்டு வரும் ஆனையிறவு உப்பள ஊழியர்கள் யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

ஆனையிறவு உப்பளத்தில் பணிபுரியும் ஊழியர்கள் பல்வேறு பிரச்சினைகளை சுட்டிக்காட்டி 22ம் திகதி வியாழக்கிழமை 9வது நாளாக போராட்டத்தை முன்னெடுத்து வரும் நிலையில் அன்றைய தினம் மாலை யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு சென்று முறைப்பாடுகளை பதிவு செய்துள்ளனர்.

மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில், குறித்த நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் குறித்த போராட்டத்தில் ஈடுபட்டு வரும் பணியாளர்கள் நான்கு பேர் யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அழைத்துச் செல்லப்பட்டு பல்வேறு பிரச்சனைகளை முன் வைத்து முறைப்பாட்டை பதிவு செய்துள்ளனர்.

ஆனையிறவு உப்பளத்தில் பணிபுரியும் ஊழியர்கள் பல்வேறு பிரச்சினைகளை சுட்டிக்காட்டி கடந்த புதன்கிழமை (14) முதல் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

குறித்த உப்பளத்தின் தற்போது உள்ள பொது முகாமையாளர், முகாமைத்துவ பிரிவினர், உதவி முகாமையாளர், மேற்பார்வையாளர்கள் உள்ளிட்ட பலர் தம்மை பழிவாங்குவது போன்றே செயற்படுகின்றனர்.

எமக்கு உரிய வகையில் வேலைகளை வழங்குவதில்லை. எமக்கான மருத்துவ வசதிகள் உப்பளத்தில் இல்லை. குடிநீர் பிரச்சனை காணப்படுகிறது. குடிநீர் வெளியே உள்ள தாங்கியில் இருந்து தான் உள்ளே எடுத்து செல்லவேண்டும்.

இந்த மாதம் தொடங்கி இதுவரை எமக்கு 4 நாட்களே வேலை வழங்கப்பட்டது. 10 நாட்கள் வேலை இல்லாமலே இருக்கின்றோம். இதை விட இந்த மாதம் வேலை செய்யாத ஊழியர்கள் கூட காணப்படுகின்றனர்.

மனித வலு இருக்கும் போது இயந்திர வலுவை பயன்படுத்துகின்றனர். வேலை செய்யும் எமக்கு சீருடைகள், பாதுகாப்பு கவசங்களோ வழங்கப்படுவதில்லை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் பாதிக்கப்பட்ட ஊழியர்களுக்கு நீதியை பெற்றுக்கொடுக்கும் வகையில் வியாழக்கிழமை (22) மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனம் பாதிக்கப்பட்ட ஊழியர்கள் சார்பாக நான்கு பேரை யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு அழைத்துச் சென்று முறைப்பாட்டை பதிவு செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட ஆனையிறவு உப்பள ஊழியர்கள் சார்பாக துரித விசாரணைகளை மேற்கொள்வதாக யாழ் மனித உரிமைகள் ஆணைக்குழு குறித்த ஊழியர்களிடம் தெரிவித்துள்ளது.



NISSAN | VILLAGE NISSAN

தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்

*DAA ROTATION



**25 SENTRA**
S CVT ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,695 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 KICKS PLAY**
S ULTRA-LOW
$69 WEEKLY | 39 MOS. LEASE $2,192 Down
+$1,000 60th Anniversary Cash

*DAA ROTATION



**25 ROGUE**
S AWD
0.99% | 30 MOS. LEASE
+$1,000 60th Anniversary Cash



Sajanthan Vijayakumar
SALES CONSULTANT
905.477.3337 647.631.9054
saj@villagenissan.com

NISSAN | VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com





# வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு விளக்கமறியல்! யாழ்சிறைக்கு மாற்றம்!



இலஞ்சம் வாங்கும் போது கைதுசெய்யப்பட்ட வவுனியா பூவரசங்குளம் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஐந்து இலட்சம் ரூபாய் இலஞ்சம் பெற முற்ப்பட்ட போது இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் 21ம் திகதி புதன்கிழமை மாலை கைது செய்யப்பட்டிருந்தார்.

கொழும்பில் இருந்து வருகை தந்த இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் அதிகாரிகளால் குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டிருந்தது.

கைது செய்யப்பட்ட வவுனியா பூவரசங்குளம் பொலிஸ்நிலைய பொறுப்பதிகாரி 22ம் திகதி அன்றையதினம் வவுனியா நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

அவரை எதிர்வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.


Carefirst Family Health Team

Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:


டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரபபவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca
11/24






TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடதய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5


Congratulation!
UTHAYAN INTERNATIONAL AWARD 2025
Logan Kanapathi
MPP | Markham-Thornhill
Tel: 905-305-1935
Email:
logan.kanapathico@pc.ola.org

# வெகு விமர்சையாக நடைபெற்ற ரொறன்ரோ "சக்தி நர்த்தனாலயா நுண்கலைக் கூட" த்தின் "நாட்டிய மாலிகா" பரதநாட்டிய விழா



கடந்த சனிக்கிழமையன்று 17ம் திகதி (17-05-2025) விற்பி நகரில் நடைபெற்ற "சக்தி நர்த்தனாலயா நுண்கலைக் கூட"த்தின் "நாட்டிய மாலிகா" பரதநாட்டிய விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.

"சக்தி நர்த்தனாலயா நுண்கலைக் கூட" த்தின் குருவும் நிறுவனருமான ஸ்ரீமதி ஜனனி ரவிசங்கருடன் இணைந்து அவரது குடும்பத்தினர் மற்றும் பெற்றோர்கள் மற்றும் நண்பரம்கள் இணைந்து ஏற்பாஹடு செய்த இந்த அற்புதமான நாட்டிய விழாவில் அனைத்து உருப்படிகளும் அழகாகவும் சலிப்பின்றி ரசிக்கக் கூடியதாகவும் அமைந்திருந்தன.

குறிப்பான அன்று மேடையேறிய "யாழ்ப்பாண நூலக எரிப்பும் அழிப்பும்" என்ற நாட்டியத்தில் அனைத்து மாணவிகளும் குரு ஸ்ரீமதி ஜனனி ரவிசங்கரும் பங்கெடுத்தனர்.

மேற்படி நடனம் தாயக உணர்வையும் எம் மண்ணின் பெருமையையும் நூலக அழிப்பின் துயரங்களையும் சிங்கள இனவாதப் போக்கை வர்ணித்தும் எழுதப்பட்ட கவிதை வரிகளுக்கு நடன மணிகள் நடனங்களை வழங்கினார்கள். அப்போது பார்வையாளர்கள் பக்கத்தில் பலரது கண்களிலிருந்து கண்ணீர் வடிந்ததையும் உணரக்கூடியதாக இருந்தது என்றால் அது மிகையாகாது. கவிதை வரிகளை கலைஞரும் எழுத்தாளருமான டாக்டர் போல் ஜோசப் அவர்கள் உணர்வோடும் மேடையில் சமர்ப்பணம் செய்தார்.

மாணவிகள் வழங்கிய "தில்லானா" நடனம், அழைகையும் அர்த்தத்தையும் உணர்த்தும் அற்புதத் தன்மை கொண்டதாக விளங்கியது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட நடன ஆசிரியையும் ஜனனி ரவிசங்கர் அவர்களது குருவுமாகிய ஸ்ரீமதி அற்புதராணி கிருபைராஜ், ஜனனி ரவிசங்கர் அவர்களையும் மாணவிகளையும் பாராட்டி தனது வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

விழாவின் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை அழகிய முறையில் தமிழிலும் ஆங்கிலத்திலும் வஞ்சித்தா சுஜன்தன் அவர்கள் தொகுத்து வழங்கினார்.

**படங்கள்: சத்தியன்**














கனடிய செய்திகள் Canadian News

# கனடிய குடிவரவு விண்ணப்பங்களை பரிசீலித்து முடிவு எடுக்கும் செயலாக்க நேரங்கள் மேலும நீடிக்கப்பட்டுள்ளன அதிகரித்துள்ளன

## இதனால் விண்ணப்பதாரிகளின் காத்திருப்பு நேரங்களும் அதிகரிக்கலாம் என அச்சம்




கனடிய குடிவரவுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களுக்கான செயலாக்க நேரங்கள் மேலும்நீடிக்கப்பட்டுள்ளன. தற்போதைய செயற்பாடுகளில் குறைவான பயன்பாடுகள் இருந்தபோதிலும், கனடாவிற்குள் இருந்து வாழ்க்கைத் துணைவர்களுக்கான நிரந்தர குடியிருப்புக்கான விண்ப்பங்களைப் பரிசீலிக்கும் செயலாக்க நேரங்கள் மற்றும் பல பிரிவுகள் கூட பல சிரமங்களை எதிர்கொள்வதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மொத்தத்தில் குடிவரவு விண்ணப்பங்கள் தொடர்பான முடிவுகளை எடுப்பது இனிமேல் மேலும் தாமதமாகலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த அக்டோபரில் அறிவிக்கப்பட்ட ஒட்டாவாவின் குறைக்கப்பட்ட குடியேற்ற அளவுகள் காரணமாக ஒரு குடிவரவு வழக்கறிஞர் கூறுகையில். மார்ச் மாத இறுதி நிலவரப்படி, குடிவரவுத் துறை அதன் வரிசையில் 1,976,700 நிரந்தர மற்றும் தற்காலிக குடியிருப்பு விண்ணப்பங்களைக் கொண்டிருந்தது, இதில் 779,900 உட்பட சேவை தரங்களை விஞ்சியது மற்றும் பின்னிணைப்பு என்று கருதப்படுகிறது. ஒரு வருடத்திற்கு முன்னர் 2.1 மில்லியனுக்கும் அதிகமான தொகையுடன் ஒப்பிடும்போது மொத்த எண்ணிக்கை ஏழு சதவீதம் குறைந்துள்ளது, பின்னிணைப்பு கிட்டத்தட்ட 900,000 ஆக இருந்தது.

ஆயினும்கூட, கனடாவிற்குள் இருந்து (ஆனால் கியூபெக்கிற்கு வெளியே) வாழ்க்கைத் துணைவர்கள் மற்றும் பொதுவான சட்டபூர்வமான வாழ்க்கைத் துணைகளுக்கான நிரந்தர வதிவிட விண்ணப்பங்களுக்கான செயலாக்க நேரம் 10 மாதங்களிலிருந்து 29 மாதங்களாக உயர்ந்துள்ளது 24 முதல் 36 மாதங்கள் வரை பெற்றோர் மற்றும் தாத்தா பாட்டிகளின் ஸ்பான்சர்ஷிப்கள் திறைமை மிக்க தகுதிகளுடன் குடியேறியவர்கள் 11 முதல் 20 மாதங்கள் வரை மாகாணங்களால் பரிந்துரைக்கப்பட்டனர்.

இதேவேளை கனடாவில் தங்குவதை நீடிக்க விரும்புவோர் சமர்ப்பித்த விண்ணப்பங்களை சமர்ப்பித்தவர்களுக்கு நீண்ட காத்திருப்பு நேரங்கள் எதிர்பார்க்கப்படுவதாகவும் வேறுவிண்ணப்பங்கள் நீடிப்புக்கு, 88 நாட்களிலிருந்து 161 நாட்கள் வரை ஆய்வு அனுமதிகளுக்கு, 55 நாட்களிலிருந்து 236 நாட்கள் வரை மற்றும் வேலை அனுமதிகளுக்கு, 101 நாட்களிலிருந்து 238 நாட்கள் வரை என அனைத்திலும் நீடிப்பு கால அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் இதற்கு காரணம் இலட்சக்கணக்கான விண்ணப்பங்கள் உள்ளதாக அறியப்படுகின்றது.

"நீங்கள் ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பித்தால், அது 120 நாட்களைக் காட்டக்கூடும், ஆனால் திடீரென்று அது 226 நாட்கள் வரை சுடும்" என்று கனேடிய குடிவரவு வழக்கறிஞர்கள் சங்கத்தின் தலைவர் தமரா மோஷர்-குசர் கூறினார். "செயலாக்க நேரம் தொடர்ந்து மாறுகிறது, எனவே நாம் எதிர்பார்ப்பது நடக்காது" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த அக்டோபரில் அறிவிக்கப்பட்ட மத்திய அரசின் குறைக்கப்பட்ட குடியேற்ற நிலைகளின் முடிவுகளில் இந்த உயரும் செயலாக்க நேரங்கள் குறைந்த பட்சம் உள்ளன, மேலும் அவை மாறிவரும் முன்னுரிமைகளை பிரதிபலிக்கின்றன என்று ஒரு ஒட்டாவா வழக்கறிஞர் கூறினார்.

வீட்டுவசதிகள் தொடர்பான நெருக்கடிகள் மற்றும் அரசாங்க சேவைகளுக்கு பணியாற்றும் உத்தியோகத்தர்கள் எண்ணிக்கை ஆகியவற்றைக் கருத்திற் கொண்டு ஒட்டாவா குடிவரவு அமைச்சு தனது வருடாந்திர நிரந்தர குடியிருப்பாளர்களை இந்த ஆண்டு 395,000 ஆகக் குறைத்து, 2026 இல் 380,000 மற்றும் 2027 இல் 365,000 வரை குறைத்துள்ளது.

இது கனடாவில் தற்காலிக வதிவிட மக்களின் விண்ணப்பம், சர்வதேச மாணவர்கள் மற்றும் வெளிநாட்டுத் தொழிலாளர்கள் உட்பட, இந்த ஆண்டு 445,901 மற்றும் 2026 ஆம் ஆண்டில் 445,662 ஆக குறைக்கிறது, அதே நேரத்தில் 2027 ஆம் ஆண்டில் 17,439 ஆக உயர்ந்துள்ளது. நாட்டின் ஒட்டுமொத்த மக்கள்தொகையில் அதன் விகிதத்தை 7.3 சதவீதத்திலிருந்து மூன்று ஆண்டுகளில் ஐந்து சதவீதமாக குறைப்பது என்பதும் குடிவரவுத்திணைக்களத்தின் தீர்மானம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

"அவர்களிடம் இந்த இலக்குகள் உள்ளன, அவர்கள் இந்த இலக்குகளை மீறிபணியாற்ற விரும்பவில்லை" என்று மோஷர்-குஸ்ஸர் கூறினார். "அவர்கள் விண்ணப்பங்களை பரிசீலிக்கும் காலத்தை மெதுவாக்குகிறார்கள், இதனால் அடுத்து அடுத்து வரும் விண்ணப்பங்கள் மேலும் அதிகரித்து அவர்களை சவால்களுக்குள் கொண்டு செல்கிறது." என்றும் அவர் விளக்கமளித்தார்.

ஆயினும்கூட, மற்றவர்களுக்கான செயலாக்க நேரங்கள் சீராகவே இருக்கின்றன. எக்ஸ்பிரஸ் நுழைவு அமைப்பு என்று அழைக்கப்படுபவை வழியாக நிர்வகிக்கப்படும் பொருளாதார குடிவரவு திட்டங்கள் இன்னும் ஆறு மாத ஆணையின் கீழ் செயலாக்கப்படுகின்றன, கனடாவுக்கு வெளியே சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வு மற்றும் பணி அனுமதி விண்ணப்பங்களுக்கான செயலாக்க நேரங்கள் மற்றும் பார்வையாளர் விசாக்கள் ஆண்டு முழுவதும் சற்று ஏற்ற இறக்கமாகவும் விசா இடுகையால் மாறுபடும்.

குடியேற்றத் துறை, பெரும்பாலான விண்ணப்பங்களை முதலில் வந்த, முதலில் வழங்கப்பட்ட அடிப்படையில் செயலாக்குகிறது, ஆனால் செயலாக்க நேரங்கள் குடியேற்ற இலக்குகள், தனிப்பட்ட நிகழ்வுகளின் சிக்கலான தன்மை மற்றும் விண்ணப்பதாரர்கள் தகவல்களுக்கான கோரிக்கைகளுக்கு எவ்வளவு விரைவாக பதிலளிக்கின்றன என்பது உள்ளிட்ட பல காரணிகளால் பாதிக்கப்படுகின்றன என்று கனடிய குடிவரவு அமைச்சு தெரிவித்துள்ளது.

"யாரோ கனடாவுக்கு வர முயற்சிப்பது போல் இல்லை, குடும்பம் மீண்டும் ஒன்றிணைத்தல் அல்லது படிப்பது அல்லது அப்படி ஏதாவது இருக்கலாம். அவர்கள் ஏற்கனவே இங்கே இருக்கிறார்கள்," என்று அவர் விளக்கினார். "அவர்கள் அந்தஸ்தின் நீட்டிப்புக்கு விண்ணப்பித்தால், அவர்கள் பராமரிக்கப்படும் அந்தஸ்தின் நன்மையைப் பெறுகிறார்கள். அரசாங்கத்தின் பார்வையில், அவர்கள் அந்தஸ்தைப் சரியாகப் பராமரித்திருந்தால், அவர்களுக்கு உண்மையில் ஒரு முடிவு தேவையில்லை."

"எனவே நீண்ட தாமதங்களை எதிர்கொள்ளும் விண்ணப்பதாரர்கள் இணையத்தின் வழியாக புதுப்பிப்புகளுக்கான விசாரணைகளை சமர்ப்பிப்பார்கள் அல்லது எம்.பி.க்களின் உதவியை நாடுகிறார்கள், இவற்றால் பெரும்பாலும் பயனில்லை. செயலாக்க நேரம் அதிகமாகிவிட்டால், ஒரு முடிவை எடுக்க குடியேற்றத்திற்கு உத்தரவிடுமாறு கனடாவின் உச்ச நீதிமன்றத்தை கேட்டுக்கொள்வதே வேறு உதவியாகும்." என்று பெரும்பாலான குடிவரவு சட்டத்தரணிகள் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்கள்.

# எங்கள் கிராமம்

---

*வர்த்தலை விளானென்ற வான்புகழ் கிராமம்*
*வளங்கள் பலவும் வாய்த்த கிராமம்*
*வருவோரைக் கரம்நீட்டி வரவேற்கும் கிராமம்*
*வளங்கள் குறைந்தோரை வாழவைக்கும் கிராமம்.*

*குளத்தடிப் பிள்ளையார் எங்கள் குலதெய்வம்*
*குறைகள் பலதீர்த்த குஞ்சரத் தலையன்*
*குன்றுபோல் குவிந்த மருதின் கீழே*
*குறுமுனி போலே குந்தியுள்ள தெய்வம்.*

*அகரம் கற்பித்த அமெரிக்க மிசன்பள்ளி*
*அடிகொடுத்து ஆட்சேர்த்த செல்லையா வாத்தியார்*
*அருமையாய் ஆடவைத்த இராசநாயகம் வாத்தியார்*
*அவனியில் அவர்களை மறக்க முடியுமா?*

*கணேசையர் என்ற கனவான் வாழ்ந்தமண்*
*கவிகள் பலர் கவிபாடிக் களித்தமண்*
*கலைஞர் பலர்வாழ்ந்த களங்கம் இலாமண்*
*கனிமரங்கள் காய்த்துக் குலுங்கும் கண்கொளாமண்.*

*மாநோன்பு காலத்து மணம்கமழும் சுண்டலையும்*
*மார்கழி மாதத்துத் திருவெம்பாப் பஜனையும்*
*மாங்காய்க்கு அன்னப்பிள்ளை மாமியையும்*
*மாமாங்கம் பலகடந்தும் மறக்க முடியுமா?*

*சித்திரைப் பௌர்ணமிச் சிறப்பான கஞ்சியும்*
*சித்தி விநாயகர் திருவிழாக் காலமும்*
*சிறுவயதில் தெப்பம் விட்ட குளத்தையும்*
*சிங்காரமாய்த் தாவியாடிய மருதையும் மறக்கலாமா?*

*நினைவில் நிற்கும் வேவிவாத்தியார் விளாம்பழம்*
*நினைத்தாலே இனிக்கும் அன்னபாக்கியம் பலாப்பழம்*
*நிதானமாய்த் தமிழ்ப்பேசும் துரைச்சாமி மாம்பழம்*
*நினைத்தாலே நாவூறும் இனிஎங்கே கிடைக்கும்?*

*சித்திரைப் புத்தாண்டு விளையாட்டுப் போட்டியும்*
*சிறந்தகலை நிகழ்ச்சியுடன் பரிசளிப்பு விழாவும்*
*சிறப்பான வைரவகோவில் விளையாட்டு மைதானமும்*
*சிந்தித்துப் பார்த்தால் சிந்தை கலங்குதையா.*

*முச்சந்தியில் இருந்த முத்தான சங்கக்கடை*
*முழுநேரம் இயங்கிய புற்றுநோய்விடுதி*
*முழுமூச்சாய் வாலிபரால் கட்டிய நூல்நிலையம்*
*முழுவதும் இழந்து முகவரி தொலைத்தோம்*

*மாதர்நலம் காத்த மாதர் கட்டடம்*
*மாபெரும் சாதனை செய்த மாதர்சங்கம்*
*மாட்சிமை நிகழ்ச்சிகள் பலகண்ட மண்டபம்*
*மாலை இழந்த மங்கைபோல் இருப்பதேன்?*

*சொர்க்கம் போலிருந்த சொந்தக் கிராமம்*
*சொந்தம் இழந்து சோர்ந்து போனதேன்?*
*சொல்லாமல் வந்த துயரமான யுத்தம்தானே?*
*சொல்லியழ முடியவில்லை சொந்தவூரில் ஆருமில்லை.*

---

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
*(416) 844-7453*


UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL 2025
உதயன் சர்வதேச விருது விழா 2025
UTHAYAN
உதயன்
விருது
UTHAYAN AWARD
Uthayan International Awards-2025
Date: Saturday, June 14th, 2025
Time: 6:00 PM
Venue: The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4
This Year's Awards Are:
இவ்வருடத்திற்குரிய விருதுகள்
Uthayan Literary and Artistic Exuberance Award
Uthayan Inter-Communal Relationship Award
Uthayan Business Entrepreneur Award - Ontario
Uthayan Business Entrepreneur Award - Quebec
Uthayan Leadership Award
Uthayan Youth Icon Award
Uthayan Lifetime Achievement Award - Sri Lanka
Uthayan Lifetime Achievement Award - Tamil Nadu
For More Information: 416-732-1608 / 647-762-9512




# நிஜ முகம் காட்டும் “வேடதாரிகள்”

***“தேசிய மக்கள் சக்தி என்ற மிதவாத முகமூடியுடன் மக்கள் முன் தோன்றி ஆட்சியை கைப்பற்றியவர்கள் இன்று அந்த ஆட்சியை தக்க வைக்க, சிங்கள வாக்குவங்கியை பாதுகாக்க தமது முகமூடியை கழற்றி பழைய கடும்போக்குவாத, இனவாத ஜே.வி.பி.யினராக தமது ஆட்டத்தை தொடங்கியுள்ளனர். இந்த ஆட்டம் ஜே.வி.பி. - என்.பி.பி.க்கிடையில் பிளவுகளையும் ஏற்படுத்தியுள்ளது”***

**------------------------------------------------------ - கே. பாலா ----**

இலங்கையில் வரலாற்று சாதனைகளுடன் ஆட்சியைக்கைப்பற்றி அரியணை ஏறியுள்ள இனவாத ஜே.வி.பி.-மிதவாத தேசிய மக்கள் சக்திக்கிடையிலான மோதல் போக்கும் விரிசலும் தொடர்ந்தும் அதிகரித்து வருவதனை ஜே.வி.பி-தேசியமக்கள் சக்தி தலைவரான ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் ஜே.வி.பி.யின் 60 ஆவது ஆண்டு நிறைவு தினக் கூட்ட உரை மீண்டுமொரு தடவை உறுதிப்படுத்தியுள்ளதுடன் ஜனாதிபதி அநுரகுமார தலைமையில் ஒரு அணி ஜே.வி.பி. சார்பு கடும்போக்குவாத இனவாத அணியாகவும், பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் இன்னொரு அணி மிதவாதப் போக்குடைய “கற்றோர்” அணியாகவும் பிளவுபடத் தொடங்கியுள்ளது.

ஆட்சியிலுள்ள ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்திக்கிடையிலான மோதல்போக்கும் விரிசலும் முதலில், தங்களது அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பளம், சலுகைகள், வாகனங்கள், எரிபொருள், ஊழியர்கள் போன்றவற்றைப் பெற மாட்டார்கள் என்ற ஜே.வி.பி.யின் அறிவிப்புடன் ஆரம்பமானது. முழுநேர ஜே.வி.பி உறுப்பினர்கள் அத்தகைய சலுகைகள் இல்லாமல் வாழ முடிந்தாலும், உயர்மட்ட சம்பளம், வேலைகள் மற்றும் சலுகைகளை ஒதுக்கி வைத்துவிட்டு பாராளுமன்றத்திற்கு வந்த தேசிய மக்கள் சக்தியிலுள்ள “கற்றோர்” குழுவினருக்கு இது பெரிய பிரச்சினையாக மாறியது.

பாராளுமன்றத்தில் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) தேசிய மக்கள் சக்தி கூட்டணிக்கு (என்.பி.பி.) 159 ஆசனங்கள் கிடைக்கப் பெற்ற நிலையில், இவற்றில் 107 பேர் தேசிய மக்கள் சக்தியையும் 52 பேர் நேரடியாக ஜே.வி.பியையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர். எனினும் தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் 107 பாராளுமன்ற உறுப்பினர்களில் பெரும்பான்மையானவர்கள் கலாநிதி பட்டம் மற்றும் பேராசிரியர் பட்டங்களை வகிப்பவர்கள். அதே போல் பெரிய நிறுவனங்கள் மற்றும் நிறுவனங்களில் உயர் பதவிகளை வகித்து அதிக சலுகைகள் மற்றும் அதிக சம்பளத்துடன் பணியாற்றிய நிலையில் தற்போது தங்களுடைய பாராளுமன்ற உறுப்புரிமைக்காக அவற்றை கைவிட்டுள்ள நிலையில் பாராளுமன்ற சலுகைக-ளையும் தியாகம் செய்யுமாறு பணிக்கப்பட்டனர். அரசின் ஜனாதிபதி பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களின் சம்பளங்கள் கூட ஜே.வி.பி. கட்சியின் கணக்கிற்கே செல்வதனால் அரசுக்குள் இரு அணிகளுக்குமிடையில் முதலில் முரண்பாடுகள் தோற்றம் பெற்றன.

இரண்டாவதாக இந்தியாவுக்கு அநுரகுமார தலைமையிலான ஜே.வி.பி. - தேசிய மக்கள் சக்தி அரசு விரும்பியோ விரும்பாமலோ கொடுக்கும் முக்கியத்துவம் வழக்கமாக சீனா ஆதரவுடன் இயங்கும் ஜே.வி.பி.யில் உள்ள இந்திய எதிர்ப்புணர்வாளர்களை சினமடைய வைத்துள்ள நிலையில் அண்மைய இந்தியப்பிரதமர் நரேந்திரமோடியின் இலங்கைக்கான விஜயம் ஜே.வி.பி.- தேசிய மக்கள் சக்திக்குள் புகைந்து கொண்டிருந்த முறுகலை, பிளவுகளை மேலும் தீவிரப்படுத்தியது. தீவிர இந்திய எதிர்ப்புணர்வாளரும் இலங்கையின் நிறைவேற்றதிகார ஜனாதிபதியுமான அநுரகுமார திசாநாயக்க, தான் ஜனாதிபதியாக பதவியேற்றவுடன் இராஜதந்திர அழுத்தங்கள் காரணமாக முதல் நாடாக இந்தியாவுக்கு மேற்கொண்ட உத்தியோகபூர்வ விஜயம் அரசுக்குள் ஏற்படுத்திய விரிசலை விடவும் இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம் ஜே.வி.பி. -தேசிய மக்கள் சக்திகிடையிலான விரிசலை மேலும் அதிகப்படுத்தியது.

இவ்வாறான நிலையில் தான் ஏறுமுகமாக இருந்த ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தியின் மக்கள் ஆதரவு நடந்து முடிந்த உள்ளூராட்சிசபைகளுக்கான தேர்தலில் இறங்குமுமானதால் அதிர்ச்சியடைந்த ஜே.வி.பி.செயலாளர் நாயகம் ரில்வின் சில்வாவும் கட்சியின் முக்கியஸ்தர்களாகவுள்ள ஜே.வி.பி அமைச்சர்களும் கட்சித்தலைவரான அநுரகுமார திசாநாயக்கவுக்கு விடுத்த எச்சரிக்கையும் கொடுத்த நெருக்கடியும் தான் ஆரம்பத்தில் மிதவாதப் போக்குடைய தேசிய மக்கள் சக்தி அணி சார்பாக இருந்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவை கடும்போக்குவாத, இனவாத அணிப் பக்கம் தற்போது சாய வைத்துள்ளது.

இதன் விளைவாகவே ஜே.வி.பி.யின் வரலாற்றை மறந்து செயற்பட முடியாதென, ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க கொழும்பில் அண்மையில் நடந்த ஜே.வி.பியின் 60 ஆவது ஆண்டுநிறைவு தினக் கூட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் பிரதமர் ஹரிணி அமரசூரியவை வைத்துக்கொண்டு பகிரங்கமாக அறிவித்தார். ஜனாதிபதி இந்த அறிவிப்பை விடுத்த போது ஜே.வி.பி பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா சிரித்த சிரிப்பின்மூலம் ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்ற தேர்தலுக்குப் பின்னர் தேசிய மக்கள் சக்தியின் மிதவாத போக்குடன் பயணித்த ஜனாதிபதி அநுரகுமாரவை தற்போது ஜே.வி.பி.யின் கடும்போக்குவாத, இனவாத பிடிக்குள் கொண்டுவந்துள்ள வெற்றிக் களிப்பைக் காண முடிந்தது.

இந்த நிகழ்வில் மேலும் உரையாற்றிய ஜனாதிபதி, வேதனைகள் பலவற்றுடனான வரலாற்றை கொண்ட கட்சியாக ஜே.வி.பி. இருந்துள்ளது. கஸ்டங்கள், சித்திரவதைகள், வேதனைகள், தோல்விகள் அதேபோன்று காட்டிக்கொடுப்புகள் மற்றும் சூழ்ச்சிகளையும் கண்டுள்ள கட்சியாக இருந்தது. இவற்றுக்கு சமாந்திரமாக வெற்றிகளையும் நாங்கள் கண்டுள்ளோம். சவால்களுக்கு மத்தியில் இந்த இயக்கத்தை கைவிடுவதற்கு எவ்வளவோ சந்தர்ப்பங்கள் இருந்தன. ஆனால் வெற்றியென்ற எதிர்பார்ப்புடன் 60 வருடங்களாக பயணித்துள்ளோம். இதனை சாதாரண அரசியல் இயக்கங்களால் செய்ய முடியாது. இப்போது நாங்கள் மிகவும் பலமாக மக்களிடையே முன்வந்துள்ளோம். எமது துணிச்சலே இவற்றுக்கு காரணம்.

இப்போது எதிர்க்கட்சியோ பல்வகை கட்சியாகவே இருக்கின்றது. அந்த பல்வகை கட்சிகள் கூடினாலும் அவர்களால் வெற்றி பெற முடியாது. பிரிந்துநின்று வாக்குகளை கேட்டு இப்போது சபையில் ஒன்றாகி சபைகளை அமைக்க முயற்சிக்கின்றனர். வெட்கமில்லையா? வேண்டுமென்றால் பல்வகை எதிர்க்கட்சிகள் ஒன்றாக ஒருபக்கத்திலும் நாம் ஒரு பக்கத்திலும் அரசியல் செய்வோம். அப்போது மக்கள் தமது அரணாக எம்மையே தெரிவு செய்வர். ஒரு சபையையும் வெற்றி பெறாமல் ஜனாதிபதியாக முடியுமா? அவர்கள் தங்களை ஜே.வி.பி என்று நினைக்கின்றனர். ஆனால் அவ்வாறான வெற்றியை ஜே.வி.பியால் மட்டுமே பெற முடியும். என ஜே.வி.பி புராணமே பாடியுள்ளார்.

ஜே.வி.பி.யின் படுகொலைகள், வன்முறைகள் உச்சம் தொட்ட நிலையில் ஜனாதிபதியாக பிரேமதாச பதவியேற்ற பின்னர் இரும்புக்கரம் கொண்டு ஜே.வி.பி. அடக்கப்பட்டது, அழிக்கப்பட்டது. இதன்பின்னர் ஜே.வி.பி. தலைமைத்துவம் 1994இல் மீண்டும் ஒன்றுகூடி, ஆளும் வர்க்கத்தின் ஒரு பிரிவினரின் ஆதரவுடன், அதன் சோசலிச வாய்ச்சவடால்களை பெருமளவில் கைவிட்டுவிட்டு, தமிழ் மக்களுக்கு எதிரான கொடூரமான இனவாத யுத்தத்தை ஆதரித்ததுடன், தம்மை ஒரு பாராளுமன்றக் கட்சியாக மாற்றிக்கொண்டது. இவ்வாறான நிலையில்தான் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையிலான வடக்கு, கிழக்கு இணைப்பை நீதிமன்றத்தினூடாக பிரித்ததுடன் இராணுவத்திற்கு ஆட்சேர்ப்பு செய்து தமிழ் மக்களுக்கு எதிரான இறுதி அழித்தொழிப்பு யுத்தத்தை ஆரம்பிக்கவும் முன்நின்றது.

போருக்கான அதன் ஆதரவு மற்றும் பல்வேறு முதலாளித்துவ அரசாங்கங்களில் அதன் பங்கேற்பு அல்லது அரசியல் ஆதரவளிப்பினால் செல்வாக்கிழந்து போன ஜே.வி.பி. 2015 இல் தேசிய மக்கள் சக்தி என்ற கட்சியை ஸ்தாபித்தது. ஜே.வி.பி.யின் கடந்த கால ஆயுத வன்முறை, படுகொலை அடையாளத்தை மறைக்கும் நோக்கிலேயே, அநுரகுமாரவும் அவருக்கு ஆலோசனைகளை வழங்கும் கற்றோர்களும் தேசிய மக்கள் சக்தி என்ற புதிய முகமூடியைப் போட்டுக் கொண்டார்கள். சிவில் சமூக அமைப்புக்கள் சிலவற்றையும், கல்வியாளர்களையும் புதிதாக இணைத்துக் கொண்டு தேசிய மக்கள் சக்தியாக உருமாறி கடந்த ஜனாதிபதித் தேர்தலையும் பாராளுமன்றத் தேர்தலையும் எதிர்கொண்டு வெற்றிபெற்று இன்று ஆட்சியாளர்களாகியுள்ளனர்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவுக்கு தேசிய மக்கள் சக்தியின் மிதவாத போக்கே காரணம் என்பது ஜே.வி.பி. தரப்பின் குற்றச்சாட்டு. சிங்கள தேசியவாதம் முன்னிலைப்படுத்தப்பட வேண்டும் என்பதே அவர்களின் வாதம். அதனால் தான் தற்போது ஜே.வி.பி. அமைச்சர்கள் இனவாதம் கக்கத் தொடங்கியுள்ளனர். தமிழினவாதம் தலைவிரித்தாடுவதாக குற்றம்சாட்டத் தொடங்கியுள்ளனர். தமிழ் அரசியல் கைதிகள் எவருமே இல்லை என்கின்றனர். வடக்கில் 6000 ஏக்கர் கரையோரக் காணிகளை ஆக்கிரமிக்கும் வர்த்தமானியை வெளியிட்டுள்ளனர்.

கடந்த மாவீரர் தின நினைவு நிகழ்வுக்கெல்லாம் அனுமதி கொடுத்தவர்கள் இன்று இனப்படுகொலைக்கான கனடா நினைவுச் சின்னத்திற்கு கனடா தூதுவரை அழைத்து கடும்கண்டனம் தெரிவிக்கினறனர். இனப்படுகொலை என்பது கட்டுக்கதை என்கின்றனர். சர்வதேச விசாரணைகளை, தலையீடுகளை ஏற்க முடியாதென்கின்றனர். தமிழ் தேசியக்கட்சி வன்னியில் கசிப்பும் பணமும் கொடுத்தே வாக்குகளைப் பெற்றதாக அமைச்சர்கள் புலம்புகின்றனர். ஆனையிறவு உப்புக்கு தமிழ் பெயர் வைக்க முடியாது. பெயரை விட்டு உப்பின் ருசியைப்பாருங்கள் என்கின்றனர். வடக்கின் உப்பு வடக்கிற்கு என்ற கோரிக்கைக்கு இடமில்லை என்கின்றனர். போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்களை அடக்க, ஒடுக்கத் தொடங்கியுள்ளனர் ஜனாதிபதி அடிக்கடி மகாநாயக்கர்களை சந்தித்து மண்டியிடுகின்றார்.

உள்ளூராட்சி சபைகளில் நாம் வெற்றி பெற்றுள்ள இடங்களில் மக்கள் ஆணைக்கு எதிராக சவால்விடுக்கும் வகையில் எவராவது ஆட்சியமைக்க முயன்றால் நாங்கள் பாராளுமன்ற மற்றும் அரசியலமைப்பு அதிகாரங்களை பயன்படுத்துவோம் என ஜனாதிபதி எச்சரிக்கின்றார். நாம் வெற்றிபெற்றுள்ள உள்ளூராட்சி சபைகளில் எதிர்க்கட்சிகள் ஏதேனும் முறையில் ஆட்சியமைப்பார்களாக இருந்தால் மத்திய அரசாங்கத்தினால் அவ்வாறான சபைகளுக்கு நிதி வழங்கப்படாது. அவ்வாறு எதிர்க்கட்சிகள் ஆட்சியமைக்கும் சபைகளில் அதிகாரிகளுக்கு சம்பளம் வழங்கப்பட்டாலும், அந்தப் பிரதேசங்களின் அபிவிருத்திக்காக நிதி வழங்கப்படாது என்று பாராளுமன்ற சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க மிரட்டுகின்றார்.

எனவே தேசிய மக்கள் சக்தி என்ற மிதவாத முகமூடி அணிந்து “மாற்றம்” என்ற வேஷத்துடன் மக்கள் முன் தோன்றி ஆட்சியை கைப்பற்றியவர்கள் இன்று அந்த ஆட்சியை தக்க வைக்க தமது முகமூடியை கழற்றி வேஷத்தை கலைத்து பழைய கடும்போக்குவாத, இனவாத முகத்தைக்காட்டத் தொடங்கியுள்ளனர்.

---------------------------------------------------------------------------------

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னார் பேசாலை 50 வீட்டு திட்ட கடற்கரையோர பகுதியில் கணிய மணல் அகழ்வுக்கு நில அளவை செய்ய முயற்சி

## பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலையீட்டால் திருப்பி அனுப்பப்பட்ட குழுவினர்

- எஸ்.ஆர்.லெம்பேட் (19-05-2025)




மன்னார் பேசாலை 50 வீட்டு திட்ட கடற்கரையோர பகுதியில் தனியாருக்குச் சொந்தமான காணியில், 19ம் திகதி அன்றையதினம் திங்கட்கிழமை மதியம் கணிய மணல் அகழ்வுக்கான நில அளவை முன்னெடுக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட நிலையில் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலையீட்டினால் குறித்த நடவடிக்கை கைவிடப்பட்ட நிலையில், நில அளவைக்கு என கொழும்பு தலைமையகத்தில் இருந்து வருகை தந்தவர்கள் திரும்பிச் சென்றுள்ளனர்.

மன்னார் பிரதேச செயலாளரினால் கரையோர பாதுகாப்பு திணைக்களத்தின் அனுமதியும், நீரியல் வளத்துறை திணைக்களத்தின் அனுமதியும் பெற்றுக் கொண்டு நில அளவை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை விடுக்கப் பட்டிருந்த போதும், அதற்கு மாறாக அவர்கள் மன்னாரில் இருக்கும் நில அளவை திணைக்களத்திற்கு மாறாக கொழும்பு தலைமையகத்தில் உள்ள நில அளவை திணைக்களத்தில் இருந்து ரோன் மூலம் இப் பிரதேசத்தை அளப்பதற்கு குறித்த பகுதிக்கு சென்றுள்ளனர்.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியத்தின் கவனத்திற்கு கொண்டு சென்ற நிலையில், பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன், மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார், மீனவ அமைப்பு, பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் குறித்த பகுதிக்கு சென்றிருந்தனர்.

குறித்த நில அளவை திணைக் களத்தினர் மாஸ் மினரல் நிறுவனத்தினால் அழைத்து வரப்பட்ட நிலையில் அவர்கள் இங்கு வந்து நில அளவையை மேற்கொள்ள நடவடிக்கை முன்னெடுத்ததாக மனித உரிமைகள் செயற்பாட்டாளர் அருட்தந்தை எஸ்.ஜெயபாலன் குரூஸ் அடிகளார் தெரிவித்தார்.

உரிய முறையில் எவ்வித அனுமதியும் பெற்றுக் கொள்ளாமல் குறித்த பகுதிக்கு வருகை தந்து ரோன் கேமரா மூலம் நில அளவையை மேற்கொள்ள நடவடிக்கை களை குறித்த குழுவினர் முன்னெடுத்தனர்.

இந்த நிலையில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்ட நிலையில், குறித்த விடயம் தொடர்பாக இம்மாத இறுதியில் மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட உள்ளதாகவும், அதன் பின்னர் இவ்விடயம் குறித்து தீர்மானம் எடுக்கப் பட்டதன் பின்னர் குறித்த நடவடிக்கையை தொடர்வதா? இல்லையா என்பது குறித்து முடிவெடுக்கப் படும் என தெரிவிக்கப் பட்ட நிலையில், நிலையில் கொழும்பில் இருந்து வருகை தந்த நில அளவை திணைக்களத்தினர் குறித்த நடவடிக்கையை கை விட்டுச் சென்றுள்ளனர்.

இதேவேளை குறித்த பகுதிக்குச் சென்ற மன்னார் மாவட்ட பிராந்திய ஊடகவியலாளர்களுடன் குறித்த குழுவினர் முரண்பாட்டில் ஈடுபட்ட தெரிய வருகிறது.

எதிர்வரும் 28 ஆம் திகதி இடம் பெற உள்ள மாவட்ட அபிவிருத்திக் குழு கூட்டத்தில் நில அளவைக்கான அனுமதியை வழங்கப் போவதில்லை.

இத்திட்டம் நடைமுறைப்படுத்த படக் கூடாது. இதனால் மன்னார் தீவு முழுமையாக பாதிக்கப்படும்.எனவே கரையோர மணல் அகழ்வுக்கு மன்னார் மக்கள் ஒருபோதும் அனுமதி வழங்க மாட்டார்கள் என பொது அமைப்புக்களின் ஒன்றிய தலைவர் வி.எஸ்.சிவகரன் தெரிவித்தார்.

# மன்னார் தீவு வேகமாக அழிவு நிலைக்கு தள்ளப்பட்டு கொண்டு வருவதனால் மக்கள் ஒருபோதும் துணை நிற்க கூடாது

## மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.மாக்கஸ் அடிகளார்




- எஸ்.ஆர்.லெம்பேட் (21-05-2025)

மன்னார் மாவட்டத்தில் மன்னார் தீவு திட்டமிட்டு அழிக்கப்பட்டு வருகிறது.மன்னார் தீவு வேகமாக அழிவு நிலைக்கு தள்ளப்பட்டு கொண்டு வருகிறது. அதற்கு அதிகாரிகளும் அரச சார்பற்ற நிறுவனங்களும் பல தொழில் நிறுவனங்களும் முன் நின்று செயல்பட்டு வருகிறது. இதற்கு மக்கள் ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்க கூடாது என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ். மாக்கஸ் அடிகளார் தெரிவித்துள்ளார்.

மன்னார் பிரஜைகள் குழுவில் 21-05-2025 புதன்கிழமை காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மக்களின் எவ்வித அனுமதியும் இன்றி கணிய மணல் அகழ்வு நடவடிக்கை மற்றும் காற்றாலை மின் உற்பத்தி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

குறித்த நடவடிக்கைகளுக்காக மக்களினுடைய காணிகள் சட்டவிரோதமாக அபகரிக்கப்படுவதனையும் மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் வகையில் செயல்படுவதையும் காணக்கூடியதாக உள்ளது.

இதனால் மக்களினுடைய வாழ்வாதாரமும், எதிர்காலமும் பாதிக்கப்படும் என சூழலியலாளர்கள் கருத்துக்கள் தெரிவித்துள்ளனர்.

எனினும் மக்களின் எதிர்கால பிரச்சனைகளை உள்வாங்காமல், அரச திணைக்களங்களின் ஆதரவுடன் பல நிறுவனங்கள் மக்களுக்கு எதிராக செயல்பட்டு வருகிறது.

மக்களை அழிவிலிருந்து காப்பாற்றாது, இலாபத்தை மாத்திரம் கருத்தில் கொண்டு செயல்படும் பல்தேசிய நிறுவனங்கள் மக்களின் வாழ்விடங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்து கின்ற வகையில் செயல்பட்டு வருகிறது.

இவ்வாறு வருகின்ற எந்த நிறுவனங்களுக்கும் மக்கள் எவ்வித உதவிகளையும் வழங்க வேண்டாம். இரண்டு கணிய மணல் அகழ்வு நிறுவனங்களும், மூன்று காற்றாலை மின் உற்பத்தி நிறுவனங்களும், மன்னார் மக்களுக்கு எதிராக மிக வேகமாக நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

குறித்த நிறுவனங்கள் பலரை பணம் கொடுத்து வாங்கும் நிலையையும் ஏற்படுத்தி உள்ளனர். ஏழ்மை நிலையில் உள்ள மக்களையும் ஏமாற்றி மக்களின் வாழ்வாதாரத்திற்கு தாம் கை கொடுப்பதாக கூறி மக்களை இ திட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையிலும் அவர்களின் செயல்பாடுகள் அமைந்துள்ளது.

மேலும் மக்களின் காணிகளை அதிக பணம் கொடுத்து வாங்கி காணியை தமக்கு சொந்தமாக்கிக் கொண்டு வாழ்விடங்களை பறிக்கும் ஒரு நிலையையும் ஏற்படுத்தி வருகின்றனர்.

எனவே மன்னார் மாவட்ட மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து இதற்கு எதிராக போராட முன் வர வேண்டும்.மக்கள் குறித்த திட்டங்களுக்கு ஒரு போதும் அனுமதியை வழங்கக் கூடாது என கேட்டுக் கொள்ளுகின்றேன்.

# மன்னார் அச்சங்குளம் கடற்கரை பிரதேசத்தில் சூட்டுக் காயங்களுடன் கடற்படை சிப்பாயின் சடலம் மீட்பு



- எஸ்.ஆர்.லெம்பேட் (22-05-2025)

மன்னார் - நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட அச்சங்குளம் கடற்கரை பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் கடற்படை சிப்பாய் ஒருவரின் சடலம் ஒன்று 22ம் திகதி வியாழக்கிழமை அன்று காலை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

குறித்த சிப்பாய் தன்னைத்தானே சுட்டு உயிரை மாய்த்துக் கொண்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

குறித்த சம்பவமானது அச்சங்குளம் கடற்கரை ஓரத்தில் அமைக்கப்பட்ட கடற்படையின் கண்காணிப்பு காவலரணில் அன்று வியாழன் காலை 10 மணியளவில் இடம் பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

சம்பவ இடத்திற்கு முதல் கட்ட விசாரணைகளுக்காக முருங்கன் பொலிஸார், தடயவியல் நிபுணர்கள், சென்று பார்வையிட்டனர்.

பின்னர் மன்னார் மாவட்ட நீதிபதி வருகை தந்து சடலத்தை பார்வையிட்டு விசாரணைகளின் பின்னர் இன்று மாலை மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

உயிரிழந்த கடற்படை சிப்பாய் 37 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தை என தெரிய வருகிறது.

குறித்த கடற்படை சிப்பாய் வங்காலை மற்றும் அச்சங்குளம் கடற்படை முகாமில் பணியாற்றி உள்ளார் எனவும் தெரியவருகின்றது.

இவரது மரணத்திற்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை. மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# காட்டுமிராண்டித்தனமாக செய்யப்படுபவர்களை தடுத்து நினைவேந்தலுக்கு ஒத்துழைக்க வேண்டும் என்கிறார் என்.வி.சுப்பிரமணியம்!

பு. கஜிந்தன்



எமது நாட்டில் 30 வருடங்களுக்கு மேலாக நடைபெற்ற போரில் உயிர்நீத்தவர்களை நினைவுகூரும் மூகமாக இம்முறை நினைவேந்தல் செய்வதற்கு எமது மக்கள் கொழும்பு - வெள்ளவத்தையில் ஏற்பாடு செய்திருந்தனர். அந்த நினைவேந்தலை குழப்பும் வகையில் சிங்கள இனவெறிபிடித்தவர்களின் கைக்கூலிகள் செயற்பட்டிருந்தமை மிகவும் வேதனைக்குரிய விடயம் என அகில இலங்கை தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி.சுப்பிணமணியம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், அனுமதி இல்லாமல், சிங்கள மக்களே இல்லாத வட பகுதியில் பல விகாரைகளை கட்டுகின்றார்கள். தனியாரின் காணிகளை அடாத்தாக அபகரித்து அதில் விகாரை கட்டுகின்றீர்கள். அதனை கேட்க வந்தால் காவல்துறையை வைத்து மிரட்டுகின்றீர்கள்.

இறந்துபோன பிள்ளைகளை நினைவுகூருவதற்கு இந்த அரசாங்கத்தில் அனுமதி இல்லை. சமத்துவம், சமாதானம் என்று சொல்லிக்கொண்டு இருக்கின்ற ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவின் கட்சிக்கு மக்கள் நம்பி வாக்களித்துள்ள நிலையில், இறந்தவர்களை நினைவுகூருவதை தடுப்பது எந்த வகையில் நியாயம் என்று எனக்கு தெரியவில்லை.

நாமும் இந்த இலங்கை நாட்டு மக்கள் என்ற வகையில், நாட்டின் எந்த இடத்திலேயாவது இந்த நினைவேந்தலை வருடா வருடம் செய்வதற்கு இந்த அரசாங்கம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எல்லோருக்கும் இருக்கும் சுதந்திரம் போல எமக்கும் சுதந்திரத்தை தந்து நினைவேந்தலை செய்வதற்கு ஆவன செய்ய வேண்டும்.

இவ்வாறு காட்டுமிராண்டித்தனமாக செயல்படுபவர்களை கட்டுப்படுத்தி, கைது செய்து இவ்வாறான செயற்பாடுகளை செய்ய விடாது தடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் பொறுப்பற்ற செயலினால் நோய் பரவும் அபாயம்!



வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் பொறுப்பற்ற செயலினால் அந்த பிரதேசத்தில் நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது!

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகமும் அதற்கு பொறுப்பான பிரதேச செயலாளரும் டெங்கு நோய் பரவுவதற்கு காரணமாக இருப்பதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.


வடமராட்சி கிழக்கு பிரதேச செயலக நுழைவாயிலில் இருக்கும் பாதுகாப்பற்ற குப்பை தொட்டியில் உத்தியோகத்தர்கள் குப்பைகளை வீசி செல்வதால் மாடுகள் நாய்கள் அந்த குப்பைத் தொட்டியை அலங்கோலம் செய்து வருகின்றன.

கடந்த இரண்டு நாட்களாக விடுமுறை நாள் என்பதால் 19ம் திகதி திங்கட்கிழமை பணிக்கு வந்த அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோர் குறித்த குப்பையை கண்டும் காணாமலும் விட்டுச் சென்றுள்ளனர்.

பிரதேச செயலகம் அமைந்திருக்கின்ற பகுதியில் வைத்தியசாலை, உணவகம், காவல் நிலையம், சமூர்த்தி நிலையம், வங்கி, பிரதேச சபை போன்றன காணப்படுவதால் அதிகளவான மக்கள் குறித்த இடத்திற்கு அடிக்கடி வந்து போகிறார்கள்.

குறித்த குப்பையில் இருந்து துர்நாற்றம் வீசி வருவதால் நாய்கள் குப்பையை கிளறி வருகின்றன. மக்கள் நாற்றம் தாங்க முடியாமல் கக்குட்டைகளினால் தங்கள் மூக்குகளை மறைத்துச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளதாக செய்தியாளர்கள் அறிவித்துள்ளார்கள்.

தமது அலுவலகத்திற்கு முன்னால் காணப்படும் குப்பையை சுத்தம் செய்ய முடியாத அரச உத்தியோகத்தர்கள் எவ்வாறு சமூக அக்கறையுடன் சேவை செய்வார்கள் என்றும் அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ள அப்பகுதி மக்கள். யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருக்கும் வட மாகாண ஆளுனருக்கும் கடிதங்களையும் புகைப்படங்களையும் அனுப்பியுள்ளனர். எனவும் அறியப்படுகின்றது.




# ஆஸ்திரேலியா சர்வதேச விருது வழங்கும் விழாவில் சிறந்த நடிகர் விருதைப் பெற்றுள்ள செல்வின் தாஸ்!

ஆஸ்திரேலியா சிட்னி AZONWAY PICTURES செல்வின் தாஸ் வழங்கும் பாரம்பரிய கூத்து கலைஞர்களின் இன்றைய டிஜிட்டல் யுக போராட்டத்தை சித்தரிக்கும் முழு நீள திரைப்படம் வெளியிடப்பட்டது. ஆஸ்திரேலியாவில் ATFIA 2025 (Australia Talent and Film International Award) நடத்திய சர்வதேச விருது வழங்கும் விழாவில் இந்த திரைப்படம் சார்பில் செல்வின் தாஸ் சிறந்த நடிகர் விருதைப் பெற்றுள்ளார்.

இலங்கை யாழ்ப்பாணத்தில் பிறந்த செல்வின் தாஸ் தற்போது ஆஸ்திரேலியாவில் வசித்து வருகிறார். திரைப்படத்துறையில் பல திரைப்படங்களை தயாரித்தும், கதாநாயகனாக நடித்தும் வருகிறார்.

ஆஸ்திரேலியா, இலங்கை, இந்தியா மலேசியா கலைஞர்கள் ஒன்றிணைந்து நடிக்கும் முழு நீள திரைப்படமே கூத்தாடி.

தென்னிந்தியா திரைப்பட இயக்குனர் கவாஸ்கர் காளியப்பன் இயக்கத்தில் இசையமைப்பாளர் பிரதாப் கண்ணன் இசையில் வெகுவிரைவில் உலகத் திரையரங்குகளில் எங்கும் இந்த திரைப்படம் திரையிட தயாராகிறது.







# தொழில் முயற்சியாளருக்கான நிதி சார்ந்த விழிப்புணர்வு வடமராட்சி கிழக்கில் இடம்பெற்றது

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட தொழில் முயற்சியாளருக்கான நிதி சார்ந்த மற்றும் வங்கிக்கடன் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு ஒன்று வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தின் மாநாட்டு மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது.

இந் நிகழ்வானது கைத்தொழில் அமைச்சின் நேுனுயு அனுசரணையுடன் காலை 10:30 மணியளவில் வடமராட்சி கிழக்கு பிரதேச செயலாளர் திரு.குமாரசாமி பிரபாகரமூர்த்தி அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

இந் நிகழ்வில் அரச, தனியார் மற்றும் சமுர்த்தி வங்கிகளின் முகாமையாளர்கள் பங்கு பற்றியதுடன் தொழில் முயற்சியாளருக்காக தமது வங்கிகளில் எவ்வாறான வங்கி கடன் மற்றும் நிதி சார்ந்த உதவிகள் செய்யப்படுகிறது என தெளிவூட்டப்பட்டது.

மேலும் வடமராட்சி கிழக்கில் தொழில் முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பாகவும், தாம் சந்திக்கும் சவால்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

# யாழ்ப்பாணத்தில் உணவருந்திய பின்னர் இருந்த யுவதி திடீரென மரணம்!

யாழ்ப்பாணத்தில் உணவருந்திய பின்னர் இருந்த யுவதி திடீரென மரணமான சம்பவம் அங்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

21ம் திகதி புதன்கிழமை அன்றிரவு யாழ்ப்பாணத்தில் யுவதி ஒருவர் திடீரென மயக்கமடைந்த நிலையில் உயிரிழந்துள்ளார். இதன்போது 8ஆம் கட்டை, மல்லாகம் பகுதியைச் சேர்ந்த சந்திரராசா விதுஜாம்பாள் (வயது 30) என்ற யுவதியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த யுவதி நேற்றையதினம் இரவு சாப்பிட்டுவிட்டு இருந்தபோது திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டது. இந்நிலையில் முச்சக்கர வண்டி மூலம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றவேளை அவர் இடைவழியில் உயிரிழந்துள்ளார்.

பின்னர் உடற்கூற்று பரிசோதனைகளுக்காக சடலம் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இருந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். இதயம் செயலிழந்ததால் மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

# யாழ்ப்பாணத்தில் ஆலய உண்டியலுடன் மோதி விபத்துக்குள்ளான முதியவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணத்தில் ஆலய உண்டியலுடன் மோதி விபத்துக்குள்ளான முதியவர் ஒருவர் 22ம் திகதி வியாழக்கிழமை அன்றையதினம் உயிரிழந்துள்ளார். இதன்போது சரசாலை தெற்கு, சாவகச்சேரி பகுதியைச் சேர்ந்த வைத்திலிங்கம் சிவராஜன் (வயது 71) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், கடந்த 16ஆம் திகதி வீட்டில் இருந்து மோட்டார் சைக்கிளில் புறப்பட்டு சென்றுகொண்டிருந்தார். இதன்போது கொடிகாமம் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் இருந்த சிமெந்தினாலான உண்டியலுடன் மோதி விபத்துக்குள்ளான நிலையில் மயக்கமடைந்துள்ளார்.

பின்னர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்ன மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கொண்டு செல்லப்பட்டு அங்கு சிகிச்சை பெற்று வந்தார்.

இருப்பினும் சிகிச்சை பலனின்றி 22ம் திகதி அன்று காலை 10.00 மணியளவில் உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.

# பதினாறு ஆண்டுகளுக்குப் பின்னரான ஈழத் தமிழ் சமூகத்திற்கான நீதி, உண்மை மற்றும் பொறுப்புக்கூறலுக்கான அழைப்பு

**முள்ளிவாய்க்கால் நினைவுகூரலின் இந்த தருணமும் புதுப்பிக்கப்பட்ட தீர்மானத்தில் ஒன்றாக இருக்கட்டும். தமிழ் மக்களுக்கான நீதி ஒரு தொலைதூர நம்பிக்கை அல்ல - இது நாம் வெல்லக்கூடிய மற்றும் வெல்ல வேண்டிய ஒரு நீண்ட போராட்டம் ஆகும்**

மே 18, 2025, அன்று இலங்கையில் அரச பயங்கரவாதத்தின் மிருகத்தனமான தாக்குதல் முடிவடைந்ததிலிருந்து பதினாறு ஆண்டுகளைக் குறிக்கிறது. மற்றும் இலங்கை அரசாங்கத்தின் இனப்படுகொலை தாக்குதல், இது முல்லிவாய்க்காலின் கரையில் உச்சக்கட்டத்தை அடைந்தது. இந்த புனிதமான ஆண்டுநினைவில், தமிழ் உரிமைகள் குழு தங்கள் உயிரை இழந்த பல தமிழ் பொதுமக்களை நினைவுகூருகின்றது.

மேலும் சொல்லமுடியாத அட்டூழியங்களைத் தாங்கிய எண்ணற்ற மற்றவர்களும். சுதந்திரம் மற்றும் சுயநிர்ணயத்திற்காக இறுதி தியாகம் செய்த துணிச்சலான ஆத்மாக்களுக்கும் நாங்கள் அஞ்சலி செலுத்துகிறோம். அவர்களின் தைரியம், அர்ப்பணிப்பு மற்றும் நினைவகம் ஆகியவை எங்கள் ஒன்றுசேர்ந்த மனசாட்சியில் பொறிக்கப்பட்டுள்ளன.

கடந்த பதினாறு ஆண்டுகளில், தமிழ் மக்களுக்கு எதிரான அட்டூழியங்களை உலகளாவிய அங்கீகாரத்தில் நாங்கள் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களைச் செய்துள்ளோம். புலனாய்வு அறிக்கைகள், சர்வதேச சட்டத்தரணிகளின் சேவை மற்றும் புலம்பெயர் அணிதிரட்டல் ஆகியவை இந்த குற்றங்களின் யதார்த்தத்தை தெளிவான பார்வைக்கு கொண்டு வந்துள்ளன. இன்னும், பெருகிவரும் சான்றுகள் மற்றும் பொறுப்புக்கூறலுக்கான தொடர்ச்சியான அழைப்புகள் இருந்தபோதிலும், அர்த்தமுள்ள நீதி எதுவும் அடையப்படவில்லை. வெகுஜன அட்டூழியங்கள் - WAN குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள், மற்றும் இனப்படுகொலைக்கு எதிரான செயல்கள் - சுதந்திரமாக நடப்பதை எதிர்க்கின்றன, அதே நேரத்தில் தப்பிப்பிழைத்தவர்கள் தங்கள் துன்பத்தை மறுக்கும் ஒரு தனித்துவமான பிரதேசத்தில் அதிர்ச்சி மற்றும் அநீதியுடன் வாழ்கின்றனர்.

டி.ஆர்.ஜி.யில், முறையான சர்வதேச சட்ட அலகுகள் மூலம் நீதிலையப் பின்தொடர நாங்கள் நம்மை அர்ப்பணித்துள்ளோம். சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் (ஐ.சி.சி) மற்றும் சர்வதேச நீதிமன்றம் (ஐ.சி.ஜே) ஆகியவற்றுக்கு வழக்குகளை முன்வைக்க வழிகளை நாங்கள் தீவிரமாக ஆராய்ந்து வருகிறோம். இவை குறியீட்டு சைகைகள் மட்டுமல்ல, இலங்கை அரசு மற்றும் பொறுப்புள்ள நபர்களை கணக்கில் வைத்திருப்பதற்கான வேண்டுமென்றே, கொள்கை ரீதியான முயற்சிகள். எங்கள் பணி சர்வதேச நீதி, பொறுப்புக்கூறல் மற்றும் உரிமைகளை மீட்டெடுப்பதில் ஆழ்ந்த மற்றும் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

நாம் முன்னோக்கிப் பார்க்கும்போது, எங்கள் பணியின் அவசரம் ஒருபோதும் அதிகமாக இருந்ததில்லை. இன்றும் கூட, இலங்கை அரசாங்கம் மக்களைக் கொன்ற புதைகுழிகளை அழித்தல், தடயவியல் விசாரணைகளுக்கு இடையூறு விளைவித்தல் மற்றும் பாரம்பரிய தமிழ் கட்டமைப்புகள் மற்றும் புனிதமான மத தளங்களை இடிப்பது உள்ளிட்ட போர்க்குற்றங்களின் ஆதாரங்களை அழிக்கிறது. இந்த செயல்கள் மனித உரிமைகளின் மீறல்கள் மட்டுமல்ல, நமது வரலாற்று இருப்பு மற்றும் ஒன்றுசேர்ந்த நினைவகத்தை அழிப்பதற்கான வேண்டுமென்றே முயற்சிகள் ஆகும் என்றே கருதுகின்றோம்.

இதைத் தொடர நாம் அனுமதிக்க முடியாது, அனுமதிக்கவும் மாட்டோம்.

16 வது ஆண்டுநினைவைக் குறிக்கும்போது, நமது உலகளாவிய தமிழ் சமூகம், நட்பு நாடுகள் மற்றும் மனித உரிமை ஆதரவாளர்களை நீதி மற்றும் பொறுப்புக்கூறலுக்கான எங்கள் தொடர்ச்சியான முயற்சிகளுக்களுக்கான உறுதியைச் செய்து உறுதியுடன் இருக்க அழைக்கிறோம். முக்கிய சட்ட முன்முயற்சிகளை முன்னேற்றுவதில் நாங்கள் பணியாற்றும் மாதங்களில், பொதுப் பிரச்சாரம, சமூக அணிதிரட்டல், வள பகிர்வு அல்லது தொழில்நுட்ப நிபுணத்துவம் மூலம் உங்கள் ஆதரவை நாங்கள் தொடர்ந்து எதிர்பார்க்கின்றோம். இவற்றில் ஒன்றாக, சான்றுகள் பாதுகாக்கப்படுவதையும், உண்மை உறுதி செய்யப்பட்டு, நீதி சீராக தொடரப்படுவதையும் உறுதிப்படுத்த நாங்கள் உதவ முடியும்.

நினைவுகூரலின் இந்த தருணமும் புதுப்பிக்கப்பட்ட தீர்மானத்தில் ஒன்றாக இருக்கட்டும். தமிழ் மக்களுக்கான நீதி ஒரு தொலைதூர நம்பிக்கை அல்ல - இது நாம் வெல்லக்கூடிய மற்றும் வெல்ல வேண்டிய ஒரு நீண்ட போராட்டம் ஆகும்

ஒற்றுமை மற்றும் நினைவூட்டலில்,
மரியாதையுடன்,
நவரத்தினம் ஸ்ரீநாராயணதாஸ்

---

## Sixteen Years Later: A Call for Justice, Truth, and Accountability for the Eelam Tamil Community

Today, May 18th, 2025, marks sixteen years since the end of the brutal conflict in Sri Lanka and the country's government's genocidal onslaught that culminated along the shores of Mullivaikkal. On this solemn anniversary, Tamil Rights Group stands in remembrance of the many Tamil civilians who lost their lives, and the innumerable others who endured unspeakable atrocities. We also pay tribute to the brave souls who made the ultimate sacrifice for freedom and self-determination. Their courage, dedication, and memory remain etched in our collective conscience.

Over the past sixteen years, we have made significant strides in the global recognition of the atrocities committed against the Tamil people. Investigative reports, international advocacy, and diaspora mobilization have brought the reality of these crimes into clearer view. And yet, despite mounting evidence and repeated calls for accountability, no meaningful justice has been attained. The perpetrators of mass atrocities—war crimes, crimes against humanity, and acts amounting to genocide—continue to walk free, while survivors still live with the trauma and injustice of a state that denies their suffering.

At TRG, we have dedicated ourselves to the pursuit of justice through legitimate international legal channels. We are actively exploring avenues to bring cases forward to the International Criminal Court (ICC) and the International Court of Justice (ICJ). These are not just symbolic gestures, they are deliberate> principled efforts to hold the Sri Lankan state and responsible individuals to account. Our work reflects a deep and unwavering commitment to international justice, accountability, and the restoration of Tamil dignity and rights.

As we look ahead, the urgency of our mission has never been greater. Even today, the Sri Lankan government continues to erase evidence of war crimes, including the destruction of mass graves, the obstruction of forensic investigations, and the ongoing demolition of traditional Tamil structures and sacred religious sites. These acts are not only violations of human rights but deliberate efforts to destroy our historical presence and collective memory.

We cannot and will not allow this to continue.

As we mark the 16th anniversary, we invite our global Tamil community, allies, and human rights supporters to remain engaged and committed to our ongoing efforts for justice and accountability. In the months ahead as we work towards advancing key legal initiatives we will continue to rely on your support—whether through public advocacy, community mobilization, resource sharing, or technical expertise. Together, we can help ensure that evidence is preserved, truth upheld, and justice steadily pursued.

Let this moment of remembrance also be one of renewed determination. Justice for the Tamil people is not a distant hope—it is a fight we can and must win.

In solidarity and remembrance,
Respectfully,
Navaratnam Srinarayanadas | President and Chair

---

# மன்னார் நலன்புரி சங்கம் ஐக்கியராச்சியத்தின் நிதி அனுசரணையுடன் மாந்தை மேற்கில் விளக்குமாறு உற்பத்தி நிலையம் திறந்து வைப்பு

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

- எஸ்.ஆர்.லெம்பேட் (22-05-2025)



மன்னார் நலன்புரி சங்கம் ஐக்கியராச்சியத்தின் நிதி அனுசரணையுடன் மாந்தை மேற்கு We Can மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் விளக்குமாறு உற்பத்தி நிலையம் புதன்கிழமை (21) மாலை வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன் தலைமையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் தொழில்துறை திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி. வனஜா செல்வரட்ணம், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் கே.டி.அரவிந்தராஜ், வடமாகாண சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் தவிசாளர் அந்தோனிப்பிள்ளை பத்திநாதன், அடம்பன் பங்குத்தந்தை சீமான் அடிகளார், மன்னார் நலன்புரி அமைப்பு ஐக்கியராச்சியத்தின் தலைவர் ஜேம்ஸ் பத்திநாதன், மன்னார் நலன்புரி அமைப்பு ஐக்கியராச்சியத்தின் பொருளாளர் தேவசகாயம் கில்மன் ஆகியோர் இணைந்து வைபவ ரீதியாக திறந்து வைத்தனர்.

இதன் போது மாந்தை மேற்கு பிரதேச கிராம சேவையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக சேவை திணைக்கள அதிகாரிகள், மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.





இலங்கை செய்திகள் Sri Lanka News

# கனடா இலங்கை முன்னாள் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணத்தில் 10 வீடுகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வுகள் நடைபெற்றன



மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பகுதியான வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 10 வீட்டுத்திட்டத்தின் அங்குரார்ப்பண நடவடிக்கைகள் கடந்த 20ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று முன்னெடுக்கப்பட்டன.

கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் இலங்கை முன்னாள் வர்த்தக சங்கம் ஏற்பாட்டில் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மகிழவெட்டவான் மற்றும் செங்கலடியில் அமைக்கப்படவுள்ள 10 வீடுகளுக்கான அடிக்கல் நாட்டம் நிகழ்வில் ஊர் மக்கள் மற்றும் சமூக நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

கனடாவில் இயங்கிய வண்ணம் தாயகத்தில் நற்பணிகள் பல புரிந்து வரும் "கனடா உதவும் பொற்கரங்கள்" அமைப்பின் தலைவர் விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற குழு பேச்சாளரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஞா.சிறிநேசன் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் வட அமெரிக்கா தமிழ் சங்கத்தின் உறுப்பினர் சிவம் வேலுப்பிள்ளை, கனடா விபுலானந்தர் கலைமன்றத்தின் தலைவர். கந்தையா புருஷோத்தமன், சமூக செயற்பாட்டாளர் வி.விஜயராஜா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

மிகவும் வறிய நிலையில் தகர கொட்டில்களில் வாழும் குடும்பங்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கான வீடுகள் அமைப்பதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை முன்னாள் வர்த்தக சங்கம் கனடா அமைப்பானது கடந்த 12 வருடமாக இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கில் பல்வேறு சமூக நல திட்டங்களை முன்னெடுத்துவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த மனித நேயப் பணிகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வரும் இலங்கை முன்னாள் வர்த்தக சங்கம் கனடா அமைப்பின் உறுப்பினர்களான கனடா உதயன் நண்பர்கள் மற்றும் "கனடா உதவும் பொற்கரங்கள்" அமைப்பின் தலைவர் விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்களுக்கும் கனடா உதயன் ஆசிரிய பீடம் தனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றது.

இங்கே காணப்படும் அங்கு எடுக்கப்பெற்றவையாகும்.





# இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கு காரணமானவர்கள் அபிவிருத்தி தொடர்பில் பேசுவது ஆச்சரியமளிக்கிறது என்கிறார் சபா குகதாஸ்!



இலங்கையின் பொருளாதார பின்னடைவுக்கு காரணமான சீனா இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் மற்றும் வறுமை ஒழிப்பு தொடர்பில் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களுக்கு அறிவுரை கூற வருவது ஆச்சரியம் அளிப்பதாக தமிழீழ விடுதலை இயக்கத்தின் யார் மாவட்ட அமைப்பாளரும் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினருமான சபா குகதாஸ் தெரிவித்தார்.

அவர் அனுப்பி வைத்த ஊடக அறிக்கையில் கூறியிருப்பதாவது, நாளைய தினம் வெள்ளிக்கிழமை சீன நாட்டின் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஒருவர் யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களுக்கு வறுமை ஒழிப்பு பொருளாதார முன்னேற்றம் தொடர்பான கருத்தரங்கு ஒன்றை வழங்குவதற்காக யாழ் பல்கலைக்கழகத்திற்கு வருகை தரவுள்ளார்.

கொவிட்-19க்கு பின்னர் இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார பின்னடைவுக்கு பின்னர் ஐந்து வருடங்கள் கடந்தும் இலங்கையின் பொருளாதாரம் பின்னோக்கி சென்று கொண்டிருக்கின்றது.

கொவிட்-19 நோய் இலங்கையை மட்டுமல்ல உலகில் பல நாடுகளை தாக்கிய போதும் அந்த நாட்டின் பொருளாதாரங்கள் திடீரென சரிவுகளை கண்டிருந்தாலும் அதை வேகத்தில் மீண்டெழுந்தது.

குறிப்பாக சுமார் 120 கோடி சனத்தொகையை கொண்ட இந்தியா கொவிட் 19 நோய் தாக்கம் ஏற்பட்ட போதும் பொருளாதார ரீதியாக சரிவுநிலைக்கு செல்லாத நிலையில் இன்று விவசாயத் தறையில் தன்னிறைவு கொண்ட ஒரு நாடாக திகழ்கிறது.

அதேபோன்று பங்களாதேஷ் கொவிட் தாக்கத்துக்கு அகப்பட்ட நாடாக இருந்தும் பொருளாதார சரிவுக்கு எட்டாது இலங்கைக்கு கடன் வழங்கிய பட்டியலில் பங்களாதேஷசும் உள்ளது.

இலங்கை பெற்றுக் கொண்ட வெளிநாட்டு கடனில் சீனாவிடம் பெற்றுக்கொண்ட கடன் 46 வீதமாக காணப்படுகின்ற நிலையில் தொடர்ந்து இலங்கை சீனாவின் கடன் பொறியில் சிக்கி உள்ளது.

ஒரு நாட்டை பொருளாதார ரீதியில் முன்னேற்ற வேண்டும் என்றால் அந்த நாட்டுக்கு கடன் மேல் கடனை ஆள்ளி வழங்குவதை விட பொருளாதார ரீதியான தூரநோக்கு திட்டங்களை வளர்க்க வேண்டும்.

ஆனால் சீனா இலங்கையில் பொருளாதார ரீதியான திட்டங்களை வளர்க்காமல் தன்னை தங்கி வாழ வேண்டும் என்ற நோக்கத்தோடு இலங்கைக்கு கடனை அள்ளி வழங்கி வருகிறது.

இவ்வாறு கடன் மேல் கடனை அள்ளி வழங்கும் சீனா இலங்கையின் வறுமை நிலைக்கு பிரதான காரணமாக அமைவதோடு தொடர்ந்து இலங்கையை தனது ஆதிக்கத்துக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

அதன் ஒரு அங்கமாக இலங்கைக்கு அயல் நாடான இந்தியாவை குறி வைத்து யாழ்ப்பாணத்தில் பல்வேறு திட்டங்களை சீனா மறைமுகமாக மேற்கொண்டு வரும் நிலையில் தற்போது யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்குள் கருத்தரங்கு என்ற போர்வையில் உள்நுழைய ஆரம்பித்துள்ளது.

உண்மையில் வறுமையை ஒழிக்க வேண்டும் என்றால் அதனை மத்திய அரசாங்கத்துடன் கருத்தரங்குகளை மேற்கொண்டு திட்டங்களை முன்வைக்க வேண்டும்.

ஆனால் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் வறுமையை ஒழிப்பதற்காக சீனா முயல்வது இந்தியாவை சீண்டுவதாகவே பார்க்க முடியும்.

இறுதி யுத்தத்தின் போது தமிழ் மக்களுக்கு எதிராக இலங்கை அரசுக்கு ஆயுதங்களை வழங்கி தமிழ் மக்களை அழித்ததில் சீனாவுக்கும் பங்குள்ளது.

யுத்தம் நிறைவடைந்து பதினைந்து வருடங்கள் கடக்கின்ற நிலையில் சீனா தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடையங்கள் கரிசனை அற்ற நாடாகவே பார்க்கப்படுகிறது.

ஆகவே சீனா இலங்கையின் வறுமையை ஒழிக்க வேண்டுமானால் முதலில் வழங்கிய கடன்களை தள்ளுபடி செய்யுங்கள் புதிய கடன்களை வழங்குவதை நிறுத்துங்கள் இலங்கை வறுமையில் இருந்து மீண்டு அபிவிருத்தியின் பாதையில் பயணிக்கும் என அவர் மேலும் தெரிவித்தார்.


## கண்ணீர் அஞ்சலி #75

மலர்வு: 09-16-1937

உதிர்வு: 05-11-2025



### திருமதி. ஞானம்மா திருசெல்வம்

எங்கள் OSTBA உறுப்பினர் #290

May 11, 2025 அன்று இறைவனடி சேர்ந்தர். அவரது ஆத்மா அமைதியும் இறைவனின் பாதத்தை அடைய பிரார்த்திப்போம்.

Ontario Senior Tamils
Benevolent Association
ostba2019@gmail.com ww.ostb5.ca
416-473-6880

# இவ்வார ராசிபலன்

**23-05-2025 வெள்ளி தொடக்கம் 29-05-2025 வியாழன் வரையும்**




**மேஷம்:** காரியத்தில் வெற்றிக் காணும் வாரம். அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். மறைமுக எதிர்ப்புக்கள் வலுக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். பயணத்தால் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் சேரும். திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். நண்பர்களால் நன்மை உண்டு. பெற்றோர் நலனில் அக்கறை தேவை. பணியில் கண்டிப்பு தேவை. எதிரிகளின் தொல்லை குறையும். வஸ்திர தானம் செய்தால் வளம் சேர்க்கும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். மனஅமைதி சீர் குலையும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகளால் வெகுமானம் உண்டாகும். நட்பில் பிரிவு ஏற்படும். எண்ணங்கள் மாறுப்படும். தன வரவு அதிகரிக்கும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். பெற்றோர் ஆலோசனை பயன் தரும். செல்வாக்கு பெருகும். செயலில் துணிவு கூடும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். குதூகல எண்ணம் அதிகரிக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். சந்தர்பங்கள் சாதகமாக அமையும். திறமைகள் வெளிப்படும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். புண்ணியம் சேர்க்கும் காலம். முகப்பொலிவு கூடும். பேச்சில் பணிவு தேவை. கடன் அதிகமாகும். உடல்சோர்வு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். மேன்மைகள் தொடரும். மெத்தனப்போக்கு மாறும். சுபச்செய்தி வரும். வெளியூர் பயணம் நன்மை தரும். சுயத்தொழில் உயர்வு தரும். திட்டங்கள் எளிதாகும். புதிய தொழில் அமையும். பூர்வீகச் சொத்துக் கிடைக்கும். பெரிய வாய்ப்புக்கள் தேடி வரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். வாகனச் செலவு ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பஞ்சபூதக் கடவுள், அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,S




**ரிஷபம்:** மாற்றங்களை சந்திக்கும் வாரம். பிறர்க்கு உதவும் குணம் அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். சிந்தனைகள் மேலோங்கும். ஆரோக்கியம் அதிகரிக்கும். மனைவி வழி அன்பு அதிகரிக்கும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பழைய பாக்கி வசூலாகும். பங்குத்தொழில் லாபம் தரும். தொலைபேசி தகவல் தொல்லை தரும். எண்ணிய காரியம் கைகூடும். மன சந்தோஷம் அதிகரிக்கும். கடன்தொல்லை நீங்கும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். குடும்பப் பாசம் அதிகரிக்கும். குதூகலமான மனநிலை காணப்படும். வீண் செலவுகள் குறையும். விவேகம் வெளிப்படும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். உடன்பிறப்புகளால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். சக ஊழியர்கள் உதவி உண்டு. சம்பள உயர்வு கிடைக்கும். உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். மனோபயம் ஏற்படும். நிர்வாகச் செலவுகள் ஏற்படும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். உடல் உஷ்ணம் வந்து சேரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். பதவி உயர்வு கிடைக்கும். கமிஷன் தொழில் லாபம் தரும். கல்வியில் ஈடுபாடு குறையும். போட்டிகள் அதிகரிக்கும். வியா-பாரம் சுமாராக இருக்கும். முத்தான வாய்ப்புகள் பெருகும். கலைத்துறையில் கௌரவம் கூடும். கனவு பலிதமாகும். அலைப்பேசி செய்தி ஆனந்தம் தரும். புதிய தொழில் முயற்சி பலன் தரும். விளையாட்டுத் துறையில் வெகுமானம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீஅய்யனாரப்ப சுவாமி, அதிர்ஷ்ட எண்: 2,9,6,3
அதிர்ஷ்ட நிறம்: வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,Z




**மிதுனம்:** மனநிறைவு கிடைக்கும் வாரம். பூர்வீகச் சொத்து வந்து சேரும். உடல்சோர்வு உண்டாகும். அலுவலக பணியில் கவனம் தேவை. எதிர்ப்புக்கள் கூடும். எண்ணங்கள் ஈடேறும். பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் மேன்மை உண்டு. குடும்ப தேவைகள் அதிகரிக்கும். புதுமைகள் நிறைந்த காலம். இயந்திர பணியில் ஆர்வம் கூடும். புதிய நட்பில் எச்சரிக்கைத் தேவை. சொல்லில் கவனம் தேவை. கற்பனை ஆற்றல் பெருகும். கடன் பிரச்சனை குறையும். காரிய தாமதம் ஏற்படும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். மனக்கலக்கம் உருவாகும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். தந்தை நலன் கூடும். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். உறவுகளால் நன்மை உண்டாகும். இடமாற்றம் ஏற்படும். கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். பணியாளர்களின் பாராட்டுக் கிட்டும். எதிர்பாராத செலவுகள் ஏற்படும். நூதன முயற்சி தடைப்படும். வாகன மாற்றம் ஏற்படும். வெளிநாட்டு வாய்ப்பு கூடி வரும். காதல் கசக்கும். அந்நியர் ஆதரவு கிடைக்கும். உறவினர்கள் பகை ஏற்படும். பொறாமைகள் விலகும். விவசாயிகள் பயன்பெறுவார்கள். உடல் உஷ்ணம் அதிகரிக்கும். விவேகம் அதிகரிக்கும். வேற்று இன நட்பு கிட்டும். மன மகிழ்ச்சி அதிகரிக்கும். உத்தியோகம் உன்னதம் தரும். தாய் வழி உறவு மூலம் லாபம் அதிகரிக்கும். எண்ணெய் நிறுவனம் ஏற்றம் தரும். அலுவலக பணி அனுகூலம் தரும். காரியத்தடை அகலும். பெருமைகள் கிடைக்கும். வறுமைகள் அகலும். ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும். எதிலும் எச்சரிக்கை தேவை. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: குண்டத்து காளியம்மன், அதிர்ஷ்ட எண்: 4,9,1,3
அதிர்ஷ்ட நிறம்: வெளிர்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,L




**கடகம்:** விவேகத்தோடு செயல்படும் வாரம். சகோதரியால் லாபம் உண்டு. எதிர்ப்புக்கள் உருவாகும். பல்வலி வந்து போகும். கூட்டுத்தொழில் ஏற்றம் தரும். பெண்களின் கௌரவம் உயரும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. நன்மைகள் அதிகரிக்கும். வீடு, மனை யோகம் உண்டு. விவசாயம் லாபம் தரும். சுபச்செய்தி கூடி வரும். கைப்பொருள் களவுப்போகும். உறவினரால் உற்சாகம் கூடும். திட்டங்கள் நிறைவேறும். சட்டம் சாதகமாகும். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். புதிய பொருள் சேரும். பழைய கடன் வசூலாகும். பணவரவு அதிகரிக்கும். சாதனை படைக்கும் காலம். பிள்ளைகளால் பெருமை சேரும். அரசியல் லாபம் தரும். வேலை பளு அதிகரிக்கும். வில்லங்கம் ஏற்படும். விரக்திகள் மறையும். மாமூலான வளர்ச்சி பாதிக்கும். கூட்டுத்தொழிலில் லாபம் உண்டு. காதலால் மகிழ்ச்சி உண்டு. கலைத்தொழிலில் திருப்பம் உண்டு. மாங்கல்ய நமஸ்காரம் மனோ தைரியம் தரும். வறுமைகள் அகலும். நியாயம் ஜெயிக்க போராடுவீர்கள். இடமாற்றத்தால் நன்மை உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிடைக்கும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை உண்டு. மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும்.




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. கலைஞர்களுக்கு புகழ் கூடும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். உத்தியோகத்தில் உணர்வு உண்டு. சுமூகமான சூழ்நிலை பெருகும். நீண்ட நாளைய நோய் விலகும். இல்லத்தில் அமைதி கூடும். தேக பலம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பேச்சியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,9,2,1
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,A




**சிம்மம்:** பெருமைகள் சேரும் வாரம். வார்த்தைகளில் நிதானம் தேவை. உடல்நலம் சிறக்கும். புதிய கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். மனக்குழப்பங்கள் தீரும். மங்கையருக்கு திருமணம் கைகூடும். பொருளாதார நிலை உயரும். உடல்நலனில் அக்கறை தேவை. காதல் கைக்கூடும். மனதில் இனம்புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும். ஆலோனைகளால் ஆதாயம் உண்டு. நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பழைய பாக்கி வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். புது முயற்சிகள் பலன் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். வாயில் தேடி வரன் வரும். உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. அயல்நாட்டுப் பயணம் உண்டு. மாற்று இனத்தவரால் நன்மை உண்டு. மனைவியின் அன்பு அதிகரிக்கும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். கடன் வாங்க நேரிடும். மன நிம்மதி அதிகரிக்கும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். திறமைகள் வெளிப்படும். குடும்ப வளர்ச்சி கூடும். மங்களச் செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. தர்மச் சிந்தனை மேலோங்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். பணவரவு அதிகரிக்கும். செல்வாக்கு மேம்படும். பாதகம் விலகும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. புதுமையை விரும்புவீர்கள். இடமாற்றம் நன்மை தரும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். மதிப்பும், மரியாதையும் உயரும். பொது வாழ்வில் புகழ் கூடும். வேண்டாத நபர் விலகிடுவர். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். திருப்புமுனை ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திரௌபதி அம்மன், அதிர்ஷ்ட எண்: 6,9,3,1
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,J




**கன்னி:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். காதலர்களுக்குள் மனக்கசப்பு விலகும். ஆபரணச் சேர்க்கை உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். பழையக்கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும். வரம் தரும் தெய்வங்களை வழிபட வேண்டும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். நினைத்த காரியம் நிறைவேறும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். திடீர் பயணம் உற்சாகம் தரும். தொழில் அபிவிருத்தி அடையும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். கணவன், மனைவி உறவு மேம்படும். மனக்கசப்பு நீங்கும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். துணிச்சல் மேலோங்கும். வேண்டும் வரம் கிட்டும். நட்பு வட்டம் விரிவடையும். நீண்ட தூரப்பயணம் லாபம் தரும். செய்தொழிலில் முன்னேற்றம் உண்டு. புதிய வாகனங்களில் முதலீடு உண்டாகும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். ஒரு சிலருக்கு கவுரவப் பதவிகள் தேடி வரும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புக்கள் குறையும். வழக்கு முடிவுக்கு வரும். எதிர்பார்த்த தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். உற்சாகம் களைகட்டும். உத்தியோகத்தில் பாராட்டுக் கிடைக்கும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெரியோர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். வறுமைகள் ஒழியும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ வேம்புலியம்மன், அதிர்ஷ்ட எண்: 8,6,4,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,S




**துலாம்:** ஆன்மீக எண்ணங்கள் அதிகரிக்கும் வாரம். உற்சாகம் அதிகரிக்கும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. உறவினர்கள் வருகை ஏற்படும். மனதில் மகிழ்ச்சி ஏற்படும். வழக்குகள் முடிவுக்கு வரும். எதிரிகள் பலம் குறையும். பொருளாதார வளம் மேம்படும். காதலர்களிடையே கசப்புகள் விலகும். சொத்துப் பிரச்சினைகள் விலகும். கடன் சுமையிலிருந்து விடுதலை பெறுவீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். பொறுப்புக்கள் கூடும். ஆண்களின் அதிகாரம் உயரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். பணவரவு உண்டு. பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். பிள்ளைகள் தொல்லை அதிகரிக்கும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். மாற்று இன உதவி கிட்டும். திருப்புமுனை ஏற்படும். வெற்றிகள் குவியும். மதிப்பு உயரும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. வார்த்தைகளில் நிதானம் தேவை. அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. விருந்தினர் வருகை ஏற்படும். புதிய நட்பு உருவாகும். எண்ணம் வண்ணமயமாகும். நண்பர்களால் மதிப்பு உயரும். எதிர்ப்புக்கள் தவிடுப்பொடியாகும். அதிகாரியின் பாராட்டு கிடைக்கும். பணியில் இடமாற்றம் ஏற்படும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொழில் வளர்ச்சி கூடும். இன்றையப் பிரார்த்தனை நன்மையைக் கூட்டும். பொறாமைகள் அதிகரிக்கும். வில்லங்கம் விலகும். பிள்ளைகளால் தொல்லைகள் அதிகமாகும். தாய்வழி உறவில் தகராறுகள் குறையும். கௌரவம் உயரும். கனவுகள் பலிதமாகும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கணினித்துறையில் ஊதிய உயர்வு உண்டு. சகோதரியினால் நன்மை உண்டு. அரசு வகை காரியங்கள் ஆதாயம் அளிக்கும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீசெல்வ நாயகி, அதிர்ஷ்ட எண்: 8,5,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,F

*(தொடர்ச்சி 26_ பக்கம்)*

"நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன."

# எட்டாவது ஆண்டு நினைவேந்தல்



மண்ணில்:
**02-01-1937**

விண்ணில்:
**24-05-2017**

## தெய்வத்திரு. ஐ. மார்க்கண்டன் SLPS I, JP

**(முன்னாள் அதிபர், சமாதான நீதவான்)**
**'மதிபதி'. மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய், இலங்கை**

*அன்புடன் வாழ்ந்தீர்கள் – எதிலும்*
*அறனுடன் நடந்தீர்கள்*
*அறிவுடன் வலம்வந்தீர்கள் – எவர்க்கும்*
*அரணாய் இருந்தீர்கள்*

*நிமிர்ந்த நடையதை – நித்திலம்*
*நினைந்திருக்க நின்றீர்கள்*
*நித்திய வாழ்வதை – எண்பதில்*
*நிகலயாக்கிக் கொண்டீர்கள்*

*எட்டாண்டு ஓடினும் – தந்தையே*
*எந்நொடியும் நின்நினைவே*
*எந்நாட்டில் வாழினும் – எந்தையே*
*எத்திசையும் நின்நிழலே*

**நீங்கா நினைவுகளுடன் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பெரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்**

தகவல்: (647) 202-5048

## இவ்வார ராசிபலன்

(24 பக்கத் தொடர்ச்சி)



**விருச்சிகம்:** எண்ணங்கள் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கூடும். உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். சுபவிரயம் ஏற்படும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான காலம். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். கடன்தொல்லைகள் தீரும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். உத்தியோகப் பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். மாற்றங்களை சந்திப்பீர்கள். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைத்தூர தொடர்பு லாபம் தரும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். கணவன், மனைவி உறவில் ஒற்றுமை வளரும். புத்தி சாதுர்யம் அதிகரிக்கும். விரும்பிய பொருள் கிடைக்கும். வேதனைகள் சாதனையாகும். திண்டாட்டங்கள் மறையும். கொண்டாட்டங்கள் கூடும். திருப்திகள் அதிகரிக்கும். வறுமையின் வாட்டம் குறையும். பெருமைமிக்க காலமாக அமையும். மாலை நேரத்தில் மகிழ்வான செய்தி வரும். வளமான சிந்தனை உருவாகும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் விலகும். பெண்களுக்கு பெருமை சேரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. நவகிரஹ அனுகிரஹம் கூடும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். ஆறுதலான சூழ்நிலைகள் அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். பணியில் உயர்வு கிட்டும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். கண்ணாடித் தொழில் முன்னேற்றம் தரும். பிள்ளைகளால் பெற்றோருக்கு பெருமை சேரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன், அதிர்ஷ்ட எண்: 2,8,9,5*
*அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* P,G



**தனுசு:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அதிகரிக்கும் வாரம். தன்னம்பிக்கை துளிர்விடும். விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். ஆபரணப் பொருள் களவுப்போகும். பணியில் கவனம் தேவை. வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். வாகன மாற்றம் உண்டாகும். மன அமைதி சீர் குலையம். மறைமுக எதிர்ப்பு விலகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். பெருமைகள் கூடும். பேச்சில் பணிவு தேவை. கடன் சுமை குறையும். காரியத்தடை ஏற்படும். சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். பக்கத்து வீட்டு பகை மாறும். ஆடம்பர எண்ணம் அதிகமாகும். மாணவர் திறமைகள் பளிச்சிடும். முக்கிய முடிவுகளில் தெளிவு இருக்கும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் அதிகரிக்கும். சிக்கனத்தை கையாள வேண்டும். இசை ஆர்வம் கூடும். உணவுத்தொழில் உயர்வு பெறும். வீண் செலவுகள் ஏற்படும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். தோதான எண்ணம் உருவாகும். சுறுசுறுப்பு பெருகும். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். மருத்துவச் செலவு குறையும். உறவினர் வருகையால் கலகலப்பு குறையும். பணமும், பாராட்டும் சேரும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். இரும்பு தொழில் ஏற்றம் தரும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். ஆரோக்கியம் சீராகும். புதிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாகும். வியாபாரத்தில் வேகம் கூடும். கனவுகள் பலிதமாகும். மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். எதிலும் வெற்றி கிட்டும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். பாகப்பிரிவினை ஏற்படும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 6,9,3,1*
*அதிர்ஷ்ட நிறம்: இளம்சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* O,N



**மகரம்:** கோரிக்கைகள் நிறைவேறும் வாரம். தர்மச்சிந்தனைகள் மேலோங்கும். வாகன மாற்றம் உண்டு. சகோதர வழியில் சந்தோஷம் கூடும். மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். புதிய தொழில் முயற்சியைத் தள்ளிப் போடவும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். முத்தான வாய்ப்புக்கள் பெருகும். தகுதிகள் மிகுதியாகும். உடல்நலம் மேம்படும். சுபச்செய்திகள் வரும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். சொத்துப் பிரச்சனை தீர்வுக்கு வரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். மனக்குழப்பம் வந்து நீங்கும். திருமண முயற்சி பலன் தரும். அரசியல் ஆதாயம் தரும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். நல்லோர்கள் பாராட்டு கிடைக்கும். பொறுப்புக்கள் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். தொட்டக் காரியம் ஜெயமாகும். குடும்ப வளர்ச்சி கூடும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். பொது வாழ்வில் புகழ் கூடும். மதிப்பும், மரியாதையும் கிடைக்கும். தொழில் முயற்சி வெற்றி தரும். மறைமுக எதிர்ப்புகள் மாறும். தனலாபம் கூடும். விவேகம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3*
*அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* U,G



**கும்பம்:** நிதி நிலைமை திருப்தி தரும் வாரம். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் கூடும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர் வருகையுண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை அதிகரிக்கும். கமிஷன் தொழில் லாபம் தரும். மெத்தனப் போக்கு விலகும். பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. கலைத்துறையில் திருப்பம் ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். வஸ்திர தானம் வளம் சேர்க்கும். அனுகூலமான காலம். பூமியால் லாபம் உண்டு. பதவி உயர்வு வரும். மங்களகரமான செய்தி வரும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. மருத்துவச் செலவு உண்டு. மாணவர்களுக்கு பாராட்டுக்கள் கிடைக்கும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். புதிய நட்பு உருவாகும். ஞாபக மறதி ஏற்படும். பிள்ளைகள் வழி செலவு அதிகரிக்கும். மனோ தைரியம் அதிகரிக்கும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். பணப்பிரச்சனை தீரும். வழக்குகள் சாதகமாகும். காதல் கை கூடும். அரசு வகையில் ஆதாயம் உண்டு. திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். உடல் உபாதை நீங்கும். உங்களின் தனித்தன்மை வெளிப்படும். பணி செய்யும் இடத்தில் பாராட்டுக் கிட்டும். சாதகமான வாய்ப்பு அமையும். ஊதிய உயர்வு கிட்டும். மாலை நேரத்தில் இனிய தகவல் வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பால் முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 8,5,9,3*
*அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* R,S



**மீனம்:** வாயில் தேடி வாய்ப்பு வரும் வாரம். காரியங்கள் கை கூடி வரும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் வெற்றி தரும். விருந்தினர் வருகை உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் பங்கு பெறுவீர்கள். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். விவேகமான பேச்சுக்களால் வில்லங்கம் விலகும். வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். உடன் பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. மனை வாங்கும் யோகம் உண்டு. தாய்ப்பாசம் அதிகரிக்கும். பணவரவு பெருகும். வம்பு தும்புகள் ஒழியும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். தொலைதூரப் பயணம் ஏற்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். கோரிக்கைகள் நிறைவேறும். எண்ணங்கள் வண்ணமயமாகும். மாற்று யோசனை பயன் தரும். வாகன மாற்றம் உண்டு. மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். வரவுகள் திருப்தி தரும். ஆபத்துகள் விலகும். நினைத்த விஷயம் நிறைவேறும். அன்னிய தேச பயணம் உண்டு. காரியங்கள் வெற்றி முகமாகும். காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியங்கள் நடந்தேறும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். கலைஞர்களுக்கு ஒப்பந்தம் குவியும். சொந்த பந்தங்களின் உதவி கிடைக்கும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. பாகப்பிரிவினை சுமூகமாகும். விலகி சென்றவர் விரும்பி வருவர். புதிய சொத்துக்கள் சேரும். எதிர்கால சிந்தனை ஏற்றம் தரும்.

*வழிபட வேண்டிய தெய்வம்: கால பைரவர், அதிர்ஷ்ட எண்: 7,9,5,1*
*அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்), அதிர்ஷ்ட எழுத்துக்கள்:* D,H

## Statement by Prime Minister Mark Carney on Tamil Genocide Remembrance Day

## தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளை முன்னிட்டு கனடியப் பிரதமர் கார்ணி வெளியிட்ட அறிக்கை

"Today marks 16 years since the end of the armed conflict in Sri Lanka – a conflict that spanned over 26 years and killed tens of thousands of civilians.

On this Tamil Genocide Remembrance Day, we remember the lives lost – the families torn apart, the communities devastated, and those who remain missing to this day. We also think of Canada's Tamil community, who carry with them the memory of loved ones, and the many remembrance services planned across Canada.

Canada continues to support independent international efforts to seek accountability and push for truth and justice.

As we mark this solemn anniversary, let it strengthen our resolve to act in tribute, with courage, and for lasting peace."



"இலங்கையில் ஆயுதப்போர் முடிவடைந்து இன்றுடன் 16 வருடங்கள் ஆகிவிட்டன. 26 வருடங்களுக்கும் அதிகமாக நீடித்த இந்தப் போரில் பல பத்தாயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டார்கள்.

இந்தத் தமிழ் இனப்படுகொலை நினைவேந்தல் நாளில், இழந்த உயிர்களையும், சிதறிப்போன குடும்பங்களையும், பேரழிவடைந்த சமூகங்களையும், இன்றுவரை காணாமல் ஆக்கப்பட்டவர்களாகவே இருப்போரையும் நாம் நினைவுகூருகிறோம். அத்துடன், தமது அன்புக்குரியவர்களின் நினைவுகளைச் சுமக்கும் கனேடிய தமிழ்ச் சமூகத்தையும், கனடாவின் பல பகுதிகளிலும் திட்டமிடப்பட்டுள்ள நினைவேந்தல் நிகழ்வுகளையும் நாம் மனதிற்கொள்கிறோம்.

பொறுப்புக்கூறலுக்கும், உண்மை, நீதி ஆகியவற்றை அடைவதற்கும் எடுக்கப்படும் சுதந்திரமான சர்வதேச முயற்சிகளைக் கனடா தொடர்ந்தும் ஆதரிக்கிறது.

இந்த நினைவேந்தல் நாளை நாம் கடைப்பிடிக்கும்போது, துணிவுடன் அஞ்சலி செலுத்துவதற்கான உறுதிப்பாட்டையும், நீடித்திருக்கும் அமைதிக்காகச் செயற்படுவதற்கான உறுதிப்பாட்டையும் அது பலப்படுத்தட்டும்."

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND
INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal

CALL US



**NESAN**
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

மதுரையில் இருந்து மீண்டும் வருகை
ஜாதகம் பார்க்கப்படும்
பிறந்த வருடம், மாதம், திகதி சொன்னால் போதும் நாள், நட்சத்திரம், ராசி பார்த்து நடந்தது நடக்கப்போவது பற்றிய பலன் சொல்லப்படும். திருமணப் பொருத்தம் மற்றும் குழந்தைகளுக்கு குறிப்பு எழுதிக் கொடுக்கப்படும்.
சோ. காசி (மதுரை) Phone:- 437-925 5643 Whatsapp:- 437- 329 4164

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

தமிழ் நிர்வாகத்தில் இயங்கும் நிறுவனம்
RIDE-U
• Airport
• Niagara Falls
• Ottawa
• Montreal
• Quebec City
• USA
rideu2025@gmail.com
(416)789-6556
BOOK NOW

உதயம் 1520 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday May 23, 2025

# கனடா இலங்கை முன்னாள் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாணத்தில் 10 வீடுகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வுகள்



மட்டக்களப்பு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய பகுதியான வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் 10 வீட்டுத்திட்டத்தின் அங்குரார்ப்பண நடவடிக்கைகள் கடந்த 20ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று முன்னெடுக்கப்பட்டன.கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் இலங்கை முன்னாள் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் நிர்வாகசபையினரால் வவுணதீவு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட மகிழவெட்டவான் மற்றும் செங்கலடியில் அமைக்கப்படவுள்ளன. கனடாவில் இயங்கிய வண்ணம் தாயகத்தில் நற்பணிகள் பல புரிந்து வரும் "கனடா உதவும் பொற்கரங்கள்" அமைப்பின் தலைவர் விஸ்வலிங்கம் கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக இலங்கை தமிழரசுக்கட்சியின் பாராளுமன்ற குழு பேச்சாளரும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான ஞா.சிறிநேசன் கலந்துகொண்டார். (தொடர்ச்சி 23ம் பக்கம்)

# கனடிய குடிவரவு விண்ணப்பங்களை பரிசீலித்து முடிவு எடுக்கும் செயலாக்க நேரங்கள் மேலும நீடிக்கப்பட்டுள்ளன.

## இதனால் விண்ணப்பதாரிகளின் காத்திருப்பு நேரங்களும் அதிகரிக்கலாம் என அச்சம்




கனடிய குடிவரவுத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களுக்கான செயலாக்க நேரங்கள் மேலும்நீடிக்கப்பட்டுள்ளன. தற்போதைய செயற்பாடுகளில் குறைவான பயன்பாடுகள் இருந்தபோதிலும், கனடாவிற்குள் இருந்து வாழ்க்கைத் துணைவர்களுக்கான நிரந்தர குடியிருப்புக்கான விண்ப்பங்களைப் பரிசீலிக்கும் செயலாக்க நேரங்கள் மற்றும் பல பிரிவுகள் கூட பல சிரமங்களை எதிர்கொள்வதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மொத்தத்தில் குடிவரவு விண்ணப்பங்கள் தொடர்பான முடிவுகளை எடுப்பது இனிமேல் மேலும் தாமதமாகலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (தொடர்ச்சி 17ம் பக்கம்)



# தமிழ்நாட்டிலிருந்து தாய்நாடு திரும்பிய யாழ்ப்பாணக் குயில் பிரியங்காவை வரவேற்க பலாலி விமான நிலையத்தில் திரண்ட மக்கள்!

இந்தியாவின் பிரபல தொலைக்காட்சியான விஜய் தொலைக்காட்சி தயாரித்து வழங்கும் நிகழ்ச்சியான சூப்பர் சிங்கர் ஜூனியர் சீசன் 10 பாடல் போட்டியில் யாழ்ப்பாணம் - கொக்குவில் பகுதியை சேர்ந்த சிந்துமயூரன் பிரியங்கா என்ற சிறுமி பாடி வந்துள்ளார்.

இந்நிலையில் அவர் தனது சுற்றினை மீண்டும் 21ம் திகதி அன்றையதினம் பலாலி விமான நிலையம் ஊடாக யாழ்ப்பாணத்தை வந்தடைந்தார்.

இதன்போது ஒன்றுகூடிய மக்கள் அவருக்கு பொன்னாடை போர்த்து கௌரவித்து வரவேற்பு செய்தனர். பின்னர் வாகனங்கள் அணிவகுத்து வர சொந்த ஊருக்கு காரில் அழைத்து வரப்பட்டார்.

அதன்பின்னர் அவரது ஊரான கொக்குவில் பகுதியில் கௌரவிப்பு நிகழ்வு ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது.



# ஒட்டாவா மாநகரில் பழைய முகங்களும் புதிய முகங்களுமாக பதவியேற்கும் கனடிய பாராளுமன்ற உறுப்பினர்கள்







கடந்த 21ம் திகதி புதன்கிழமை கனடிய பாராளுமன்ற வளாகத்தில் பழைய முகங்களும் புதிய முகங்களுமாக பதவியேற்கும் கனடிய பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலரை அங்கு சென்றிருந்த உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் சந்தித்து தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். அங்கு அவர் உரையாடிய பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள். இருவர் புதிய. முகங்கள் இருவர் பழைய முகங்கள் .........ஏற்கெனவே நன்கு நட்புக் கொண்டாடும் முன்னையவர்களான **Judy Sgro -Humber River—Black Creek, Salma Zahid Scarborough Centre—Don Valley East,** மற்றும் புதிய முகங்களான **Jennifer McKelvie -Ajax** மற்றும் **Juanita Nathan - Pickering—Brooklin** ஆகியோர்கள் அன்றைய தினம் பதவியேற்றுக்கொண்டார்கள்.

Matt Mathisayan
Sales Representative
647 268 9219
905 201 9977
905 201 9929
mattmathisayan@gmail.com
Follow me on
HomeLife/Future Realty Inc.
7 Eastvale Dr #205, Markham, On L3S 4N8

# நிஜ முகம் காட்டும் "வேடதாரிகள்"

""தேசிய மக்கள் சக்தி என்ற மிதவாத முகமூடியுடன் மக்கள் முன் தோன்றி ஆட்சியை கைப்பற்றியவர்கள் இன்று அந்த ஆட்சியை தக்க வைக்க, சிங்கள வாக்குவங்கியை பாதுகாக்க தமது முகமூடியை கழற்றி பழைய கடும்போக்குவாத,இனவாத ஜே .வி.பி.யினராக தமது ஆட்டத்தை தொடங்கியுள்ளனர்.இந்த ஆட்டம் ஜே .வி.பி.-என்.பி.பி.க்கிடையில் பிளவுகளையும் ஏற்படுத்தியுள்ளது.
(தொடர்ச்சி 19ம் பக்கம்)